Volume: 02 | September - October 2013

# சமூக நோக்கு
## SOCIAL VISION

பதினாறு முஸ்லிம் எம்.பிக்கள்
அரசாங்கத்தில் அங்கம் வகித்தும்
புனித ரமழானில்
தடம் அழிக்கப்பட்டது
மகியங்கனை பள்ளிவாசல்








Grandpass Mosque

## முஸ்லிம் அரசியல் தலைமைகளின் சமூக, அரசியல் தோல்வி மீண்டும் நிருபணமாகும் தருணம்!

# ASE Accounts

*Absolutely Safe and Economical*

## A BROTHER NEXT TO YOU

* வெற்றிகரமானதும், நம்பிக்கையானதுமான கணக்காளர் நிறுவனம்
* வியாபார கணக்கினை மேற்கொள்வதற்கான ஆற்றல்மிகு பங்களிப்பு
* வாடிக்கையாளர்களின் முழு எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யும் அனுபவத்துடன் திருப்திகரமான சேவை

**We offer the following services:**

## Small companies and Individuals

- ✓ Sageline 50/Sage Payroll
- ✓ Retail Business Accounts
- ✓ Computerised bookkeeping
- ✓ Budgeting
- ✓ Property Accounts
- ✓ Year end procedures
- ✓ Taxi driver accounts
- ✓ Self-Assessment
- ✓ Company secretarial service
- ✓ Charity Accounts
- ✓ Corporation Tax
- ✓ Business/Marketing plan

## *KEEP AN EYE ON NATIONAL MINIMUM WAGE RATES*

**Karim Emthiyas**
**44 Douglas place, Oldbrook**
**Milton Keynes MK6 2XG**
**Tel: 01908 242 949**
**Fax: 01908242949**
**Mob: 07904472298**
**www.aseaccounts.co.uk**
**Email: info@aseaccounts.co.uk**

sage Accountants' Club

*GIVE A RING FOR A FIXED FEE RATE QUOTATION*

Registered in England and Wales Number 5858311

* நேர்காணல்:

  கலாநிதி - வி. அமீர்தீன்

  எங்களது சிந்தனைகள் மாற வேண்டும்

  மற்றவர்களின் மனங்களை வெல்ல வேண்டும்!

* மேற்கின் ஜனநாயகக் கோசமும் எகிப்தில் அரங்கேறும் முழு ஜனநாயக விரோதமும்

  - பி.எல்.எம். ரொஷன் (நளிமீ)

* பௌத்த அடிப்படைவாதத்துக்கு மத்தியில் - முஸ்லிம்கள் தரப்பில் செய்ய வேண்டியது என்ன?

  - ஜிஃப்ரி ஹாஸன்

* மலாலாவும், மறைக்கப்படும் உலகின் கவனமும்!

  - அத்தார்

* இலங்கை- மாற்றங்கள் நிகழ வேண்டிய தருணம்!

  - சுகு

* கோதபாய:

  பலமிக்க அதிகாரபீடமாகும் அரசியல்

  - பிஸ்மி

* யாருடன் நோவது? யாருக்கு எடுத்துரைப்பது?

  - எம். பௌசர்

* சிங்கள, தமிழ் மக்களுடனான உறவும், கைகோர்ப்பும்

  - சிறப்புக் கட்டுரை


* Muslim patriotism in Srilanka Part: ii

  - Dr Rifai

* தீவிரமடையும் முஸ்லிம்கள் மீதான அச்சுறுத்தல்கள்

  - ஆர்.எப். அஷ்ரப் அலி

* மற்றும் பலரின் கட்டுரைகள், எழுத்துக்கள்...




இந்த சித்திரம் நமது அனைத்து முஸ்லிம் தலைமைகளுக்கும் பொருந்தும் என்பதால் இங்கு எடுத்தாளப்படுகிறது.

# mns' LAW LLP

*we find a solution for you*

We deal with: -

- Immigration
- Conveyancing (commercial & Residential)
- Civil and family Matters
- Lanlord and Tenat
- Employement Law

**Contact:**

**Address:- 68 Ealing Road**
**Wembley**
**HA0 4TH**

**Tel: 020 8902 0083**
**Fax: 020 8903 7768**
**E-mail: mnslaw@btconnect.com**

DESIGNATED MEMBERS

Masilla R. Nisthar
(Principal)
BA (Hons) (Attorney-at-Law)
Solicitor

Mohamed S.R. Nisthar
BA (Hons) LLB (Hons)
Solicitor

Mobile No.: - Masilla R. Nisthar – 07986597909 & Mohamed S.R. Nisthar - 07940889270

This firm is Authorised and Regulated by Solicitors Regulation Authority.
SPA No: 00472100





# RJ TRAVELS & TOURS LTD

Worldwide Travel Agent

Departure: 07/10/2013* Return: 23/10/2013*
(* please note dates may vary by +/- 1 or 2 days)

## DELUXE GROUP 1
### 15 Day Package

Included in the package:

- Accommodation in Makkah staying in Al-Barakah Mawaddah hotel (10min walk)
- Accommodation in Madinah staying in Jawharat Al-Rasheed (5min walk)
- AC tents in Mina (mattresses, pillows and blankets provided)
- 3 times food in Makkah, Madinah & 5 days of Hajj
  (During the 5 days of Hajj, food will be provided by Mualim)
- Ziyarat in both holy cities (if applicable) • Hajj visa and Hajj draft • One qurbani per person
- Religious guides throughout Hajj
- All internal transport in A.C coaches provided by SaudiGovernment • Airfare

| Quint Room | Triple Room | Double Room |
|---|---|---|
| £3850 per person | £4400 per person | £4700 per person |

Complimentary:

- Free Ihram for men
- Free religious books
- Free 10Ltr Zam Zam Water
- Free laundry services in Makkah and Madinah
- Free leather Ihram money belt for men
- Religious seminars
- Free Saudi sim card per family

***(TERM AND CONDITIONS APPLY)***

*Contact:*
**Mr. RIZVI**
**Mob: 07904 585 646**

ATOL PROTECTED

**51 Ingleby Road,**
**Ilford, Essex, IG1 4RX,**
**United Kingdom.**
**Tel: 020 8215 4744**
**E-Mail: rizvi@rjtravels.co.uk**
**Web: www.rjtravels.co.uk**

# சமூக நோக்கு
SOCIAL VISION

**Volume 02 | September - October 2013**
(By Monthly)



Administrative Editor:
M. Fauzer

Associate Editors:
A. Wajith, M.A. Baazir

Board of Members:
Dr. Rifai (Naleemi),
Mustapha B. Zamaan
AM. Mohamed Ismail
M. Ilham
A.S. M. Aashiq
A.L. Nowzad



Address:
166 Plum Lane, London, SE18 3HF,
United Kingdom

Email: **samukanookku@gmail.com**
Web: **www.samukanookku.net**

Telephone: **0044 7817262980**



It is a community magazine
**Private circulation only**


**தனிப்பிரதி**
United Kingdom: **£3.00**
Europe: **€4.00**
US, Canada, Australia: **$6.00** USD
Middle East: **7.00** SA.Riyals

**சந்தா**
United Kingdom: **£10.00**
Europe: **€15.00**
US, Canada, Australia: **$25.00** USD
Middle East: **30.00** SA.Riyals

**3 Issues only** (Postal Charge Included)

The (Temporary) Bank Details:

Bank: Barclays (UK)
A/C Name: AHMNIYAS
A/C Number: 70950203
Sort Code: 20-71-06

www.samukanookku.net

இந்த இதழில், இன்று இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற அக, புற நெருக்கடிகள் பற்றிய எழுத்துக்களையும் கருத்துக்களையும், அவற்றை எதிர்கொள்வதற்கு அவசியமான சில முன்மொழிவுகளையும் தொகுத்து தந்திருக்கிறோம். அத்துடன் இலங்கையின் சமகால முழு நிலைமை பற்றிய பார்வைகளையும், சர்வதேச விவகாரங்களையும் பதிவு செய்திருக்கிறோம்.

அரசியல், சமூக நெருக்கடிகளை எதிர்கொள்கின்ற ஒரு சமூகம் முதலில் தனக்குள் நிலவுகின்ற அக நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளை கண்டடைவதும், வாசல்களை திறந்துவிட வேண்டியதுமான காலமிது. சுய விமர்சனம் பொதுத்தளங்களில் முன்வைக்கப்படுவது இங்கு முக்கியமானது. இந்த வேலை முறைமையின் ஊடாகவே நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான ஐக்கியத்தையும் உறுதியையும் எட்ட முடியும்.

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள், மாற்று முன்மொழிவுகளை எழுதுங்கள். முஸ்லிம் சமூகத்திற்குள்ளும், ஏனைய சமூகங்களுடனும் உரையாடுவதற்கான வாசல்களைத் திறப்போம்! இந்த இதழ் வெளிவர சகல வழிகளிலும் பங்களித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

அடுத்த இதழில் தொடர்வோம்...
**ஆசிரியர் குழு**

இச்சஞ்சிகை பல சகோதரர்களினதும் நண்பர்களினதும் ஒத்துழைப்புடன்தான் தொடர்ச்சியாக வெளிவருவது சாத்தியமானது. ஒரு இதழுக்கான அண்ணளவான நிதிச் செலவாக, £1200.00 செலவிடப்படுகிறது. தனிப்பட்ட உதவி, சந்தா, விளம்பரம் என உங்களினது முழு ஆதரவினை தாருங்கள். புலம்பெயர் நாடுகளில் நீங்கள் வாழும் பிரதேசத்தில் இதழை மக்களிடம் கொண்டு செல்லுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். இந்தக் கூட்டு வேலையில் உங்களது பொறுப்பை முன்வந்து எடுத்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

☐ ஆசிரியர் குழு



# யாருடன் நோவது? யாருக்கு எடுத்துரைப்பது?

எம். பௌசர்

☐ சமூக அகம்

**இன்றைய நிலையில் புறத்திலிருந்து வருகின்ற நெருக்கடி ஒரு புறமாகவும், அகச்சூழலும் அதன் நெருக்கடி நிலையென இன்னொரு புறமாகவும் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் இருப்பும் எதிர்காலமும் கேள்விக்குள்ளாகி உள்ளது.**

இந்த தலையங்கத்தை வாசிக்கின்றபோது ஒருவித சுயபச்சாதாபமும், தம்மையே நொந்து கொள்கின்ற கழிவிரக்க மனோநிலையும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். உண்மையில் இலங்கை முஸ்லிம் சமூகம் இந்த நிலையில்தான் உள்ளது. தம்மைச் சூழ நெருக்கடிகளும், அடக்கு முறைகளும் முன்னெப்போதுமில்லாத வகையில் அதிகரித்திருக்கின்றபோது அதனை எதிர்கொள்வது எப்படி? எந்த வழிமுறையின் ஊடாக சமூக பாதுகாப்பினை உருவாக்கிக் கொள்ளல், இந்த அச்சுறுத்தல் அடக்குமுறைகளை எதிர்கொள்வதற்கான மாற்று வழிகள் என்ன?, தலைமைகள் யார் என்பதை தெரிந்து கொள்ள முடியாத ஒரு இருண்ட மனோநிலையில் தான் இலங்கை முஸ்லிம் சமூகம் உள்ளது. அதற்கான காரணங்கள் அனைத்தும் நம் கண் முன்னேயே உள்ளன. கைப்புண்ணை மறைப்பதற்கு கண்ணாடி தேவையில்லை.

நமது அரசியல் தலைமைகள், மதத் தலைமைகள், சிவில் சமூகம், புலமையாளர்கள், கல்வியாளர்கள், புலம்பெயர்ந்து வாழும் முஸ்லிம் சமூகம் என்பன ஒருவித செயலிழந்த நிலைமையிலும், தேக்கமும், இருண்மையும் சூழவே இருக்கின்றன. தெளிவும், உறுதியும் எட்டப்படுவதற்கு பதிலாக மேலும் மேலும் குழப்பங்களும், முரண்பாடுகளும் நமது சமூக அகத்திற்குள் அதிகரித்துக் செல்கிறது. இந்த நிலைக்கான பெரும் பொறுப்பையும் ஒருசாரார் மீது சுமத்தி விட்டு, நாம் அதற்கு வெளியில் செயற்பாடு அற்றவர்களாகவோ வெறும் பார்வையாளர்களாகவோ இருக்க முடியாது. இந்தத் தோல்விக்கான முழுப்பொறுப்பின் ஒரு பகுதியைத் தானும் நாமும் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

இலங்கை முஸ்லிம் சமூகமானது அதனது கலாசார பண்பாட்டு அம்சங்கள் தொடக்கம் பொருளாதாரம், வாழ்நிலை இருப்பு, குடிப் பரம்பல், அரசியல் செயற்பாடு போன்ற தன்மைகளின் காரணமாக இலங்கைச் சூழலில் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம். இதனை இன்றைய இலங்கை நிலைமையுடன் மட்டுமல்ல, தென்னாசிய சமூக நெருக்கடிகளின் தொடர்ச்சியுடனும் சர்வதேச ரீதியாக முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சவால்களுடனும் இன்றைய நிலை தொடர்புடையது என்பது முக்கியமானது. இலங்கை முஸ்லிம்கள் எந்தப் பிரச்சினை, நெருக்கடியுமின்றி சகல சௌபாக்கியங்களும் வாய்க்கப் பெற்றவர்களாக வாழலாம் என நினைப்பது ஒரு கற்பிதமாகும். ஏற்படுகின்ற நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள்,

செயற்பாட்டு வேலைத் திட்டங்களை கொண்டிருக்க வேண்டும் என்பதே நமக்கு முன்னுள்ள முக்கிய இலக்காகவும் தேவையாகவும் இருக்க வேண்டும் என்பதே யதார்த்தமானது.

ஒவ்வொரு காலகட்ட சூழலிலும் ஏற்படுகின்ற பிரச்சினைகளில் உடனடியான உணர்ச்சி சார்ந்த எதிர்வினைகளை முன்வைப்பதும், உருப்படியான சமூக இருப்பு, பாதுகாப்பிற்கான எந்த வேலை முறைமை ஏற்பாடுகளையும் செய்யாது மேலும் மேலும் முரண்பாடுகளையும் சமூக சிக்கல்களையும் அதிகரிக்க செய்வதும் ஆரோக்கியமாகாது. இது நிலைமையை மேலும் சிக்கலடைவதற்கே வழிவகுக்கும். இந்த நிலையை மிகத் தாராளமாக நமது சமூக அரங்கில் காணலாம். இன்றைய நிலையில் புறத்திலிருந்து வருகின்ற நெருக்கடி ஒரு புறமாகவும், அகச்சூழலும் அதன் நெருக்கடி நிலையென இன்னொரு புறமாகவும் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் இருப்பும் எதிர்காலமும் கேள்விகுள்ளாகி உள்ளது. எல்லோரும் மிக முக்கியத்துவப் படுத்தி, புறநெருக்கடிகளையே பேசிக்கொண்டிருக்கிறோம். சமூக அகநெருக்கடிகள் தொடர்பான சரியான, அல்லது அதற்கு கிட்டிய மதிப்பீட்டிற்கு வருவதிலும், மாற்று செயற்திட்டத்தை வகுப்பதிலும் நாம் தொடர்ச்சியான தோல்விகளையும், பின்னடைவுகளையும் சந்தித்தே வருகிறோம். அந்த வகையில் இந்தக் கட்டுரை சமூக அகம் தொடர்பான சில விடயங்களை பேச விளைகின்றது.

இலங்கை அரசாங்கமும், அதன் போசிப்பில் வளர்க்கப்படுகின்ற சிங்கள இனவாத அமைப்புகளும், இலங்கை முஸ்லிம்களை மைய நீரோட்ட சமூக வாழ்விலிருந்து ஒதுக்குகின்ற வேலையை தெளிவான கருத்தியல் அடிப்படையிலும் ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத் திட்டத்துடனும் முன்னெடுத்து வருகிறது.



## பௌத்த அடிப்படைவாத அமைப்பின் அச்சுறுத்தலால் தடமழிக்கப்பட்ட மகியங்கனை பள்ளிவாசல்

ஜூலை 11, 2013 அன்று, மஹியங்கனை அரபா ஜும்ஆ மஸ்ஜித் காட்டுமிராண்டித்தனமான முறையில், இழிவுபடுத்தப்படுகின்றது. நோன்பு கால இரவுத் தொழுகையை (தராவீஹ்) நிறைவேற்றிய பின்னர், முஸ்லிம்கள் இரவு பத்து மணியளவில் வெளியேறி இருக்கின்றனர். இரவு 11:10 அளவில் பள்ளிவாசல் அமைந்திருக்கின்ற பகுதிக்கு மாத்திரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. சிறிது நேரத்தின் பின்னர் முகமூடி அணிந்த ஆறு நபர்கள் மோட்டார் சைக்கிள்களில் வருகை தந்துள்ளனர்.

பள்ளிவாசலின் முன்னால் நின்று கொண்டிருந்த பள்ளிவாசல் நிர்வாகி சீனி முஹம்மத் மீது, இவர்கள் மிளகாய்த்தூளை வீசித் தாக்கியுள்ளனர். பிறகு கற்களை வீசி பள்ளியின் முன் கதவை உடைக்க முற்பட்டுள்ளனர். கதவை உடைக்க முடியாமல் போனதால், ஜன்னல்களை உடைத்து, பள்ளியினுள் புகுந்துள்ளனர். இறந்த பன்றியொன்றின் தலை, இரத்தம், கால், சுவாசப்பை முதலான உறுப்புக்களை பள்ளி முழுதும் வீசி எறிந்து, தமது முஸ்லிம் விரோத உணர்வை இவர்கள் தீர்த்துக் கொண்டார்கள். ஜூலை 19ம் நாள் இங்கு முஸ்லிம்கள் தொழுகையை நடத்த முயன்ற போது, ஊவா மாகாண அமைச்சர் அனுர விதானகமகே அங்கு தொழுகை நடத்த தடைவிதித்ததுடன், பள்ளிவாசலைப் பூட்டி சாவியை எடுத்துச் சென்றிருந்தார்.

நாற்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, காத்தான்குடியில் இருந்து இங்கு குடியேறிய வர்த்தகரும், ரன்முத்து கோல்ட் ஹவுஸ் உரிமையாளருமான சீனி முஹம்மத் என்பவருக்குச் சொந்தமான காணியிலேயே இப்பள்ளிவாசல் அமைந்துள்ளது. 1991 முதல் இப்பள்ளிவாசல் இயங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. கடந்த சில மாதங்களாகவே வெள்ளிக் கிழமை ஜும்ஆ தொழுகையை நிறுத்துமாறும், பள்ளிவாசலை அவ்விடத்தில் இருந்து அகற்றி விடுமாறும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. மஹியங்கனை பள்ளிவாசலில் 150க்கும் மேற்பட்டோர் தொழுகையை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். அந்நகரில் 50க்கும் அதிகமான முஸ்லிம்கள் வர்த்தகம் செய்து வருகிறார்கள். பல முஸ்லிம் குடும்பங்கள் அங்கு வாழ்ந்து வருகிறது. இறுதியில் அங்கு அப்படியொரு பள்ளிவாசலே இருக்கவில்லையென கதை எழுதப்பட்டு, அப்பள்ளிவாசல் தடமழிக்கப் பட்டுவிட்டது.

இன்றைய அரசுத் தலைமையானது முஸ்லிம்களை பாதுகாக்கும் என எண்ணுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. இதற்குப் பதிலாக அரசாங்கமானது முஸ்லிம்கள் மீதான நெருக்கடிகள் ஏற்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அதற்கான காரணங்களை நியாயப்படுத்தும் போக்கையே தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

மகியங்கனை, கிராண்ட்பாஸ், ஜெய்லானி, அனுராதபுரம் பள்ளிவாசல்களை அகற்றியதில் தொடங்கி, தம்புள்ளை பள்ளி வாசலையும் அகற்றுவதில் அரசாங்கம் உறுதியாகவே இருக்கிறது. இலங்கையில் மிக அண்மைக் காலத்தில் 24 பள்ளிவாசல்கள், மதரசாக்கள் தாக்கப்பட்டுள்ளன. இந்த தாக்குதல்களுக்கு காரணமான எவரையும் இலங்கை அரசு இதுவரை கைது செய்யவும் இல்லை, அவர்கள் மீது எந்த சட்டநடவடிக்கையும் எடுக்கவுமில்லை. சட்டக் கல்லூரிக்கு அதிக முஸ்லிம்கள் தெரிவு செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சட்டக் கல்லூரி வளாகத்திற்குள் சென்றே தாக்குதல் நடத்தப்பட்டது. முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் தாக்கப்படுகின்றன. கலாசார பண்பாட்டு அடையாளங்களை பேணுகின்ற போது அவ்வடையாளங்களும், மக்களும் இழிவுக்குட் படுத்தப்படுகிறார்கள். சட்டம், ஒழுங்குக்குப் பொறுப்பான பொலிசும், பாதுகாப்பு படையும் இச் செயற்பாடுகளை கை கட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மட்டும் தாக்கப்படவில்லை. அதனைச் சூழ இருந்த 30க்கும் மேற்பட்ட முஸ்லிம் வீடுகள் தாக்கப்பட்டும், கொள்ளையிடப்பட்டும் பெண்கள், குழந்தைகளுக்கு எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

மகியங்கனை பள்ளிவாசல் சட்டரீதியாக பதிவு செய்யப் பட்டிருக்கவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டாக முன்வைக்கப் படுகிறது. இதனை நியாயப்படுத்திய ஓரிரு முஸ்லிம்களையும் என்னால் தொடர்பு கொள்ள முடிந்தது.

## தற்போதய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் - 18

ஆளும் கட்சியில் இருப்போர் - 16



**ஏ.எல்.எம். அதாஉல்லா, பா.உ.,**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
அமைச்சு: உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்
தேர்தல் தொகுதி: திகாமடுல்ல (தே.கா)



**ஏ.ஆர்.எம். அப்துல் காதர், பா.உ.,**
ஐக்கிய தேசிய கட்சி
அமைச்சு: சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்
தேர்தல் தொகுதி: மகநுவர



**எம்.ரி. ஹஸன் அலி, பா.உ.,**
ஐக்கிய தேசிய கட்சி
தேர்தல் தொகுதி: தேசியப்பட்டியல் (மு.கா)



**மொஹமட் அஸ்லம், பா.உ.,**
ஐக்கிய தேசிய கட்சி
தேர்தல் தொகுதி: தேசியப் பட்டியல் (மு.கா)



**ஏ.எச்.எம். அஸ்வர், பா.உ.,**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
தேர்தல் தொகுதி: தேசியப் பட்டியல்




**பசீர் சேகு தாவூத், பா.உ.,**
ஐக்கிய தேசிய கட்சி
அமைச்சு: உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சர்
தேர்தல் தொகுதி: மட்டக்களப்பு (மு.கா)



**எம்.எஸ். தௌபீக், பா.உ.,**
ஐக்கிய தேசிய கட்சி
தேர்தல் தொகுதி: திருகோணமலை (மு.கா)



**றிஸாட் பதியுதீன், பா.உ.,**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
அமைச்சு கைத்தொழில், வாணிப அமைச்சர்
தேர்தல் தொகுதி: வன்னி (அ.இ.ம.க)



**ஹுனைஸ் பாறூக், பா.உ.,**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
தேர்தல் தொகுதி: வன்னி (அ.இ.ம.க)



**எம்.பீ. பாறூக், பா.உ.,**
ஐக்கிய தேசிய கட்சி
தேர்தல் தொகுதி: வன்னி (மு.கா)



**ஏ.எச்.எம். பௌஸி, பா.உ.,**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
அமைச்சு: நகர அலுவல்கள் அமைச்சர்
தேர்தல் தொகுதி: கொழும்பு



**பைஸர் முஸ்தபா, பா.உ.,**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
அமைச்சு: முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர்
தேர்தல் தொகுதி: மகநுவர



**பைசல் காசிம், பா.உ.**
ஐக்கிய தேசிய கட்சி
தேர்தல் தொகுதி: திகாமடுல்ல (மு.கா)



**ரஊப் ஹக்கீம், பா.உ**
ஐக்கிய தேசிய கட்சி
அமைச்சு நீதி அமைச்சர்
தேர்தல் தொகுதி: கண்டி (மு.கா)



**எச்.எம்.எம். ஹாரீஸ் பா.உ.,**
ஐக்கிய தேசிய கட்சி (விவிவிசி)
தேர்தல் தொகுதி: திகாமடுல்ல (மு.கா)



**எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பா.உ.**
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
அமைச்சு: பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்
தேர்தல் தொகுதி: மட்டக்களப்பு

எதிர்க்கட்சியில் இருப்போர். 02



**அப்துல் ஹலீம் பா.உ**
ஐக்கிய தேசிய கட்சி
தேர்தல் தொகுதி - மகநுவர



**கபீர் ஹாசிம் பா.உ**
ஐக்கிய தேசிய கட்சி
தேர்தல் தொகுதி - கேகாலை

சட்டரீதியாக அமைக்கப் பெறாத பள்ளிவாசலை அகற்ற வேண்டுமென்றால் அதற்கான சட்ட ஏற்பாடுகளுடன் அந்த விடயத்தினை கையாண்டு இருக்க முடியும். ஏன் அப்படிச் செய்யப் படவில்லை? இலங்கையில் சட்ட ஒழுங்கினை யார் கையில் எடுத்துள்ளார்கள்? 21 வருடங்களாக அங்கு கூட்டாக ஐவேளைத் தொழுகை, ஜும்மா நடந்து வரவில்லையா? சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டு பல ஆண்டுகளாக தொன்மையுடன் இயங்கி வருகின்ற, வந்த தம்புள்ளை, அனுராதபுரம், ஜெய்லானி, கிராண்ட்பாஸ் பள்ளிவாசல்கள் மீது ஏன் இப்படியான அடாத்தான நிகழ்வுகள் நடந்தன? என்கிற கேள்விக்கு அவர்களிடமிருந்து பதில் இல்லை. நான் ஏன் இதனைச் சொல்கிறேன் என்றால், முஸ்லிம் சமூகத்திற்குள் இருக்கும் கணிசமான பிரிவினரிடமும் நடக்கின்ற நிகழ்வுகளையிட்டு சரியான பார்வையும் புரிதலும் இன்னும் இல்லை. சிலர் இந்த விடயங்களை சமூக இருப்பை, வாழ்நிலையை அச்சுறுத்துகின்ற விடயமாக பார்க்கவில்லை. இது அவர்களின் தவறு அன்று.

ஏனெனில் இலங்கை முஸ்லிம் சமூகம் ஒரு வளர்ச்சியடைந்த அரசியல் சமூகம் அன்று. முஸ்லிம்களுக்குள் இருக்கின்ற அரசியல் கட்சிகள் என்று சொல்லப்படுபவை வாக்கு வங்கியை முன்னிறுத்தி, புள்ளடியை மாத்திரம் எதிர்பார்த்து அரசியல் செய்யும் அரசியல் கட்சிகளாக இருக்கிறபடியால், தமது கட்சிக்கு மக்கள் ஏன் வாக்களிக்க வேண்டும் என்பதையே அரசியல் வேலையாக செய்து வந்திருக்கின்றன, வருகின்றன. அரசியல், சமூக மயப்படுத்தலுக்கான எந்த முன் தயாரிப்பும் இல்லை. மத நிறுவனங்கள் சடங்கு முறையான வேலைகளிலும், கலாசார பண்பாட்டு உருவாக்கத்திலும், இயக்கப் பிரிவுகள் சார்ந்த வாதவிவாதங்களிலும் ஈடுபட்டு வருகின்றன. அரசியல் சிந்தனை, செயற்பாடு ஒருவித மதவிரோத பார்வையாக இவர்களுக்கு இருக்கிறது. சமூக அகத்திற்குள் இன்றைய அனைத்து நிலைகளும் தொடர்பான உரையாடலையும், கருத்து பகிர்வையும் ஏற்படுத்துவதற்கான ஆழமான வேலைத் திட்டங்கள் இல்லை. முஸ்லிம் பத்திரிகைகள் என்பது நாளாந்த நிகழ்வுகளையும், அரசியல்வாதிகள், சமூக, சமயப் பிரதிநிதிகளின் அறிக்கைகளையும் தாங்கி நிரம்பி வழிகிறது. சார்பு அல்லது எதிர்க் கருத்துகளுக்குள்ளும் விமர்சனக் கதையாடல் என்கிற பெயரில் எதிரிகளை உற்பத்தி செய்கின்ற தனிமனித காழ்புணர்வுகளுக்கும், இயக்கவாத குறுங்குழுவாதத்திற்குமிடையே சமூகம் சிக்கித் திணறுகிறது. விசயங்களை நன்கு புரிந்தவர்கள், சமூகப் பொறுப்பு சாட்டப்பட்டவர்கள் தமது பொறுப்பிலிருந்து ஒதுங்கி நிற்கின்றனர். நெருக்கடிகளை எதிர்கொள்ள வழி இல்லை. ஆனால் இலங்கை முஸ்லிம்களுக்குள் கட்சிகளுக்கும், சமய நிறுவனங்களுக்கும் இயக்க வேறுபாடுகளுக்கும், கருத்து மோதல்களுக்கும் குறைச்சலில்லை. இலங்கை முஸ்லிம் சமூகத்தின் அகநிலை இப்படியாக இருக்கின்றது.

## முஸ்லிம் அரசியல் தலைமைகள்

முஸ்லிம் சமூகத்தின் சமூக அடையாளம் தாங்கிய கட்சிகள் பல இன்று உள்ளன. இக்கட்சிகளுடன் ஆளும் கட்சி, எதிர்க்கட்சியிலும் முஸ்லிம்கள் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். மக்களுக்காக கட்சி இல்லை. தமது பதவிகளுக்கும், கட்சிகளுக்குமாகவே மக்கள் என்பதே பெரும்பாலான முஸ்லிம் அரசியல் தலைவர்களின், அரசியல் பிரதிநிதிகளின் பார்வையாக இருக்கிறது. முஸ்லிம் அரசியல் வாக்கு வங்கியை மையப்படுத்திய அரசியலாக இருப்பதால், தமது கட்சியையும், தமது அதிகாரத்தையும் காப்பதும், அதனூடாக வருகின்ற வளங்களை பெருக்கி கொழுப்பதனையும் அடிப்படையாக வைத்தே இன்று சார்பு/ எதிர்நிலை குரலை ஓங்கி ஒலிப்பது அல்லது மௌனமாக இருப்பது நடக்கிறது.

இன்றைய ஆளும் அரசாங்கத்திற்கு என்றுமில்லாதவாறு முஸ்லிம் சமூக பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகமாக ஆதரவளிக்கின்றனர். மொத்த 18 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களில் 16 பேர் அரசாங்கத்திலேயே அங்கம் வகிக்கின்றனர். இருவர் மட்டுமே எதிர்க்கட்சியில் உள்ளனர். முஸ்லிம் அரசியல் தலைமைகள் என்று சொல்பவர்களும், அமைச்சர், பிரதியமைச்சர் என்று சொல்பவர்களும் அதிகமதிகமாக இருந்தும் இந்த அரசாங்கமும், அதன் கருத்தியல் கொள்கை சார்ந்த அமைப்புகளும் செய்கின்ற எந்தவித முஸ்லிம் விரோத செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்த முடியாதவர்களாக இவர்கள் உள்ளனர். அரசாங்கம் இந்த தனிமனிதர்களை திருப்திப்படுத்தவும், குரல்களை மௌனிக்கச் செய்யவும் அலங்காரமான அமைச்சு, பிரதியமைச்சர் பதவிகளை வழங்கினால் ஓடோடிச் சென்று ஏற்பதற்கு தயாராக இருக்கின்றனர். இந்த நிலைமைகள் எதனைக் காட்டுகின்றன? நமது மக்களின் உறுதியற்ற அரசியல் கருத்து நிலை அல்லது அரசியல் சிந்தனை, செயற்பாட்டு வறுமையையே காட்டுகிறது என நான் நம்புகிறேன். ஏனெனில் என்னதான் மக்கள் விரோத செயலை செய்தாலும், மக்கள் தம்மை ஏற்று ஒவ்வொரு தேர்தலிலும் தமக்கு வாக்களிப்பார்கள் என நம்புவதால்தான் இந்த நயவஞ்சகத் தனத்தை எவ்வித தயக்கமுமின்றி செய்ய துணிகின்றனர்.

புனித ரமழானில் மகியங்கணை, கிராண்ட்பாசில் அமைந்திருந்த இரண்டு பள்ளிவாசல்கள் தடமழிக்கப் பட்டுவிட்டது, ஆளும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற இந்த 16 முஸ்லிம் எம்.பி.க்களாலும் கூட்டாக ஜனாதிபதியை சந்திக்க முடியவில்லை, இவர்களால் ஜனாதிபதியை சந்திக்க வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இதுவரை எந்த பதிலும் ஜனாதிபதி தரப்பில் இருந்து வரவில்லை என இவர்களே ஊடகங்களுக்கு வாக்குமூலம் தருகிறார்கள். நடைபெறுகின்ற விடயங்களை முன்வைத்து

கூட்டாகவோ, கட்சிகளின் பெயர் தாங்கியோ அல்லது தனி நபர்களாகவோ ஒரு பிரேரணையைக் கூட பாராளுமன்றத்தில் இவர்களால் கொண்டுவர முடியவில்லை. பொதுமக்களை ஒன்றுதிரட்டி பாரிய அளவில் இல்லையென்றாலும் சிறு அளவிலாவது வெகுஜனப் போராட்டங்களை நடாத்த முடியவில்லை. மாறாக தன்னிச்சையாக முஸ்லிம்களுக்குள் எழுகின்ற வெகுமக்கள் உணர்வினை காயடித்து பலவீனப்படுத்துவதற்கே முன் நிற்கிறார்கள். அத்துடன் முஸ்லிம் மக்களுக்கு எதிரான விடயங்களையிட்டு குரல் தருகின்ற சிங்கள, தமிழ் முற்போக்கு சக்திகளின் எந்த செயற்பாடுகளுடனும் இப்பிரதிநிதிகளை இணைத்துப் பார்க்க முடியாதுள்ளது. ஒரு மாகாண சபைப் பிரதிநிதியோ, ஒரு பாராளுமன்ற பிரதிநிதியோ அடையாளத்திற்காகக்கூட தனது பதவியை தூக்கி வீசத் தயாராயில்லை. இந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கையாலாகத் தனமான அரசியல் தோல்வியை வரலாறு மீளவும் நிருபணம் செய்திருக்கிறது.

## மத நிறுவனங்கள் - இயக்கங்கள்

கடந்த நோன்பு பெருநாள் பிறை விவகாரமும், அதையொட்டி எழுந்த நிலைமைகளும் நமக்கு பல விடயங்களை சொல்லி இருக்கின்றன. ஹலால் விவகாரத்தின் பின் எழுந்த நிலைமை, இதனுடன் தொடர்புபட்டுள்ள அகப்பலவீனம், நாளாந்தம் ஆழப்படுகின்ற இயக்கவாத முரண்பாடுகள், இந்த அமைப்புகளை மட்டுமல்ல முழு சமூகத்தினையும் சிக்கலாக்கி வருகிறது. அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை இந்தியா புத்தகயாவில் அமைந்துள்ள பௌத்த மடாலயம் தாக்கப்பட்டபோது அதனைக் கண்டித்து கொழும்பிலிருந்து உடன் அறிக்கை விடுகிறது. ஆனால் இந்தத் தாக்குதலுக்கு முன்னும் பின்னும் நடந்த மகியங்கனை, கிராண்ட்பாஸ், அனுராதபுரம் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களையிட்டு ஆழ்ந்த மௌனத்தில் இருக்கிறது. ஆளும் குழுமத்துடன் திரைமறைவு உடன்பாடுகளுடன், இந்த அமைப்புகளில் பொறுப்பு வகிப்போர் தமது இருப்பை பாதுகாத்துக்கொள்ள மௌனம் காக்கின்றனர். உள்நாட்டு நிதிவருமானம், வெளிநாட்டு நிதிவருமானம் என்பவற்றினால் இலங்கையிலுள்ள முஸ்லிம் மத நிறுவனங்கள், அவற்றின் செயல்பாடுகள் நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படுகின்றன. முஸ்லிம்/இஸ்லாமியன் என்கிற அடையாளத்தைத் தாண்டி, தான் சார்ந்திருக்கின்ற மத இயக்கங்களால் அடையாளப் படுத்தப்படுகின்ற போக்குகள் அதிகரித்து வருகின்றன.மத, இயக்க அடையாள போட்டாபோட்டி சமூக ஐக்கியத்தையும், இருப்பையும் நாளுக்கு நாள் குலைத்து வருகிறது என்பது நிதர்சனமாகி உள்ளது.

## சிவில் சமூகம்

முஸ்லிம் சமூகத்திற்குள் உள்ள கணிசமான கல்விகற்ற பிரிவினர், பொருளாதார மேல்நிலையாக்கம்

### கிராண்பாஸ் தாக்குதல் முஸ்லிம்களை நேரடியாக அச்சப்படுத்தியுள்ளது.

மகியங்கனை பள்ளிவாசல் தாக்கப்பட்ட சில வாரங்களின் பின் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மட்டுமல்ல அதனை சூழ இருந்த முஸ்லிம் குடியிருப்புகளும் தாக்குதலுக்குள்ளாகி உள்ளது. இதுவரை கடும்போக்கு கும்பல் பெருமளவில் திரண்டு வந்து முஸ்லிம் மக்களின் குடியிருப்புகளை தாக்கியதில்லை, இப்போது அதுவும் நடந்து விட்டுள்ளது. 1915 இல் இடம்பெற்ற சிங்கள முஸ்லிம் இனக் கலவரத்தின் ஓராண்டை நினைவுகூறும் வகையில் முஸ்லிம்கள் மீது நாடு தழுவிய வகையில் தாக்குதல் நடவடிக்கை இடம்பெறலாம் என்கிற கதையை இச்சம்பவம் மேலும் அதிகரித்துள்ளது. பொலிசார் இத்தாக்குதலை தடுக்காது பார்த்துக் கொண்டிருந்த செயலினை அமைச்சர் ரிசாட் பதியுதீன் வீடியோ ஆதாரத்துடன் அம்பலப்படுத்தி உள்ளார்.

நோன்பு பெருநாளை கொண்டாடிய அடுத்த தினமே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. தொழுகை நடந்து கொண்டிருந்த போது பள்ளிக்குள்ளும் நுழைந்த இனவாதக் கும்பல் தொழுது கொண்டிருந்தவர்களையும் தாக்கியது, இத் தாக்குதலுக்கு அருகிலிருந்த விகாரையிலிருந்து மணியொலிக்க பட்டே ஆட்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆகஸ்ட் 11ம் திகதி புத்த சாசன அமைச்சில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இப்பள்ளிவாசலை கைவிட வேண்டுமென தீர்மானிக்கப் பட்டுள்ளது.






பெற்றோர், சமூக நிறுவனங்கள் இன்றைய நிலையின் அடக்குமுறை கூறுகளையிட்டும் அதன் பாதக தன்மை குறித்தும் பரந்துபட்ட விழிப்புணர்வையையும், அறிவூட்டலையும் செய்யாது இருக்கின்ற நிலை கணப்படுகிறது. இதுவரை முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளை தடுப்பதற்கான சட்டரீதியான எந்த தடுப்பு ஏற்பாடுகளையும் செய்யாமல் உள்ளனர். நீதிமன்றத்தை நாடாமல் இருப்பதும், இயலுமானதைக் கூட செய்வதில் அக்கறை காட்டாமல் இருப்பதும், கேள்விகளை எழுப்புகிறது. இந்த நிலைமைகளை மாற்றுவதற்கான முதலில் சிந்தனை, திட்டமிடல் பிறகு செயற்பாட்டிற்கே நாம் உடனடி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என நம்புகிறேன். தேசிய சூறா கவுன்சிலை அமைப்பதில் எதிர்கொள்கின்ற சிக்கல்களும், பின் தாமதங்களுக்கும் காரணமாக இருப்பதில் மேற்சொன்ன பல விடயங்கள் தாக்கம் செலுத்துகின்றன.

## புலம்பெயர் சமூகம்

எந்த அரசியல் பார்வையும் இன்றி, இலங்கை தூதுவராலயம் ஏற்பாடு செய்கின்ற இப்தார் நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றனர். இலங்கைத் தூதுவராலயத்தில் இருந்து இப்தார் நிகழ்விற்கு அழைப்பு வந்துள்ளதை பெருமையாக சொல்லிக் கொள்கின்றனர். மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறுகின்ற விடயங்களையிட்டு தமது அக்கறையையும் செயற்பாடுகளையும் சார்பாகவோ எதிராகவோ செய்வோர், பேசுவோர், வெகுஜன வேலைத் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோர் இலங்கை முஸ்லிம்கள் விடயத்தில் மௌனமாகவும், அரைகுறை தூக்கத்திலும் உள்ளனர். தமது சொந்த வாழ்வு தாண்டி பொது விடயமாக இங்கு பள்ளிவாசல்கள் கட்டுவதிலும், மார்க்க சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்வதிலும், இயக்க ரீதியாக வேலை செய்வதிலும் காட்டும் அக்கறையுடன் சேர்த்து தமது தாய்நாட்டு சொந்த மக்களின் இன்றைய நிலை தொடர்பாக அம் மக்களுக்கு தமது ஒருமைப்பாட்டைக்கூட வெளிப்படுத்த பெருமளவிலானோர் தயாரற்றவர்களாக இருப்பதனை காண முடிகிறது.

முஸ்லிம்களுக்கு எதிரான நிலைமையினை சர்வதேச மயப்படுத்துவதும், இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தத்தினை கொடுக்கும் அரசியல், சமூக வேலைத் திட்டத்தினை புலம்பெயர் இலங்கை முஸ்லிம் பிரிவினரே முன்னெடுக்க வேண்டியுள்ளது. இவை நடக்காமல் இருப்பதற்கு அரசியல் ரீதியான தெளிவு இல்லாமையும், ஈடுபாடு இல்லாமையும் பிரதான காரணமாக இருக்கிறது. புலம்பெயர்ந்து வாழும் இலங்கை முஸ்லிம்கள் இதுவரை அங்கு நிகழ்ந்து வருகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான எந்த நடவடிக்கைக்கும் (கையொப்பங்களை திரட்டி இலங்கை, தூதுவராலயத்திற்கு கொடுப்பதனை தவிர) ஒரு சிறு எதிர்ப்பைக் கூட பதிவு செய்ய முன்வராதது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

சமூக அகம் தொடர்பான எனது இந்த சிறு குறிப்புகள் யாரையும், எந்த அமைப்பையும் குற்றம்சாட்டும் நோக்கில் எழுதப்பட்டதல்ல. (சமூக ஆய்வு நோக்கில் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயதானம் இது) இன்றைய நிலையில் எனது பொறுப்பு என்ன? என்கிற என் நோக்கிய கேள்வியில் நான் கண்ட விடயங்களே இவை. எனது பார்வையில் உள்ள குறைபாடுகளை செம்மையூட்டுவதும், ஆழப்படுத்தி மேல் நோக்கி செல்வதும் பொறுப்பானவர்களின் பணியாகும். ▣





# கோதபாய: பலமிக்க அதிகார பீடமாகும் அரசியல்!

பிஸ்மி

அண்மைக் காலமாக இலங்கையை அச்சுறுத்தி வருகின்ற பௌத்த சிங்கள மேலாதிக்கம், அதிகாரத்துவச் செருக்கு, அரச பயங்கரவாதம் நிறைந்த குடும்ப ஆட்சி முறையானது, இலங்கை முஸ்லிம் சமூகத்தை மாத்திரமல்ல, முழு இலங்கைச் சமூகத்தையுமே ஒரு மோசமான அழிவிற்கு இட்டுச் செல்லப் போகின்றது என்பதில் சந்தேகமில்லை. இந்த அழிவுபற்றி பலரும் உணர்கின்ற போதிலும் இப்போக்கின் உருவாக்கம், அதன் வளர்ச்சி, எப்படி இப்போக்கினைத் தடுத்து நிறுத்துவது என்பது பற்றிய ஆய்வும் தெளிவும் அரசியல் சக்திகளிடம் போதாமலிருப்பதும், காத்திரமான செயற்பாடுகள் இல்லாதிருப்பதும் இன்றைய இலங்கை அரசியலில் மிகப்பெரும் குறைபாடாகும்.

போருக்குப் பிந்திய இலங்கையில் தற்போது ஆட்சி செலுத்தி வருகின்ற அரசியல் சித்தாந்தம் எவரும் கருதுவது போல மகிந்த சிந்தனை அல்ல, மாறாக கோதபாய சிந்தனையும் சித்தாந்தமும் என்ற நிலைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் தற்போதைய அரசாட்சி முறைமையை இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

கோதபாய இராசபக்ச பலம்பொருந்திய ஒரு பாதுகாப்புச் செயலர் என்ற ஒரு தோற்றப்பாடு காணப்படுகின்ற போதிலும் உண்மையில் அவரது அரசியல் அடித்தளம் மிகவும் பலவீனமாகவே உள்ளது. இது எல்லோரையும் விட அவருக்குத் தெளிவாகத் தெரியும். இதனால் அவர் தன்னைப் பலம் பொருந்திய ஒரு அரசியல் சக்தியாக மாற்றிக்கொள்ள மிகவும் அவசர அவசரமாக பல்வேறு செயற்பாடுகளை ஒரே சமயத்தில் முன்னெடுத்து வருகின்றார். இவ்வாறாக கோதபாயவின் அரசியல் அடித்தளம் பலவீனமாக இருப்பதன் காரணமாகவே அவருக்கு ஒரு சக்தி மிக்க சித்தாந்த பலமும், பலமான அரச இயந்திரமும் (வன்முறை மற்றும் வன்முறையற்ற இரண்டு வகை அரச இயந்திரமும்) தேவைப்படுகின்றது.

தனது குறுகிய அரசியல் மேலாதிக்க இலக்கினை அடைந்து கொள்ள அவர் பௌத்த சிங்கள மேலாதிக்க சித்தாந்தத்தையும் பலம் பொருந்திய அரச இயந்திரமாக அரசபடைகளையும் மிகவும் தீவிரமாகச் சார்ந்து நிற்கின்றார். இவ்விரண்டையும் தனக்கு அக்கம் பக்கமாக வைத்துக் கொண்டு, 'பௌத்த சிங்கள பல வேகய' எனப்படும் 'பௌத்த சிங்க சக்தியை' ஒரு பீதி நிலைக்குள்ளும் ஒரு தாழ்வுச் சிக்கல் நிலைக்குள்ளும் வைத்துக் கொள்வது அவரது உபாயமாகும். பௌத்த சிங்கள மக்களைச் சூழ பல்வேறு எதிரிகளை அவர் வலிந்து உருவகிக்கின்றார். பலமான இராணுவ, பொலிஸ் பிரசன்னம் மாத்திரமே நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு, ஒரு 'சமாதான' சூழலை நாட்டில் உறுதிப்படுத்தும் எனவும் தான் மாத்திரமே பௌத்த சிங்கள மக்களை அதன் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கக் கூடியவர் என்ற மாயையையும் உருவாக்க முயன்று வருகின்றார். (டெய்லி மிரருக்கு வழங்கிய அவரது பேட்டியைப் பார்க்கவும்) இதற்கென புதிய புதிய உத்திகளையும் காலத்திற்குக் காலம் கையாண்டு வருகின்றார். கிறிஸ்மனிதப் பீதி, பொதுபல சேனவின் பௌத்த தூய்மைவாதம், 'புலம்பெயர் புலிப் பயங்கரம்' மற்றும் சர்வதேச சதி போன்றவை இவற்றில் பிரதானமானவையாகும். மேற்படி நிகழ்ச்சி நிரலை முன்கொண்டு செல்வதற்கு பல்வேறு வலைப்பின்னல் அமைப்புகளை உருவாக்கி அவர் பின்னின்று இயக்குகின்றார். இந்த வலைப்பின்னல் அமைப்புகளில் முன்னாள், பின்னாள் விடுதலைப் புலித் தலைவர்களும் ஒரு கூறாக இருந்து செயற்படுவது பரகசியம்.

இவ்வாறான ஒரு நிலையில்தான் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையும் பிற்காலத்தில் இருந்து வந்தது என்ற ஒப்பீடு இங்கு முக்கியமாகின்றது. விடுதலைப்புலிகள் அமைப்பும் அதன் பிந்திய காலத்தில் ஒரு பலமான அமைப்பாக தோற்றமளித்த போதிலும் அது பலவீனமாகவே இருந்து வந்துள்ளது. எனவேதான் படைக்கருவிகளும் நிதிவளங்களும் கொண்ட ஒரு பலமான ஆயுதப்பிரிவினை உருவாக்குதிலும் அதனைத் திருப்திப் படுத்துவதிலும் மாத்திரம் அத்தலைமையின் முழுக்கவனமும் மையங் கொண்டிருந்தது. மேலும், தமிழ் மக்களை பயபீதியில் வைத்து, அவர்களை எப்போதும்

தம்மில் தங்கியிருக்கச் செய்ய, அவர்களைச் சூழ எதிரிகளை உருவகித்தனர். சிங்களவர் வெளியிலிருந்தும் முஸ்லிம்கள் உள்ளிருந்தும் தமிழ் சமூகத்தை ஒட்டுமொத்தமாக அழித்தொழிப்புச் செய்து வருகின்றனர் என்ற பயபீதியை உருவாக்கும் ஒரு சித்தாந்தத்தை உருவாக்கிப் பரப்பியதுடன், பண்டைத் தமிழர் ஆட்சி பற்றிய பெருமிதத்தையும் புத்தாக்கம் செய்து விற்பனை செய்தும் வந்தனர்.

மீண்டும் இன்றைய இலங்கை அரசியலுக்கு வருவோம். 'மகிந்த சிந்தனை' என்ற அரசியல் விஞ்ஞாபனம் முற்றிலும் அவருக்குச் சொந்தமானதல்ல என்பதும் அந்த அரசியல் ஆவணத்தின் பெரும் பகுதி மக்கள் விடுதலை முன்னணியின் சிந்தனைகள் என்பதும், மற்றுமொரு பகுதி ஜாதிக ஹெல உறுமய அமைப்பினுடைய சிந்தனைகள் என்பதும் அனைவரும் அறிந்ததே. எஞ்சிய பகுதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இடது-வலது அரசியல் சித்தாந்தக் கதம்பம் என்பதையும் நாமறிவோம்.

யுத்தத்தில் விடுதலைப் புலிகளை முற்றாக முறியடிப்பது என்ற நிகழ்ச்சி நிரலில் மேற்குலகும், பிராந்திய ஆதிக்க அரசுகளான இந்திய, சீன அதனுடன் கைகோர்த்து பாகிஸ்தான் அரசுகளும் 2005 இல் உடன்பாட்டுக்கு வந்தன. புலிகளை ஒழித்தல் என்ற இந்தக் குறிக்கோளினை அடைவதற்கு உள்நாட்டிலுள்ள சமூக சக்திகளை பலமாக ஒன்றிணைக்கக் கூடிய ஒரு அரசியல் தலைமை மகிந்த குழுமம் என்று அடையாளங் காணப்பட்டது. இதற்கேற்ப மகிந்தவை முன்னிறுத்தி 2005 இல் ஒரு பலமான அணிச்சேர்க்கை உருவாக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் தம்மைச் சுற்றி பெருமளவு எதிரிகளை மாத்திரமே கடந்த காலத்தில் உருவாக்கியிருந்தமை மகிந்த ஆளுங் குழுமம் இந்த போர்க்கால அணிச்சேர்க்கை உருவாக்குவதை இலகுவாக்கியது. போரின் முடிவினை உள்நாட்டு - சர்வதேச அணிச்சேர்க்கை விரைவுபடுத்தியது. விளைவு 2006 மாவிலாறு தொடக்கமும் 2009 மே 18 முடிவும் ஆகும்.

யுத்த வெற்றியின் பின்னர் கோதபாய சிந்தனை உருப்பெறத் தொடங்கியதுடன், மகிந்த சிந்தனை வலுவிழக்கத் தொடங்கியது. இறுதிக்கட்டப் போருக்கு முன்னர் மகிந்த முன்வைத்த அரசியல் வாக்குறுதிகள் அனைத்தையும் (அரசியல் யாப்பினை ஜனநாயக மயப்படுத்தல், நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு மற்றும் புதியவகை அதிகாரப்பகிர்வு உட்பட) கைவிடுமாறு கட்டாயப் படுத்தப்பட்டார். புதிய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் ஜேவிபி வெளியேற்றப்பட்டது. ஜாதிக ஹெல உறுமய அமைப்பானது, தானே யுத்த வெற்றியின் சூத்திரதாரி என்ற பிரமையை உருவாக்கித் தனிவழி செல்ல முயன்றது. இவ்வமைப்பும் கூட கோதபாய சிந்தனையினால் ஓரங்கட்டப்பட்டு வருகின்றது. யுத்தவெற்றியும் அரசபடைகளுக்கான முக்கியத்துவமும் தேசத்தின் மகுடம் என்ற நிகழ்ச்சி நிரலின் மூலமாக வருடாவருடம் புத்துயிர்ப்புச் செய்யப்பட்டு வருகின்றன. மெய்யான நல்லிணக்க முயற்சிகளுக்குப் பதிலாக தமிழ் மக்களின் மனங்களை மேலும் மேலும் காயப்படுத்தி அவர்களை ஆத்திரமூட்டி எதிர்வினைச் செயற்பாட்டுக்குத் தள்ளுவதே கோதபாய சிந்தனையின் உள்ளார்ந்த நோக்கமாகும். இதுவே அவர்களின் விருப்பமும் ஆகும். ஒட்டுமொத்த தமிழ் சமூகம் பௌத்த சிங்கள பலவேகயவிற்கு எதிராக நிற்கின்றது என்ற தோற்றப்பாட்டினை ஏற்படுத்துவதில்தான் கோதபாய சிந்தனையின் அரசியல் இருப்பே தங்கியுள்ளது.



**இலங்கையிலுள்ள மூலை முடுக்குகள் எங்கும் சட்டபூர்வமாகவும் சட்டத்திற்கு விரோதமாகவும் விரல் விட்டு ஆட்டுகின்றவருக்கு இலங்கையே தனது சொத்தாக இருக்கும் போது தனக்கென இந் நாட்டில் சொந்தப் பெயரில் சொத்து எதற்கு**

இதுபோலவே பௌத்த சிங்கள சமூகத்திற்கு எதிராகவே முஸ்லிம்கள் செயற்படுகின்றனர். முன்னயது அரசியல் சதியில் ஈடுபட, பின்னயது பௌத்த சிங்கள சமய, காலாசாரத்திற்கும் அதன் பெரும்பான்மை எண்ணிக்கைப் பலத்திற்கு எதிரான ஆபத்தாக வளர்ந்து வருகின்றது. எனவே இந்த இரு சமூகங்களினதும் சதியனை முறியறிக்க பௌத்த சிங்கள சமூகம் எப்போதும் ஓரணி திரள வேண்டும். இதற்குப் பலமான இராணுவக் கட்டமைப்பு அவசியமாகும். எனவே தான் மாத்திரமே இதனை முறியடித்து பௌத்த சிங்கள சமூகத்தை பாதுகாக்கக் கூடிய ஒரே சக்தி என்பதுதான் கோதபாய சிந்தனையின் தாரக மந்திரமாகும்.

புலிச்சிந்தனையிலிருந்து கோதபாய கற்றுக் கொண்ட மற்றுமொரு பாடம். பலமான நிதி வலையமைப்பினைக் கொண்டிருப்பதாகும். அவர் தனது பேட்டியில் கூறுவது போல அவருக்கென சொந்தப் பேரில் வீடுகள் சொத்துகள் இல்லாதிருக்கக் கூடும். இலங்கையிலுள்ள மூலை முடுக்குகள் எங்கும் சட்டபூர்வமாகவும் சட்டத்திற்கு விரோதமாகவும் விரல் விட்டு ஆட்டுகின்றவருக்கு இலங்கையே தனது சொத்தாக இருக்கும் போது தனக்கென இந் நாட்டில் சொந்தப் பேரில் சொத்து எதற்கு என்பதுடன், கேபியின் தயவும் பினாமிகளும் சர்வதேச திருட்டு வங்கிகளும் எதற்கு இருக்கின்றன?. மக்களிடம் இருந்து பல்வேறு வழிகளில் மாதாந்தம் கப்பமாகப் பெற்றுக் கொள்ளும் நிதியிலிருந்து கொழும்பை கோதபயவின் கனவு நகராக்கவும் அரசியல் கோட்டையாக்கவும், அரசபடைகளுக்கான சுக போகங்களை மேம்படுத்தவும் பேணவும் முடிகின்ற போது, இலங்கையில் சொந்தப் பேரில் சொத்துக்கள் இல்லாதிருப்பது அவரது அரசியல் பிரசாரத்திற்கு ஒரு பிளஸ் பொயிட் மாத்திரமே. மேலாதிக்க மோகம் கொண்டோருக்கு சொந்த சொத்து

அவசியமில்லை. மாறாக அவர்களின் ஆதிக்கக் கனவினை நிறைவேற்றிக் கொள்ள ஒரு பலமான நிதிவலை அமைப்பு அவசியமாகின்றது. அது சட்டபூர்வமாகவும் சட்டபூர்வமில்லாமலும் இருக்க முடியும்.

போருக்குப் பிந்திய புதிய ஜனாதிபதி தேர்தலுக்கான வியூகத்தில் பொன்சேகா அணியினர் போர் வெற்றியை மாத்திரம் கவனத்தில் எடுத்தனர். தமிழ்க்கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் கொங்கிரஸ் உடன் அணி சேர்ந்தனர். பௌத்த சிங்கள மேலாதிக்க சித்தாந்தத்தின் சக்தியினைக் கவனிக்கத் தவறினர். கோதாபாய சிந்தனையானது யுத்தவெற்றியினையும் பௌத்த சிங்கள மேலாதிக்க சித்தாந்தத்தையும் மற்றும் சிங்கள தேசிய பெருமிதத்தையும் மிகவும் கச்சிதமாகவே ஒன்றிணைத்து இறுக்கமாக்கிக் கொண்டது. முடிவு கோதாபாய சிந்தனை பலமான வெற்றியைப் பெற்றது. கோதபாய சிந்தனையின் உபாயமார்க்கத்தின் விளைவாக மகிந்த மீண்டும் 2010 இல் ஜனாதிபதியானார். முன்னாள் இராணுவ தளபதி பொன்சேகாவை சிறையிட்டார். கோதபாய சிந்தனையை நடைமுறைப்படுத்தும் கட்டாயத்திற்கு மகிந்த உட்படுத்தப்பட்டார். அன்றைய மகிந்த அரசியலுக்கும் இன்றைய மகிந்த அரசியலுக்கும் இடையிலான ஆழமான இடைவெளியின் இரகசியம் இதுதான். மனித உரிமையின் பாதுகாவலனாக, உழைக்கும் வர்க்கங்களின் உரிமைக்குக் குரல் கொடுத்துப் போராடுபவராக, பாலஸ்தீனத்தின உரிமைகளுக்காக சர்வதேச அரங்கில் போராடுபவராக விளங்கிய மகிந்தவிற்கு இன்று நடந்துள்ளது இதுதான். இன்று கோதபாய சிந்தனையும் அரசியல் கனவும் மகிந்த சிந்தனையை திட்டவட்டமாகவே வெகு வேகமாகப் பிரதியீடு செய்து வருகின்றது.

இப்போது கோதபாய சிந்தனையின் அரசியல் திசைவழியைப் பரிசீலிப்போம். இலங்கையின் அரசியல் வரலாற்றில் கட்சி அரசியலுக்கு பலமான இடம் உள்ளது. அது வாக்காளர்களின் எண்ணிக்கைப் பலம் கொண்டு நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளது. இந்த வாக்காளர் பலத்தை நிர்ணயிக்கும் காரணிகளாக கட்சிப்பற்று, சாதியம், பிரதேசவாதம், குடும்ப ஆதிக்கம், தொழிற்சங்கம், இனத்துவம் இவற்றுடன் அவ்வப்போது தாக்கம் செலுத்தும் பொருளாதார மாற்றங்கள் கட்சி முறையின் கீழ் அரசாங்கம் அமைப்பதை நிர்ணயித்தது. இவ்வளவு தூரம் பௌத்த சிங்கள பலவேக தம்முடன் இருப்பதாகக் கூறிக்கொள்கின்ற ஒரு சூழலிலும் இன்னமும் ஐதேக-விற்கு ஒரு பலமான மக்கள் ஆதரவு இருந்து வருவது குறிப்பிடத்தக்க எதார்த்தமாகும்.

ஒரு படைத்துறை அதிகாரியாக இருந்து, இடையில் சிலகாலம் அமெரிக்காவில் குடியுரிமை பெற்று வாழ்ந்த கோதபாய விற்கு கட்சி அரசியல் முறையின் கீழ் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி, பாதுகாப்புச் செயலர் என்ற ஒரு அரச அதிகாரி நிலையில் இருந்து அதியுயர் அரசியல் தலைவராகுவதற்கான பலமான கட்சி அரசியல் அடித்தளம் எதுவும் இருக்கவில்லை. எனவேதான் அவரது அரசியல் அடித்தளம் பலவீனமாக உள்ளதென்ற வாதம் மேலே முன்வைக்கப்பட்டது. மேலும், கோதபாய உருவாக்க நினைக்கின்ற அரசியல்



அடித்தளத்தைப் பலவீனப்படுத்தும் புதிய அரசியல் சக்தியாக வண. மாதுலவ சோபித நாயக்க தேரர் அவர்கள் வளர்ந்து வருகின்றார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைதான் இந்நாட்டிற்கு ஒரு சாபக்கேடு. தன்னலம் கொண்ட ஒரு ஆதிக்கக் கும்பலைத்தவிர இப்போதும், இதற்கு முன்னரும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை எவருமே விரும்பவில்லை என்ற வலுவான பிரச்சாரத்துடன் துல்லியமான சான்றுகளை முன்வைத்து புதிய அணிச்சேர்க்கை ஒன்றினை உருவாக்கி வருகின்றார். இவ்வாறான அரசியல் பின்புலங்கள் கோதபாய சிந்தனையின் உள்ளச்சத்தினை அதிகரிக்கின்ற காரணிகளாக உள்ளன. எனவே அவர் தனக்கான ஒரு அரசியல் அடித்தளத்தினை உருவாக்க போருக்குப் பின் இரண்டு பிரதான சக்திகளை அவர் பயன்படுத்தி வருகின்றார். ஒன்று அரசின் வன்முறை அங்கமான படைத்துறை மற்றது பலமான பௌத்த சிங்கள மேலாதிக்க சித்தாந்தமும் அதன் பாதுகாவராக வரலாற்று ரீதியாகச் செயற்பட்டு வரும் பௌத்த சமயத்தலைவர்களின் கணிசமான தொகையினராகும்.

தனது செல்வாக்கிற்கு உட்பட்ட பட்டிதொட்டிகளில் இருந்தும், வடக்கு கிழக்கின் மூலைமுடுக்களில் இருந்தும் பௌத்த குருமார்களை மாதாந்தம், சில வேளைகளில் வாராந்தம் அரச செலவில் கொழும்பிற்கு அழைத்து, மிகவும் இரகசியமான வேறு பல இடங்களுக்கு அழைத்து கூட்டங்கள் நடாத்துவது அண்மையில் தெரியவந்துள்ளது. யுத்த வெற்றியில் தமக்கும் பங்கு வேண்டுமெனக் கோரும் அரசபடையினரின் கணிசமான தொகையினர், பௌத்த குருமார்கள், மற்றும் பௌத்த சிங்கள பாசிசப் பிரிவினரை உள்ளடக்கிய இரகசிய செல்களை அல்லது யுனிட்டுகளை உருவாக்கி தனது அரசியலுக்கான அடித்தளமாக இவர் மாற்றி வருகின்றார். இந்த பிராந்திய செல்களுடன் தலைநகரிலுள்ள பௌத்த குருமார்கள் என்ற ஒரு தீவிரமான பிரிவினரும் பௌத்த சிங்கள சமூகத்திலுள்ள புதிதாக வளர்ந்துவரும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த வர்த்தக மற்றும் படித்த பிரிவினரும் பல்வேறு சிங்கள ஆங்கில ஊடகங்களும் நெருக்கமாக செயற்படுகின்றன. இந்த புதிய வகை அணிசேர்க்கையைப் பயன்படுத்தி தனக்கான ஒரு அரசியல் அடித்தளத்தை கோதபாய உருவாக்க முயன்று வருகின்றார். இதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள மக்கள் ஆதரவு பெற்ற பழம்பெரும் தலைவர்களையும் கூட கோதபாய அணி படிப்படியாக களையெடுப்புச்

செய்து வருகின்றது. சுதந்திரக் கட்சியின் பழம்பெரும் அரசியல் தலைவர்களுக்கு மக்கள் மத்தியிலுள்ள அரசியல் செல்வாக்கினை தனது எதிர்கால அரசியல் திட்டங்களுக்கான அச்சுறுத்தல்களாகவே கோதபாய சிந்தனை எடுத்துக் கொண்டுள்ளது.

இலங்கை பூராவும் பரவி வாழ்கின்ற, கிழக்கு வடக்கில் நெருக்கமாக வாழ்கின்ற முஸ்லிம் சமூகம் அரசியல் ரீதியில்; கோதபாய சிந்தனைக்கு ஒரு அச்சுறுத்தலாகவே அமைகின்றது. ஒரு புறம் இவர்களை பௌத்த சிங்கள மக்களுக்கு எதிரிகளாகக் காட்டி பௌத்த சிங்கள பலவேக வை தன்னுடன் வைத்துக் கொள்வது, மறுபுறம் முஸ்லிம் சமூகத்தை அதன் மேலிருந்து கீழ் வரை எப்படி தனது வழிக்குக் கொண்டு வருவது என்பது கோதபாய சிந்தனையின் பிரதான நிகழ்ச்சி நிரல்களில் ஒன்றாகும்.

என்னதான் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் அவர்களுக்கு நெருக்கமான சக்திகளையும், கணிசமான சிவில் தலைமைகளையும் அச்சுறுத்தியோ, ஆசைகாட்டியோ, சலுகை வழங்கியோ தனது நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு வந்துள்ள போதிலும் பரந்துபட்ட முஸ்லிம் சமூகம் கோதபாய சிந்தனைக்கு உறுதியான அரசியல் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது. இறுதியாக அம்பாறையில் நடைபெற்ற தேசத்தின் மகுடம் எனப்படும் யுத்த வெற்றி விழாவினை எவரும் அழைப்பு விடுக்காமலே, முஸ்லிம் வெகுசனங்கள் முற்றாகவே பகிஷ்கரிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே முஸ்லிம்களை, அவர்களின் வாழ்வியல் மற்றும் குடிப்பரம்பல் தொடர்பில் கொண்டுள்ள பலவீனங்களைப் பயன்படுத்தி முழு முஸ்லிம் சமூகத்தையுமே அச்சுறுத்திப் பணியவைப்பது கோதபாய சிந்தனையின் பிரதான செயற்பாடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் கருத்தியல் மற்றும் பௌதிக செயற்பாடுகளையே நாம் இன்று கண்டு வருகின்றோம்.

இலங்கையின் வடக்கு கிழக்கு முஸ்லிம் சமூகம் அன்றைய புலிப்பயங்கரவாதத்தையும் விட அதி பயங்கரமாக, அரச இயந்திரத்தின் நேரடிப் போசிப்பில், இன்று வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்ற இப்படிப்பட்ட பௌத்த சிங்கள அரச பயங்கரவாத ஆபத்தில் இருந்து முஸ்லிம் சமூகமும் இலங்கையிலுள்ள இதர சிங்கள, தமிழ், மலையகத் தமிழ் சமூகங்களும் தம்மை விடுவித்துக் கொள்வதற்கு எப்படிப்பட்ட அரசியல், சமூக வியூகங்களை வகுக்க வேண்டும். எப்படிப்பட்ட அணிச் சேர்க்கைகளை உருவாக்க வேண்டும். எவ்வளவு கடினமாக உழைக்க வேண்டும் என்பதுதான் உடனடியாக விடை காண வேண்டிய பிரதான அரசியல் வினாக்களாகும். கோதபாய சிந்தனையின் ஆபத்தான வியூகத்தினை உடைக்கும் மாற்று வியூகம் உண்டா? இல்லையா? உண்டு என்பதுதான் நமது நிலைப்பாடு. ஆனால் அது பகிரங்கமாகப் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றல்ல என்பது மட்டும் உண்மை.

▣

## பிரிட்டிஷ் அரசின் தீர்மானம் நாடாளுமன்றத்தில் தோற்றுப்போனது

சிரியாவில் நடந்த ரசாயன தாக்குதலுக்கு பதிலடியாக, சிரியா மீதான ராணுவ நடவடிக்கையை தனியாகவே எடுக்க அமெரிக்கா தயாராக இருப்பதை குறிப்புணர்த்தும் விதமாக மற்ற நாடுகளின் அயலுறவுக் கொள்கைக்கு அமெரிக்கா பொறுப்பாக முடியாது என்று அமெரிக்காவின் ராஜாங்க அமைச்சர் ஜான் கெர்ரி கூறியிருக்கிறார். சிரியா மீதான ராணுவ நடவடிக்கைக்கு ஒப்புதல் கோரும் பிரிட்டிஷ் அரசின் தீர்மானம் பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் வியாழனன்று இரவு தோற்றுப்போன பின்னணியில், சிரியாவுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையின் அவசியத்தை வலியுறுத்திப் பேசும்போது ஜான் கெர்ரி இந்த கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டிஷ் அரசின் தீர்மானம் பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் தோற்றுப்போன செயலானது, உலக அரங்கில் தொடர்ந்தும் பிரிட்டன் முக்கிய பங்களிப்பை ஆற்ற விரும்புகிறதா என்கிற விவாதத்தை தோற்றுவித்திருப்பதாக பிரிட்டனின் நிதியமைச்சர் ஜார்ஜ் ஓஸ்போர்ன் தெரிவித்திருக்கிறார். அதேசமயம், இதனால் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான சிறப்பு உறவு பாதிக்கப்படாது என்றும் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு என்பது பழமையானது, ஆழமானது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## 13 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி

சிரியாவுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைக்கு ஒப்புதல் கோரும் பிரிட்டிஷ் அரசின் தீர்மானம் பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் வியாழனன்று இரவு நடந்த வாக்கெடுப்பில் 13 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.

ராணுவ நடவடிக்கைக்கு ஆதரவாக 272 வாக்குகளும் எதிராக 285 வாக்குகளும் அளிக்கப்பட்டன. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் இந்த முடிவை தாம் மதிப்பதாகவும் ஏற்பதாகவும் தெரிவித்திருக்கும் பிரிட்டனின் பிரதமர் டேவிட் கேமரன், இதன் மூலம், சிரியாவுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை பிரிட்டனின் நாடாளுமன்றமும் பிரிட்டிஷ் குடிமக்களும் விரும்பவில்லை என்பது தெளிவாக தெரியவந்திருப்பதாக கூறியிருக்கிறார்.

நாடாளுமன்றத்தின் இந்த வாக்கெடுப்பின் முடிவு காரணமாக, சிரியாவுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையில் பிரிட்டனின் பங்களிப்பு இருக்காது. கேமரன் தலைமையிலான தற்போதைய அரசு வாக்கெடுப்பில் தோற்றிருந்தாலும் பிரிட்டனின் நாடாளுமன்ற ஜனநாயகம் வெற்றி பெற்றிருக்கிறது என்று ஒருசாரார் வாதாடுகிறார்கள். அதேசமயம், பிரிட்டனின் வெளியுறவுக் கொள்கையை அரசுக்கு பதிலாக எதிர்க்கட்சியும், ஆளும் கட்சியின் அதிருப்தியாளர்களும் வடிவமைப்பதை இந்த வாக்கெடுப்பு காட்டியிருப்பதாக கூறும் மறுசாரார், இது சர்வதேச அரங்கில் பிரிட்டனின் ஆளுமையையும் செல்வாக்கையும் குறைக்கவும் குலைக்கவும் செய்யும் என கவலை வெளியிட்டிருக்கிறார்கள்.

# எகிப்து: இழக்கப்படும் உயிர்களும்! தீரமிகு அர்ப்பணமும்


■ செய்யத்

**நா**ளுக்கு நாள் எகிப்திய மக்களின் எழுச்சிமிகு பாரிய போராட்டம் மக்கள் உணர்வுகளை ஏற்படுத்தி வருவதை காணக்கூடியதாக உள்ளது. உலகமே எகிப்தில் நடந்து வருகின்ற மக்கள் எழுச்சியின் அடங்கா உணர்வுகளை திரும்பிப் பார்த்து மெய்சிலிர்க்கிறது. அங்கு காவு கொள்ளப்படுகின்ற வீரமிகு மக்களின் உயிர்களை எண்ணி கண்ணீர் சிந்துகின்றது. துருக்கியப் பிரதமர் ரஜப் தையிப் உர்துகான் இந்த உலகிற்கு சொன்னது போல **'எகிப்து மக்கள் கபன் துணியுடன் இரவைக் கழிக்கின்றனர். காரணம் அவர்களது உரிமைகளுக்காக அவர்கள் வீதிக்கு இறங்கியதுதான். அதற்காக அவர்கள் துப்பாக்கி ரவைகளையும் புன்முறுவலோடு ஏற்றுக் கொண்டார்கள், எகிப்து மக்களுடன் நாங்கள் இருக்கிறோம். ஆனால் சர்வதேச நாடுகளும் சர்வதேச ஊடகங்களும் அவர்களுடன் இல்லை என்பதை நாங்கள் நன்கறிவோம்.'** என்றார் அவர். அங்கு நிலவுகின்ற உண்மை நிலையை உரைக்க வேறு வார்த்தைகள் தேவை இல்லை.

அடிமை வாழ்வை சுமத்தும் அடக்கு முறைக்கு எதிராக, இராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிராக, மேற்கு நாட்டு அரசுகளின் கைப் பொம்மை ஆட்சிக்கு எதிராக, உலக வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாக வரலாற்று காலகட்டமாக இன்று எகிப்தும், எகிப்திய மக்கள் போராட்டமும் மாறி விட்டிருக்கிறது. மக்கள் விடுதலையையும், அவர்களின் சுதந்திர உணர்வுகளையும் நேசிக்கும், மதிக்கும் தன்மையுடையோர் எகிப்திய மக்களுடன் நிற்கிறார்கள். மக்களை அடக்கி ஆள நினைக்கும் மேலாதிக்கவாதிகள் அம்மக்களின் உணர்வுகளுக்கு எதிராக இருக்கிறார்கள் என்பது மிக வெளிப்படையாக தெரியவரும் நேரமாக இது இருக்கிறது.

60 வருடத்திற்கு மேலாக சர்வாதிகாரத்தின் பிடியில் சிக்குண்டிருந்த எகிப்திய மக்கள், ஜனநாயக தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவான ஒரு அரசாங்கத்தில் ஒரு வருடம் மாத்திரமே இருக்க அனுமதிக்கப்பட்டனர். கடந்த ஜூலை 03ந் திகதி முர்சியின் அரசாங்கத்தை இராணுவம் அடாத்தாக பதவி கவிழ்த்தது. ஜனாதிபதி முர்சியை தடுப்புக் காவலில் வைத்துக் கொண்டு எகிப்து மக்களுக்கு நல்லாட்சியை வழங்கப் போவதாக பூச்சாண்டி காட்டியது. இராணுவ சர்வாதிகாரத்தை ஏற்க மறுத்த எகிப்தின் பெரும்பான்மை மக்கள் திரள் வீதிக்கு இறங்கியது. ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிரான வெகுசன போராட்டத்தை இரவு பகலென்று பாராது தொடர்ச்சியாக முன்னெடுத்த மக்கள் மீது எகிப்திய படை அதிகாரம் ஈவிரக்கமற்ற படுகொலைகளை கட்டவிழ்த்து விட்டு வருகிறது. இதுவரை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை வெளி உலகிற்கு தெரியவராதவாறு இராணுவம் சடலங்களை எரியூட்டி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முழுமொத்த அரபுலகிலும் முதன் முதலாக சுதந்திரமான தேர்தல் ஒன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமாக முர்ஸியின் அரசாங்கம் இருந்தது. அந்த அரசாங்கமும் இப்போது பலாத்காரமாக பறித்தெடுக்கப்பட்டு இராணுவத்திற்கு முடிசூட்டப் பட்டுள்ளது. உலகின் மனித உரிமை? மற்றும் ஜனநாயகக் காவலர்களின்? ஆசீர்வாதமும், பக்கத்துணையும் இல்லாமல் எகிப்திய இராணுவம் இந்த ஆட்சிக் கவிழ்ப்பில் இறங்கவில்லை . மன்னராட்சிக்கும் மக்களாட்சிக்கு மிடையேயான மாறும் காலகட்டத்தைக் கண்டு அச்சமுறுபவர்களின் மறை கரங்களும் இந்த வெளிப்படையான சதிக்கு பின்னால் உள்ளது. மறுபுறத்தில் எகிப்திய இராணுவம் என்பது 1950களின் பின் மேற்குநாடுகளின் தயவிலும் அவர்களின் வழிப்படுத்தலின் கீழ் இயங்குகின்ற அமெரிக்க, இஸ்ரேல் அதிகாரத்தின் துணைக்கருவி என்பது உலகறிந்த உண்மை.



அரபுலக வசந்தத்தின் புதியதொரு விளைபூமியாக எகிப்து இன்று மாறிவிட்டிருக்கிறது. சஊதி தலைமையிலான இஸ்லாமிய நாடுகள் எகிப்திய விவகாரத்தில் எடுத்த நிலைப்பாடு அவர்களின் உண்மை முகத்தை அம்பலமாக்கியுள்ளது. ஒரு பக்கம் ஜனநாயக முகமூடி அணிந்து கொண்டு முழு உலகையுமே கபளீகரம் செய்யத்துடிக்கின்ற மேலாதிக்கவாதிகளையும் மன்னராட்சியின் பெயரால் அதிகார பீடங்களில் வீற்றிருப்பவர்களையும் எகிப்திய மக்களின் அளப்பரிய தியாகம் உலுப்புகிறது. அமெரிக்கா தோல்வியடையும் மீண்டுமொரு வியட்நாமாக எகிப்து மாறும் என உறுதியாக எதிர்வு கூறலாம். ஏனெனில் அவர்களின் தியாகமும் அதற்கான உறுதியும் அளப்பெரியதாக இருக்கிறது. ▣

# மேற்கின் ஜனநாயகக் கோசமும் எகிப்தில் அரங்கேறும் முழு ஜனநாயக விரோதமும்

பி.எல்.எம். ரொஷன் - நளிமீ






எகிப்து, உலகின் பிரதான நாகரிகங்களில் ஒன்றாகக் கருதப்படும் நைல் நதி நாகரிகத்தை ஒட்டி உருவான 8000 வருடங்களுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட நாடு. இது ஆபிரிக்காக் கண்டத்தின் பலம் வாய்ந்த நாடாகக் கருதப் படுகின்றது. 8.5 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்நாட்டில் 94% முஸ்லிம்களும் 6% கிறிஸ்தவர்களும் வாழ்கின்றனர்.

நெப்போலியனது ஆக்கிரமிப்புக்கு முன்னால் கல்வி, சட்ட நடவடிக்கைகள், சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற அனைத்து அம்சங்களும் இஸ்லாமிய கோட்பாட்டுக்கு அமைவாகவே இடம் பெற்று வந்தன. அரசியல் மற்றும் பொது விவகாரங்களில் தீர்மானங்கள் மேற் கொள்கின்றவர்களாக இஸ்லாமிய சிந்தனையாளர்களே காணப்பட்டனர். இந் நடைமுறைகளையே உதுமானியர்களும் (ottomans) இவர்களுக்கு முன் ஆட்சி செய்த மம்லூக்கியர்களும் (Mamluks) பின்பற்றினர். இந்த வகையில் இஸ்லாம் அரச மார்க்கமாக (State Religion) காணப்பட்டதால் அரசியல் சிந்தனை முகாம்கள் இஸ்லாமிய சிந்தனைப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்பட்டது. என்றாலும் 19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பங்களிலும் எகிப்தை ஆட்சி செய்த பிரித்தானிய காலனித்துவம் இஸ்லாத்தை முன்னிறுத்தி இஸ்லாமியவாதிகள் ஆட்சிக்கு வருவதனை தடுப்பதற்காக மிகுந்த பிரயத்தனத்தை மேற்கொண்டனர். 1922இல் பிரித்தானிய காலனித்துவத்திடமிருந்து சுதந்திரம் பெற்ற எகிப்து மீண்டும் மன்னர் புவறின் மன்னராட்சிக்குள் நுழைகிறது. (1922 - 1936) இவரது ஆட்சியில் இஸ்லாமிய அறிஞர்கள், இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளர்கள் அரசியல் குறித்துப் பேசுவதற்கு தடையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இதன் பிரகாரம் இஸ்லாமிய உலகின் அறிவு மையமாகக் கருதப்படும் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் சுதந்திரம் பறிக்கப்பட்டு அதுவரை வக்பீ சொத்தில் இயங்கி வந்த பல்கலைக்கழகம் அரசுடமையாக்கப்பட்டு அதன் நிர்வாக முறையில் அரசியல் திணிக்கப்பட்டது. இவரைத் தொடர்ந்து மன்னர் பாறுக் (1936 - 1952) ஆட்சிக்கு வந்தார்.

இவ்வாறு காலனித்துவம் பின்னர் மன்னராட்சி என்பவற்றினால் விரக்தியுற்ற மக்கள் ஜனநாயகத்தை நிலை நிறுத்துமாறு வீதிக்கு இறங்கி போராட ஆரம்பித்தனர். 1954 பெப்ரவரியில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை அரசுக்கு எதிராக மேற் கொண்டனர். இதனை இலாபமாகப் பயன்படுத்திக் கொண்ட இராணுவ ஜெனரல் ஜமால் அப்துல் நாஸர் மக்களின் ஜனநாயகக் கோரிக்கையை தான் நிறைவேற்றப் போவதாகக் கூறி இராணுவப் புரட்சியை மேற்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றினார்.

இவ்வார்ப்பாட்டத்தை முன்னின்று நடாத்திய சகோதர அமைப்பிடம், மிக விரைவாக தேர்தல்களை நடாத்தி ஆட்சிப் பொறுப்பை பொது மக்களிடம் ஒப்படைப்பதாக நாஸர் வாக்குறுதியளித்தார். இவ்வாக்குறுதியை நம்பிய சகோதரத்துவ அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அப்துல் காதிர் அவ்தா ஆர்ப்பாட்டங்களை நிறுத்துவதாக அறிவித்தார், எனினும் எந்த வாக்குறுதியும் நாஸரினால் நிறைவேற்றப்படவில்லை. மாற்றமாக சகோதரத்துவ அமைப்பின் முக்கிய தலைவர்கள் தேடி தேடி கொல்லப்பட்டனர் அத்துடன் சகோதரத்துவ அமைப்பை முற்றாக அழிப்பதற்கான பாரிய திட்டங்கள் தீட்டப்பட்டு அரங்கேற்றப்பட்டன. என்றாலும் அல்லாஹ்வின் பேருதவியின் காரணமாக அமைப்பு தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பாரிய வளர்ச்சியைக் கண்டது. நாஸரின் ஆட்சியை தொடர்ந்து அன்வர் ஸதாத் (1970 - 1981) ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இவரது ஆட்சியிலும் இஸ்லாத்திற்காகவும், மக்களாட்சிக்காகவும் குரல் கொடுத்து வந்த சகோதரத்துவ அமைப்பு கடுமையான சோதனைகளை எதிர் கொண்டது. இதன் விளைவாக பல தலைவர்களை இழந்ததோடு ஆயிரக்கணக்கானோர் சிறைவாசம் புரிய நேரிட்டது. நாஸர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஜெனரல் ஹுஸ்னி முபாரக் (1981 - 2011) ஜனாதிபதியாக பதவி ஏற்றார். இவ்வாறு ஏறத்தாள 60 வருடங்கள் இராணுவ ஜெனரல்களாலேயே எகிப்து ஆட்சி செய்யப்பட்டு வந்தது.

டியுனீசியாவில் 30 வருடங்களுக்கு மேலாக சர்வதிகார ஆட்சி செய்து வந்த பின் அலிக்கு எதிராக 2010இல் ஏற்பட்ட மக்கள் புரட்சி அரபு எழுச்சியின் ஆரம்பமாக அமைந்தது. இது எகிப்திலும் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியதன் விளைவாக கடுமையான வறுமையினாலும் (40%) அடக்குமுறையாலும் பாதிக்கப் பட்டிருந்த மக்கள் முபாரக்கின் 30 வருட இரும்புக்கர ஆட்சிக்கு எதிராக வீதியில் இறங்கி போராட



**52% வாக்குகளைப் பெற்ற கலாநிதி முர்ஸி எகிப்திய வரலாற்றில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியானார்.**

ஆரம்பித்தனர். மக்கள் எழுச்சிப் போராட்டம் 2011 ஜனவரி 25இல் கெய்ரோவின் தஹ்ரீக் சதுக்கத்தில் ஆரம்பமானது. இப்போராட்டம் முபாரக்கின் அடாவடித் தனங்களுக்கு மத்தியிலும் பல நாட்கள் இடம்பெற்றன. மக்கள் போராட்டம் வெற்றியின் இறுதியில் இருக்கும் போது உள்ளக இராணுவ சதியொன்றின் மூலமாக ஹுஸ்னி முபாரக் பதவி கவிழ்க்கப்பட்டார்.

எகிப்து இராணுவத்தைப் பொறுத்த வரையில் ஆபிரிக்காவில் மிகப்பெரிய ராணுவமாகவும் உலகின் 10வது பலமான இராணுவமாகவும் காணப்படுகின்றது. உலகின் ஏனைய நாடுகளில் காணப்படுகின்ற நாட்டின் இறையான்மையை, பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துகின்ற ஒரு அமைப்பாக மாத்திரம் எகிப்திய இராணுவம் தனது எல்லையை மட்டுப்படுத்திக் கொள்ளாது பொருளாதாரத்திலும் 40%க்கும் கூடுதலான செல்வாக்கினைக் கொண்ட சுதந்திர அமைப்பாக காணப்படுகிறது. இஸ்ரேலுக்கு அடுத்த நிலையில் அமெரிக்காவின் உதவித் தொகையை (1.3 Billion) பெறுகின்ற நிலையில் அமெரிக்காவின் விருப்பு வெறுப்புகளுக்கு அமைவாகவே இராணுவத்தின் செயற்பாடு எப்போதும் அமைந்து காணப்படுகின்றது. மக்கள் எழுச்சி மூலமாக முபாரக் பதவி கவிழ்க்கப்பட்டதை தொடர்ந்து ஜனநாயக நீரோட்டத்துக்குள் எகிப்து செல்வதைத் தடுக்கின்ற வகையில் இராணுவம், நயவஞ்சகத்தனமாக அதிகாரத்தை தங்கள் கைகளுக்குள் வைத்துக் கொள்வதற்கு முயன்றனர். எனினும் தொடர்ச்சியான மக்கள் போராட்டத்தின் விளைவாக 2011 நவம்பர் மாதம் 28-29 களில் முதல் கட்டமாகவும் டிசம்பர் 14-15ம் திகதிகளில் இரண்டாம் கட்டமாகவும் பாராளுமன்றத் தேர்தல் இடம் பெற்றது. இதன் முடிவுகள் 2012இல் ஜனவரியில் அறிவிக்கப்பட்டன.

இதனை தொடர்ந்து முதலாவது ஜனாதிபதித் தேர்தல் 2012 மே மாதம் 23-24 களிலும் இரண்டாம் கட்டம் ஜூன் மாதம் 16-17 களிலும் இடம் பெற்றது. இத் தேர்தலில் 85 வருடங்களாக மக்கள் சேவையில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு, தமது ஜனாதிபதி வேட்பாளராக கலாநிதி முர்ஸியை களமிறக்கியது. முபாரக்கின் ஆட்சியில் பங்கேற்ற எவரும் இத் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்ற மக்கள் ஆணையையும் மீறி இராணுவம், முபாரக்கினால் அமைக்கப்பட்ட உயர் யாப்பியல் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று முபாரக்கின் விசுவாசியாகவும் சிறிது காலம் பிரதமராகவும் பதவிவகித்த அஹ்மத் ஷபிக் என்பவரை வேட்பாளராக முன்னிறுத்தியது.

52% வாக்குகளைப் பெற்ற கலாநிதி முர்ஸி எகிப்திய வரலாற்றில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியானார். ஜனாதிபதி தேர்தல் முடிவு இராணுவத்திற்குச் சார்பாக அமையாது என அறிந்த இராணுவம், இஸ்லாமிய வாதிகளை அதிகமாகக் கொண்ட பாராளுமன்றத்தை உயர் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றினைப் பெற்று கலைத்து விட்டது. மக்கள் புரட்சிக்குப் பின்னர் எகிப்து புதிய ஜனநாயக நீரோட்டத்திற்குள் வருவதற்கு எதிராக இராணுவம் செய்த பாரிய சதியாகவே இது கருதப்படுகின்றது.

இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் அரபுலகில் மிகப்பலம் பொருந்திய நாட்டின் அரசியல் அதிகாரத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக வளர்ந்து விட்ட முஸ்லிம் சகோதர அமைப்பு பிராந்திய, சர்வதேச அரங்கில் ஒரு தீர்மானிக்கின்ற சக்தியாக மாற்றமுறுவது அமெரிக்க, சியோனிச நலன்களுக்கு மாத்திரமல்லாது அரபுலகத்தில் பல தசாப்தங்களாக மன்னராட்சி புரிந்து வரும் குட்டி சுல்தான்களுக்கும், அவர்களின் சுகபோக வாழ்வுக்கும் சவாலாக அமைந்துவிடும் என்பதனால் அரபு எழுச்சியை ஆரம்பத்தில் ஆதரித்த சவூதி, அமீரகம் (UAE) குவைத் போன்றன அதனை எதிர்க்கின்ற வகையில் செயற்பட ஆரம்பித்தது மாத்திரமல்லாது எகிப்தில் உருவாகும் சகோதரத்துவ அமைப்பின் தலைமையிலான அரசை பதவி கவிழ்ப்பதற்காக அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் இணைந்து முயற்சிகளையும் மேற்கொண்டன.

பாராளுமன்றத்தை கலைத்ததன் பிரதான நோக்கமாக கருதப்படுவது, நடைமுறையிலிருந்த சட்ட யாப்பின்படி இராணுவம் முழுமையாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. பதவி உயர்வுகள், யுத்தம் சமாதானம் போன்றவற்றின் இறுதித் தீர்மானம் எடுக்கின்ற அதிகாரம் ஜனாதிபதியிடமே இருந்தது. இவை இஸ்லாமிய வாதியான புதிய ஜனாதிபதி முர்ஸியிடம் சென்றுவிடக் கூடாது என்பதுவும் இஸ்லாமியவாதிகளை அதிகமாகக் கொண்ட புதிய பாராளுமன்றம் ஜனாதிபதி, இராணுவ அதிகார வரம்புகளை தீர்மானித்துவிடக் கூடாது என்பதுமேயாகும். இதனைத் தொடர்ந்து புதிய அரசியலமைப்பு தொடர்பான அனைத்து தீர்மானங்களையும் இராணுவ உயர் கவுன்சிலே மேற்கொள்ளும் என அறிவித்தது. இவற்றினூடாக புதிய ஜனாதிபதிக்குரிய பல அதிகாரங்களை லாகவமாக கையகப்படுத்தியதோடு புதிய அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று பாராளுமன்றம் அமையும் வரை சட்டவாக்க அதிகாரத்தை தனது கைகளுக்குள் கொண்டு வந்தது. இராணுவத்தின் அனைத்து சட்ட விரோத நடவடிக்கைகளையும் அரங்கேற்ற முபாரக்கினால் தோற்றுவிக்கப்பட்ட அரசியலமைப்பு நீதிமன்றம், சட்டமா அதிபர் போன்றோர் துணை நின்றனர்.

எகிப்தில் காணப்படுகின்ற தாராண்மைவாதிகள் (Liberalists) இஸ்லாமிய வாதிகளின் அரசியல் பிரசன்னத்துக்கு எதிராகவே ஆரம்பத்திலிருந்து செயற்பட்டு வந்தனர். பாராளுமன்ற தேர்தலிலும் போதிய மக்கள் ஆதரவை இவர்களால் பெற முடியாது போனது. இவற்றின் காரணமாக கலைக்கப்பட்ட பாராளுமன்ற அரசியலமைப்பு குழுவிலிருந்தும் வெளிநடப்புச் செய்து புதிய யாப்பு உருவாக்கத்தை குழப்புகின்ற வேலையில் இராணுவத்திற்கு துணைநின்றனர். தொடர்ச்சியாக இஸ்லாமியவாதிகள் மீதும் ஜனாதிபதி முர்ஸி மீதும் சேறு பூசுகின்ற வகையில் பொய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்தி இஸ்லாமிய வாதிகளை, தேசிய, மற்றும் சர்வதேச உலகுக்கு சர்வாதிகாரிகளாகவும், முல்லாக்களாகவும் காட்ட முயன்றனர்.

இவ்வறு ஒரு நெருக்கடியான சூழலில் ஜனாதிபதி முர்ஸி நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டுசெல்ல வேண்டுமெனில் 30 வருடங்களாக நீதி, இராணுவத் துறைகளில் புரையோடிப் போயிருந்த முபாரக்கின் செல்வாக்கை இல்லாதொழித்து அவற்றை நீதியானதும், சுதந்திரமானதுமான துறைகளாக மாற்ற வேண்டுமென்ற பாரிய சவாலை உணர்ந்திருந்தார். எனவே புதிய யாப்புருவாக்கத்தை மேற்கொண்டு அதனடிப்படையில் பாராளுமன்ற தேர்தலை நடாத்தி சட்டவாக்க அதிகாரத்தை பாராளுமன்றத்துக்கு வழங்குதல், இதன் பிரகாரம் நீதித்துறையை சீர் செய்தல் என்ற முடிவுகளை எடுத்துச் செயற்பட்டார். இச் செயற்பாடுகளின்போது இராணுவ கவுன்ஷிலோ, அரசியலமைப்பு நீதிமன்றமோ குறுக்கீடுகள் செய்ய முடியாதவாறு சட்டவாக்க அதிகாரங்களை ஜனாதிபதி கொண்டிருப்பார் என அறிவிப்புச் செய்தார். யாப்புருவாக்கச் செயற்பாடு நிறைவுற்றதுடன் தனது புதிய அதிகாரங்கள் செயலற்றதாக ஆகிவிடும் என்றும் அறிவித்தார். இச் செய்தி இராணுவ கவுன்ஷிலுக்கும், உயர் அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கும் பாரிய அடியாக இருந்தது. எனவே தாராண்மை வாதிகளையும், முபாரக்கின் விசுவாசிகளையும் ஏவிவிட்டு முர்ஸி சர்வதிகாரியாக நடந்து கொள்கின்றார் என்ற போர்வையில் ஆர்ப்பாட்டங்களை மேற் கொள்ளச் செய்தனர். உண்மையில் ஜனாதிபதி முர்ஸி அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதாக இருந்தால் அவற்றை மேற்கொள்வதற்கு இந்தத் தீர்மானங்கள் இன்றியமையாததாக இருந்தது. ஏனெனில் முர்ஸியின் அனைத்து திட்டங்களுக்கும் இவ்விரு அமைப்புக்களும் தடைகளாகவே இருந்தன.

**ஜனாதிபதி முர்ஸி பதவியேற்று ஒரு வருட காலத்திற்குள் 60 வருடங்கள் இராணுவ ஜெனரல்களால் ஆட்சி செய்யப்பட்டு குட்டிச் சுவராக்கப்பட்ட பொருளாதாரத்தையோ, மக்களின் வாழ்க்கைத் தரத்தையோ உயர்த்துவதற்கு முடியவில்லை.**

ஜனாதிபதி முர்ஸி பதவியேற்று ஒரு வருட காலத்திற்குள் 60 வருடங்கள் இராணுவ ஜெனரல்களால் ஆட்சி செய்யப்பட்டு குட்டிச் சுவராக்கப்பட்ட பொருளாதாரத்தையோ, மக்களின்

வாழ்க்கைத் தரத்தையோ உயர்த்துவதற்கு முடியவில்லை.

அமெரிக்காவின் கைப்பிள்ளையாக இருந்து கொண்டு எப்போதும் பிச்சைப் பாத்திரம் ஏந்துகின்ற ஒரு நாடாக எகிப்தை வைத்துக் கொள்ளாமல் கைத்தொழில், தொழில்நுட்பம் விவசாயத் துறைகளில் உள்நாட்டு உற்பத்திகளுக்கு கூடிய முக்கியத்துவம் வழங்குகின்ற வகையில் புதிய அபிவிருத்திய மையங்களான Bric நாடுகளை நோக்கி தனது பயணங்களை மேற்கொண்டு பொருளாதார ஒப்பந்தங்களை முர்சி மேற் கொண்டார். பாலஸ்தீனம் என்ற சுதந்திர நாடு மிக விரைவாக உருவாக்கப்பட வேண்டும் அதன் மூலமாக பாலஸ்தீன மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்க்கப்பட வேண்டும் என்று உறுதியாகக் குரல் கொடுத்தது மாத்திரமல்லாது அதனை நடைமுறைச்சாத்தியமாக்கின்ற வகையில் செயற்பட்டு வந்தார். 2012இல் காஸா மீது இஸ்ரேல் தாக்குதலை மேற்கொண்டபோது அதனை உடனடியாக நிறுத்துமாறு இஸ்ரேலை எச்சரித்ததுடன் பிரதமர் ஹிஷாம் கின்தீலை காஸாவுக்கு அனுப்பி எகிப்து பாலஸ்தீனத்துடன் இருக்கின்றது என்ற இராஜதந்திர எச்சரிக்கைகளையும் விடுத்தார். இதனைத் தொடர்ந்து இஸ்ரேலையும் ஹமாஸ் அமைப்பையும் கொய்ரோவுக்கு அழைத்து சமாதான ஒப்பந்தத்தையும் மேற்கொள்ளச் செய்தார்.

இந் நடவடிக்கைகள் அமெரிக்க சியோனிச சக்திகளுக்கு பெரும் பீதியை ஏற்படுத்தியது, எனவே தொடர்ச்சியாக உள்நாட்டு குழப்பங்களை ஏற்படுத்துதல், முர்ஸியின் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட ஊடக சுதந்திரத்தை பயன்படுத்தி 30க்கும் மேற்பட்ட தனியார் ஊடக நிறுவனங்களை தோற்றுவித்து முர்ஸிக்கு எதிராகவும், சகோதர அமைப்புக்கெதிராகவும் விஷமப் பிரச்சாரங்களை மேற்கொள்ளல், சிறுபான்மை கிறிஸ்தவர்கள் மீது இனந்தெரியாத நபர்களைக் கொண்டு தாக்குதல்களை மேற்கொள்ளச் செய்தல், சினாய்ப் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தல், தராண்மைவாதிகளை விலைக்கு வாங்குதல் போன்ற செயற்பாடுகளை அமெரிக்க சியோனிச சக்திகளின் ஆதரவோடு இராணுவம் அரங்கேற்றியது. இதன் விளைவாக முர்ஸிக்கு எதிராக மக்கள் மூளைசலவை செய்யப்பட்டனர்.

இவற்றிற்கு மேலதிகமாக Tomorod போன்ற மதற்சார்பற்ற இளைஞர்களை தோற்றுவித்து முர்ஸியை பதவி கவிழ்ப்பதற்கான மக்கள் ஆதரவை திரட்ட சவூதி, அமீரகம், குவைத், இஸ்ரேல் போன்ற நாடுகளின் பாரிய நிதியுதவியுடன் திட்டங்கள் தீட்டப்பட்டன. இதன் முக்கிய அம்சமாக ஜுன் 30ம் திகதி முர்ஸிக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதனூடாக இராணுவம் மக்கள் எழுச்சி என்ற போர்வையில் இராணுவப் புரட்சியை மேற்கொண்டு முர்ஸியை பதவி கவிழ்ப்பது என்று தீர்மானித்தது. இதன் பிரகாரம் ஜுன் 30ம் திகதி தஹ்ரீர் சதுக்கத்தில் ஒன்று கூடிய தமர்ருத், NSF என்ற தாராண்மை வாதிகளின் கூட்டணி மற்றும் சிறுசிறு கருத்து வேறுபாடுகளுக்காக சகோதர அமைப்போடு முரண்பட்ட ஷலபி அமைப்பான அல் - நூர்கட்சி ஜனாதிபதி முர்ஸியை பதவி விலகுமாறு கோரினர். உண்மையில் இவர்களது கோரிக்கைகள் எந்த அடிப்படையுமற்றதாகவே காணப்பட்டது. இவர்களது பிரதான குற்றச்சாட்டாக ஜனாதிபதி முர்ஸி ஒரு வருட காலத்துக்குள் பொருளாதாரத்தை முன்னேற்றவில்லை என்பது மட்டுமாகவே காணப்பட்டது. இந்த குற்றச்சாட்டு குறித்து ஆங்கில ஊடகவியலாளர் ஒருவர் தனது டுவிட்டர் செய்தியில் **"மூஸா தனது அற்புதத்தின் மூலமாக செங்கடலை கடக்கச் செய்தது போன்று இவர்கள் முர்ஸி ஒருவருடத்திற்குள் எகிப்தை சொர்க்கமாக மாற்ற வேண்டுமென்று கனவு காண்கின்றனர். இது எவ்வளவு மடமை?"** என எழுதினார்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கெதிராக இஸ்லாமிய உலகின் முன்னணி இஸ்லாமிய அறிஞர்கள் தங்களது அதிருப்தியையும் எதிர்ப்பையும் தெரிவித்தனர். இந்த வகையில் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி யூசுப் அல் கர்ழாவி அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "முபாரக்கின் 30 வருட ஆட்சியிலும் அற்கு முன்னர் 30 வருடங்களும் பொறுமையாயிருந்த நாம், ஏன் முர்ஸியின் ஆட்சியில் ஒரு வருடம் பொறுக்கக்கூடாது? அறுபது வருடப் பிரச்சினைகளை ஒரு வருடத்தில் எவ்வாறு தீர்க்க முடியும்? முர்ஸி பதவி விலகுவார் என்று வைத்துக்




கொள்வோம் அதன் பிறகு நாட்டை ஆள்பவர் யார்? அல்லாஹ் மீது ஆணையாக அதன் பிறகு, அவரைப் போன்றொருவரை நாம்; காண முடியாது. மிக மோசமானவர்கள்தான் வருவார்கள். அதன் பின்னரும் மிக மோசமானவர்கள்தான் வருவார். இது வெறும் ஊகமல்ல. வரலாற்றிலும் இவ்வாறுதான் எழுதப் பட்டிருக்கின்றது. ஏனைய நாடுகளின் நிலமைகளும் இவ்வாறுதான் உள்ளது" என்றார்.

தனது இராணுவப் புரட்சிக்குச் சாதகமாக சூழலை உருவாக்கிய இராணுவம் ஜெனரல் அப்துல் பத்தாஹ் அல் ஸீசலியின் (இவர் ஜனாதிபதி முர்ஸியினால் முப்படைத் தளபதியாகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி உயர்த்தப்பட்டார்) தலைமையில் எகிப்திய வரலாற்றில் ஜனநாயக ரீதியாக மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட முதல் சிவில் ஜனாதிபதியான கலாநிதி முர்ஸியை ஜுலை 3ம் திகதி இராணுவப் புரட்சியின் மூலமாக பதவி கவிழ்த்தது. இதனைத் தொடர்ந்து சர்வதேச அழுத்தங்களிலிருந்து தனது இராணுவப் புரட்சியைப் பாதுகாத்த இஸ்ரேலுக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொள்ளும் வகையில், எகிப்துடன் பாலஸ்தீனத்தை இணைக்கின்ற, காஸா மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்தப்பட்டு வந்த சுரங்கப் பாதைகளை உடைத்து நொறுக்கின்ற வேளையில் ஜெனரல் ஷிசி இறங்கினார்

எகிப்திய இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட இஸ்ரேலிய தேசிய பாதுகாப்பு கவுன்சில் முன்னால் தலைவர் கியோரா என்லன்ட், "எகிப்திய, சிரிய நிகழ்வுகள் இஸ்ரேலுக்கு சாதகமான சமிக்ஞையாகும் எனத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் எகிப்திய சகோதரத்துவ அமைப்பு ஆட்சிபீடமேறிய போது நாம் அச்சப்பட்டோம். இன்று அது ஒரு முடிவுக்கு வந்துள்ளது. ஒரு மதச்சார்பற்ற அரசாங்கம் எகிப்தில் அமைகின்ற பட்சத்தில், இஸ்ரேலுடனான அதன் உறவு

**"எகிப்திய இராணுவப் புரட்சி தேர்தல் மூலம் தெரிவான ஜனாதிபதியை நீக்கி அவரை சிறைப்படுத்தியுள்ளது. ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. ஜனாதிபதி ஆலோசகர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.**




முழுமையாக சாதாரண நிலைக்கு திரும்பி விடலாம்" என்றும் தெரிவித்தார்.

அமெரிக்க நயவஞ்சகத்தனம் குறித்து கருத்துத் தெரிவித்த குடியரசுக் கட்சிக்காரரான ரென்போள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "எகிப்திய இராணுவப் புரட்சி தேர்தல் மூலம் தெரிவான ஜனாதிபதியை நீக்கி அவரை சிறைப்படுத்தியுள்ளது. ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. ஜனாதிபதி ஆலோசகர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அரசியல் யாப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. பல தசாப்தங்களுக்குப் பின்னர் ஜனநாயக ரீதியாகத் தெரிவானதொரு அரசாங்கம் இருந்தது. அமெரிக்கா மூலம் நிதியுதவி வழங்கப்படுகின்ற எகிப்திய இராணுவத்தினூடாக அது இன்று கவிழ்க்கப்பட்டுள்ளது. எகிப்தில் தலையிடுகின்ற நயவஞ்சகத்தனமான, அதேநேரம் முட்டாள்தனமான செய்கைகளை அமெரிக்கா கடைப்பிடித்து வருகின்றது. மக்கள் வாக்கெடுப்பு எதுவுமில்லாமல் ஆட்சிக்கு வந்த ஹஸ்னி முபாரக்கின் ஆட்சிக்கு முட்டுக்கொடுத்து, அவரை அதிகாரத்தில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக பல பில்லியன் டொலர்களை செலவு செய்தது, பிறகு ஹஸ்னி முபாரக்கை பதவி கவிழ்த்தவர்களுக்கு உதவி புரிந்து ஒரு தேர்தல் நடாத்தப்பட வேண்டும் எனக் கோரியது. நீதியும் நேர்மையுமான தேர்தல் நடாத்தப்பட்டு ஒரு மக்கள் அரசாங்கமும், ஜனாதிபதியும் தெரிவு செய்யப்பட்ட நிலையில், அமெரிக்க நிதி வழங்கப்பட்ட இராணுவத்தினால் பதவி கவிழ்க்கப்பட்டுள்ளார். தற்போது ஜனநாயகத்தை மீள நிலைநிறுத்துமாறு அமெரிக்கா கோருகிறது.

இவ்வாறு பிராந்திய, சர்வதேச சக்திகளின் ஆடுகளமாகியிருக்கும் எகிப்தை பாதுகாப்பதற்காக முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு, மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான அமைப்புகள் இன்று வரை பல நூற்றுக்கும் மேற்பட்ட உயிர்களை காவுகொடுத்துள்ள நிலையிலும் ஆயிரக்கணக்கானவர்கள் இராணுவத்தினால் மற்றும் கூலிப்படைகளினால் காயப்படுத்தப்பட்ட நிலையிலும் றாபியா அதவியாவிலும், கெய்ரோ பல்கலைக் கழகத்துக்கு முன்னாலும், அலெக்ஸாந்திரியா உட்பட நாட்டின் எல்லா திக்குகளிலும் தங்களது போராட்டங்களை தொடர்ந்து கொண்டு செல்கின்றார்கள். கலாநிதி தாரிக் அல் ஸவைதான் சொல்வது போன்று **"எகிப்தினுடைய வீழ்ச்சி முழு உம்மத்தினதும் வீழ்ச்சியாகும், எகிப்தினுடைய எழுச்சி முழு உம்மத்தினுடைய எழுச்சியாகும்"**.

**குறிப்பு:** முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு, 1924இல் உதுமானியா சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து 1928இல் இமாம் ஹஸனுல் பன்னா அவர்களால் இஸ்லாத்தை முழுமையான வாழ்க்கைத் திட்டமாக முன்னிறுத்தி தோற்றுவிக்கப்பட்ட அமைப்பாகும். இன்று, அரபு நாடுகள் பலவற்றில் எதிர்க்கட்சியாக நிற்கின்ற அளவுக்கு அரபுலகத்திலும், ஏனைய முஸ்லிம் நாடுகளிலும் பாரிய செல்வாக்கைப் பெற்ற மிகப் பழமைவாய்ந்த ஒரு இஸ்லாமிய அமைப்பாக உள்ளது.



# Muslim Patriotism in Srilanka - 2

**Dr. Rifai**

It is not my objective to make any derogatory criticism of any community or any religion. An attempt has been made here to illustrate how Singhalese people have been sympathetic and companionate towards all other religious groups in the past. Though Portuguese and Hindu invaders from South India try to destroy cultural heritage of Singhalese Buddhist people during the colonial and pre-colonial periods, Singhalese kings offered unconditional supports and help for all other religious groups such as Christian, Hindi and Muslims people. I shall try to illustrate this point with historical evidence to show what BBS doing today is contrary to their cultural and religious history and teachings.

I shall make some reference to Buddhist texts to justify this postulate. It is my humble opinion that in the name of religion and culture BBS is trying to tarnish good name of Singhalese Buddhist people across the country and indeed, attitudes, behaviors and mindsets of BBS are against very teaching of Lord Buddha. I shall try to gauge and measure peaceful and companionate attitudes of Singhalese Buddhist communities in historical perspectives. I shall explore some historical facts to illustrate the inherent nature of peace and harmony in the history of Singhalese people in this country.

Recent times BBS argues that Buddhist culture and traditions have been destroyed by Muslims in this country. This is an unfounded argument. I would like to say that BBS should read Ceylon history well to understand who indeed destroyed pristine Buddhist culture and Singhalese way of life. Srilankan historians know well what happened during the colonial period. It was a historical fact that Muslim people settled in different part of Kandiyan kingdom. It was done with the invitation and favour of kandiyan kings. It was reported by Robert Knox that Kings and charitable Singhalese people donated land to Muslim people to live (Dewaraja p115). Even some mosques were built in the donated lands by kings those days. It was reported that some Buddhist temples fully supported Muslim religious practices and even donated lands to build mosques in the promises of temples. Moreover, they allocated some allotments of land for the day to day maintenance of Muslim priest (Dewaraja. P.113).

This was a real teaching of Buddha who advocated religious tolerance, communal harmony and peace

among communities. Nothing but this teaching encouraged the Kings and Singhalese to donate Muslims with these lands. This would not have happened had there was no amity between Singhalese and Muslim those days and It would not be wrong to argue that Islamic traditions and rituals were fully protected by Singhalese kings and Singhalese people those days. The above mentioned historical account testifies such postulate. Thus, Muslim community in Srilankan had been an integral part of Srilankan community and they never challenged the Singhalese or their way of life. In contrary to this harmonious attitude we should look at what happened to Singhalese people and Buddhist culture during the Portuguese colonization periods.

A cursory examination of some historical facts about the introduction of Catholicism into Ceylon during the Portuguese colonization would reveal how and in what ways Buddhist culture, religion and way of life were destroyed by Portuguese colonial power. Portuguese arrival was regarded as the Dark Age in Ceylon history. They did great damage to Singhalese culture and tradition than any one else. Emerson Tennent records Portuguese arrival in Ceylon in these words. "There is no page in the story of European colonisation more gloomy and repulsive than that which recounts the proceedings of the Portuguese in Ceylon........ They appeared in the Indian seas in the three fold character of merchants, missionaries and pirates. Their ostensible motto was amity, commerce and religion. Their expeditions consisted of soldiers as well as adventurers and included friars and chaplain majors. Their instructions were to begin by preaching but, that failing to proceed to the decision of the sword" ( Tennakoon. Vimalanqnda. P .xxiv)

Portuguese invasion of Ceylon was vividly described by Malalasekera in his book (The Pali Literature in Ceylon)

"Every stage of their progress was marked by rapacity, bigotry, cruelty and inhumanity unparalleled in the annals of any other European colonial power. Their ferocity and their utter indifference to all suffering increased with the success of their army, their inhuman barbarities were accompanied by callousness which knew no distinction between man, women and child, no feeling of compassion was strong enough to stay their savage hands in their fell work. To terrify their subjects and bring home to them the might of the Portuguese Power, they committed atrocities which had they not been found recorded in the decades of their friendly historians, seems too revolting to be true. Babies were spitted on the soldiers' pikes and held up up that their parents might hear the young cocks crow. Sometimes they were compelled to witness the pitiful sight before they themselves were tortured to death. Men were thrown over bridges for the amusement of the troops to feed the crocodiles in the river, which eventually grew so tame that at whistle they would raise their heads above the water in anticipation of the welcome fest." (Malalasekera: quoted by Tennakoon. Vimalananda. P .xxvi.)

Prof Vimalananda notes that Portuguese method of converting Singhalese people had been awful and brutal methods. Innocent Singhalese people were converted under duress and compulsion. It had been their principle to "begin by preaching, but that failing proceed to the decision of the sword". Because of this forceful compulsion and coercion he argues that "the Singhalese Buddhist of the maritime province very cheerfully submitted to the cruel atrocities of Roman Catholic missionaries" (P. xxvi). Prof. Vimalananda compares and contrasts the differences between the invasion of South Indian Tamil and Portuguese Roman Catholics.

"In the complete destruction of the city of Anuradhapura or the sack of Polonnaruwa, the last national capital of the Singhalese people, the enemy, however, never attempted to convert the Buddhist of Ceylon to the Hindu faith. But the new invader from the West not only destroyed the places of worship of Buddhists but forcefully converted many people to the Roman Catholic faith.... Three agencies fo the Roman Catholic Church directed operations against the helpless Buddhists: those three agencies were: 1) The Roman Catholic Emperor of Portugal 2) His Viceroy at Goa 3) The Roman Catholic priests in Ceylon. They were all united in the effort completely to destroy Buddhism in our country.... As the Portuguese were in possession of Sea coast of Ceylon the Buddhists could not communicate with any sympatric power outside Ceylon for the help at that hour. Thus, the Roman Catholic Church in Ceylon embarked upon a campaign of destruction and bloodshed, unopposed by any political power. (P. xxx). Yet, Prof. Vimalananda may not have read that Ottoman Empire did try to offer help but they could not do that because of some internal dispute among themselves and because of the fact the Caliph Suleiman the magnificent died during this period in history.

According to Bernard Lewis one of leading modern historians in the Middle East history some Non-Muslim rulers in Asian countries sought Ottoman help during this time to repulse the Portuguese invasion but unfortunately Ottoman Empire was unable to come in support of this call. (Bernard Lewis. P.15). I recall this people like that of BBS should read the history before they jump into hasty conclusion about Muslims. Prof Tennakoon Vimalananda further notes that "In the past the invader from South India had sacked the Buddleia Viharas, but never built their religious edifices on their ruins. But the Roman Catholic Church destroyed the Buddhist vihraras and monstrosities, and with the materials collected from them they built their churches on the very spots where once stood the Buddhists Veha-

ras. For example, the Roman Catholic churches at Kalutara, Toagamuwa, keragala, Wattala. Etc. were built on the sites for Viharas" . (P. xxxii).

Historians generally agree that Portuguese colonized Ceylon with two objectives in their mind: The primary objective was to occupy Ceylon for material and economical objective and yet, Portuguese made it their primary objective to spread the message of Gospel. C Gastaon Perera notes that "The salvation of the Non-Christian populations… was of primary concern at all levels of the Church and State in the Portuguese Empire. (C Gaston Perera. P.162). Spreading the message of Gospel, converting the pagans into Catholicism and baptizing the entire population of colonies under the control of Portuguese empire were primary tasks of the captain generals of Portuguese kings those days. It had been a principle of Portuguese empire that religion of king and his subject should be one and same. In this case it was Roman Catholicism.


Not only they did this but also they converted some Singhalese kings into Christianity. For instance, King Dharamapala was converted into Christianity. It was King Kandiayan Rajasinghe who saved this country from Roman Catholic subjugation and oppression and that is why still today this kings get high place in the hearts and minds of Singhalese people and Muslims too loved this kings particularly for his generosity and support to resettle Muslims his kingdom. It was an ironic to note these same Catholics given shelter by Singhalese Buddhists under Dutch Rule. Catholic Christians were persecuted by Protestant Dutch. "In 1658 the Dutch Government in Ceylon issued a proclamation punishable with death any person harbouring of giving protection to a Roman Catholic Priest. (P. xxxvii). I shall continue to discuss Kandiyan kings' role in protection and guardianship of religions. I did not bring these quotations to defame the feelings of our Christian brethren at all. Rather I would like to tell the historical facts so that these BBS will know what exactly happened in the past and how Singhalese kings and people supported religions in general without any discrimination and prejudice BBS got now? Where did they inherit this hatred from? True Buddhists and Buddhism are free from all these hatred and narrow-mindedness.




It is argued that since the early periods of colonization Sinhalese Buddhists were subjected to alien cultural onslaught. Indeed, there is no doubt that the Sinhalese Buddhist people were marginalised and deliberately neglected by the colonial powers for different political, economic and religious reasons during colonial periods. While those who converted into Christian faith relatively enjoyed all educational and employment opportunities, the rural Sinhalese Buddhist people were totally neglected during the colonial period particularly during the Portuguese colonial period of Ceylon: Prof. Tennakoon. Vimalananda argues that Portuguese arrival was a Dark Age in Ceylon history.

They changed the cultural heritage of Sri Lankan Buddhist history in very sense. This process of marginalization of Sinhalese continued even during the British rule under the divide and rule policy of British Empire. Anagarika Darmapala raised his voice against this injustice but he went further extreme to spread hatred campaign against minority communities in Sri Lanka. He tried his best to instil and infuse Sinhalese nationalist feeling among Sinhalese public. He was in deed succeeded to some extent in his radical ideas. His speeches and writings were full of hate instigation. This nationalistic campaign was further proclaimed by SW Bandaranayke in 1958 when he made Sinhala as one and only official language of Sri Lanka. This time it was for a pure political reason.

Moreover, after the independence the entire political authority of Sri Lanka was given in the hands of Sinhalese population. As they are the majority of population they have been holing the grip on the political power in Sri Lanka without sharing it with minority communities. It seems that they feel they had been victimised for more than five hundred years in Sri Lanka by successive colonial powers. Now they feel the pinch and wanted to marginalise all minorities for tit for tat stratagem. Even in pre-colonial periods the relation between Sinhalese and Tamils was not that good. This historical enmity once again re-emerged after the independence.



Though Tamil and Muslim members of Parliament are being elected, the fundamental rights, aspiration and needs of these communities are not rightfully met to some extent. Tamil issue is still not being solved. Tamil language has not been yet given any official status, No Tamil/ Muslim members of Parliament has been elected as a PM in Sri Lanka yet, this shows political marginalization of these minorities communities. Moreover, Now Tamil and Muslim culture, language, religious heritage are in a great danger because of the Budu Bala Sena's anti-minorities campaign in recent times. It seems that BBS is following the path of their spiritual Guru and intellectual mentor Anagarika Dharmapala in their anti- minority campaign.

BBS has got many concerns and worries in their minds. Some of these concerns are against the successive Sri-Lanka governments which they claim have failed to protect and promote Buddhism in this country. There are some concerns in the minds of these BBS members about Sinhalese community itself for its failure to follow pure Buddhism in Sri Lanka. They have concerns about economy and population growths of Sinhalese community. Some of them wrongly assume that their race is in the brink of extinction. These are some of the internal concerns of BBS. No doubt these may be genuine concerns of BBS and yet, they should know how to address these concerns in a democratic and polite way in this modern world.

One hand, the minorities are complaining that their culture and religious identity are in danger in Sri Lanka. They argue that after defeating the LTTE Sinhalese people are invading the North and East. Moreover, they are occupying the cultural and religious sites with support of three forces: Sri Lankan army, navy and police. On the other hand, Budu Bala Sena argues that Sinhalese heritage and sacred places are being destroyed in the North-East. They argue that Buddhism and its heritages are danger in all other part of country. BBS feels that their religion, culture and heritage are threaten by all alien religious practices from Muslim, Christian and Hindu cultural invasions while Tamils in North East feel that their culture and religions are invaded by Sinhalese Buddhists.

This is indeed a paradoxical situation. How do we reconcile between these ironical and two countertrading arguments. How do we see these contrasting arguments objectively without bias and subjectivity? Is it true that Buddhist culture and religion are in the brink of extermination and extinction in Sri Lanka as it was claimed by BBS and its cohorts? Is it true that Tamil culture and heritage are being destroyed by Sinhalese in the North East parts of Sri Lanka? To what extent these arguments could be justified and to what extent these arguments are true? Who should be blamed for these ironical situations in Sri Lanka? Who are the people responsible for the decline of Buddhism in Sri Lanka as it is claimed? Is it the politicians? Is it Buddhist monks? These are some of the fundamental questions that BBS and its cohorts should evaluate and gauge objectively. They should not blame other communities for the decline of Buddhism in Sri Lanka rather they should evaluate shortcomings of teaching and preaching methods of Buddhism in Sri Lanka.

Of course, some concerns and worries of BBS are genuine and real. They should address these concerns in proper and professional ways. They should address these concerns in democratic ways rather creating communal disharmony and pandemonium. They should address their concerns and their worries with the ministry of Buddha Sasena. They should address these concerns with the high ranking Buddhist religious authorities in the country. They should address their concern with the administration of the temples in the countries to find some of ways and methods to enhance their religious concepts.

They should not take the laws in their hands to address their concerns. They should not become a religious police to dictate what they want to the entire Sri-Lankan communities. A claim such as Sri-Lanka belongs only to Sinhalese is an unwanted provocation. This could take this country into one more communal conflict between Sinhalese and minorities communities. Just come we come out of 30 years of wars and do we need such a provocative statement once again.

Of course we could agree with BBS in some of their concerns and worries. But those concerns and worries should be national concerns and national interests rather than communal concerns. If they are fighting for the rights

of poor, needy and vulnerable in the communities these concerns and worries are genuine and real. The entire nation should support such a struggle, if they are fighting against all form of corruptions and social injustices we all should support such a good course. If they are fighting against all form of social illness such as drug addition and fraud we all should support them in this good work, if they are fighting against alcoholism and crimes we all should work hand in hand with them in these particular issues.

Yet, when they threat national unity and national interest with their narrow religious bias and discrimination no one could support them rather all minorities would oppose BBS. The racial discrimination and racial prejudice of BBS can not be tolerated and should not prolong in Sri Lanka in the greater interest of this nation. It would be a social and communal suicidal to go on this path of discrimination and hatred. We all know that happened to our venerable monks in South India. Undoubtedly, it was reactionary violence of some Tamil Nadu people against what was going on in Sri Lanka on those days. The Behaviours of some of these BBS people would put communal relation in jeopardy in Sri Lanka.

Radicalism is radicalism and extremism is extremism, whether it comes from Muslims, Christians, Hindus or Buddhists, whether it comes from religious groups or political groups or from any groups, whether it comes from al-Qaeda or Taliban, Whether it come from BBS or for that matter from any religious groups. The radicals and extremists have done more damages and more harm to Islam and Muslims today than any one else. In the same way all forms of radicalism that come from BBS should be rejected.

> ***Look at Muslim history in this country did we do these destruction in Sri Lanka? Did we destroy Buddhist culture? Did we destroy any Buddhists temple? Did we harm any Buddhist monk? Did we destroy any of your sacred places?***

Sri Lanka is blessed with the existence of four major world religions. The different cultural and religious heritage beautifies Sri Lankan Multi-Cultural history. It should not lead to communal and religious conflicts at all. It should enhance our mutual intercultural understanding. Unfortunately, this intercultural understanding is lacking in Sri Lanka today. Our children should learn all four major religions today. Our children should know each other religions faith and practices. This is not indoctrinate one with others faith rather to enhance mutual understanding between different faith groups. Today we live in borderless virtual world. Therefore, we should understand each others' faith and way of life. We should also appreciate other people's way of life. In this way we could avoid social and communal conflict in Sri Lanka.


Do doubt Sri Lanka is one of the unique countries that protect minority rights in socio-religious aspect of minority communities. Minority communities are able to practice their religious faith and practices. They have been offered some special privilege to have their own schools, places of worship and cultural centres. They have been offered freedom to celebrate their own festivals and rituals as they like and indeed official holidays have been offered to all minority communities in Sri Lanka. Sri Lankan constitution is contrived to protect and preserve the right and privileges of minority communities and yet, today BBS is acting against all these basic freedom and privileges and indeed they go against the principles of Sri Lankan constitution.

Look at Muslim history in this country did we do these destruction in Sri Lanka? Did we destroy Buddhist culture? Did we destroy any Buddhists temple? Did we harm any Buddhist monk? Did we destroy any of your sacred places? In stark contrast to this, we were offered protection by Singhalese kings and Singhalese people for our loyalty to this great Island and for our dedication and service for this country: Did we loot resources of this country as all other Europeans did? Why do you spread hatreds against innocent Muslim people for no reasons? Did we do any conspiracy against this nation at any point in Srilankan history and why do you accuse innocent Muslims with false and fake accusations: most of these accusations are unfounded and unsubstantiated? Where is the conscience of your hearts when you come up with these bogus accusations?


1. Bernard Lewis. What Went Wrong: Western Impact and Middle Eastern Response? Phoenix Paperback publication. London. 2002.
2. Lorna. Dewaraja: The Muslim of Srilanka: one Thousand Years of Ethnic Harmony: 900-1915. Lanka Islamic foundation. Colombo.
3. Gaston Perera. The Portuguese in the Orient: International centre for Ethnic studies. Kandy. 2010.
4. Tennkoon. Vimalananda. M.D. Gunasena & Co. LTD. Colombo. 1963.

# எங்களது சிந்தனைகள் மாற வேண்டும். மற்றவர்களின் மனங்களை வெல்ல வேண்டும்!

## கலாநிதி வி. அமீர்தீன்




இலங்கை இனத்துவ அரசியல், அதனுடன் இணைந்த இலங்கை முஸ்லிம் அரசியல் தளத்தில் அக்கறை கொண்டு கடந்த இரு தசாப்தங்களாக செயற்பட்டுவரும் கல்வியலாளர். அரசியல் விஞ்ஞான கற்கைத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்.
பேராதனிய பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றியவர்.

2006ம் ஆண்டு இவரால் வெளியிடப்பட்ட "ETHNIC POLITICS OF MUSLIMS IN SRI LANKA" இலங்கை இனத்துவ அரசியல் சூழலில் முஸ்லிம்களின் அரசியலை முன்னிலைப்படுத்திய நூலாகும். முஸ்லிம் அரசியல் கட்சிகளுடனும் இணைந்து பணியாற்றிய இவர். அண்மைக் காலத்திலிருந்து கனடாவில் வசித்து வருகிறார். ஸ்கைப் மற்றும் மின்னஞ்சல் வழியாக இந்த நேர்காணல் பெறப்பட்டது.

**தொகுப்பு: அப்துல் வாஜித்**

■ **கேள்வி: இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான மிக மோசமான நெருக்கடி உருவாகியுள்ள காலமிது. இந்த சூழல் திடீரென ஏற்படுத்தப்பட்டதா? அல்லது ஏற்கனவே இருந்து வந்த முரண்பாடுகளின் தொடர்ச்சியா?**

***பதில்:*** இலங்கையின் வரலாற்றை நோக்குகின்றபோது முஸ்லிம்களுக்கு எதிரான இத்தகைய வன்முறைகள் இன்று நேற்று துவங்கிய ஒன்று அல்ல என்பது தெளிவாகும். இலங்கை வரலாற்றில் 1915ம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்ந்தப்பட்ட கலவரமே இலங்கையின் முதலாவது இனக் கலவரமாகும். அதனைத் தொடர்ந்து அவ்வப்போது சிங்கள தேசியவாதிகளால் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கலவரங்கள் அக்காலப் பகுதிகளில் வாழ்ந்த உள்ளூர் சிங்கள சமூக அரசியல் தலைமைகளுடன் முஸ்லிம் சமூக, அரசியல் பிரதிநிதிகள் செய்து கொண்ட சமரச முயற்சிகளின் பயனாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டன. ஆனாலும், முஸ்லிம்களுக்கு எதிரான சிந்தனைகள் கடும்போக்கு சிங்கள தேசியவாதிகளின் ஆள்மனதில் தொடர்ந்தேச்சியாக புரையோடிப் போயிருந்தது. குறிப்பாக இலங்கை ஒரு பௌத்த நாடு. அது பௌத்த சிங்களவர்களுக்கு மாத்திரமே சொந்தமான நாடு என்ற சிந்தனை அவர்களுக்குள் வேரூன்றி இருந்தது.

கடந்த மூன்று தசாப்தங்களில் இடம்பெற்று வந்த உள்நாட்டுப் போரின்போது இவர்கள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதிலும், தமிழர்களை ஒடுக்குவதிலுமே தமது கவனக்குவிப்பினை செலுத்தி வந்துள்ளனர். ஆனாலும், யுத்தம் ஒய்ந்து நாட்டில் ஒரு சுமூகமான சூழல் உருவான சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டவிழ்த்தே வந்துள்ளனர். இதற்கு உதாரணமாக கடந்த 2002ம் ஆண்டு ரணில் - பிரபாகரன் ஒப்பந்தத்துக்கு அமைவான சமாதானச் சூழ்நிலையில் முஸ்லிம்களுக்கு எதிராக மாவனல்லை மற்றும் கொழும்பின் சில பிரதேசங்களில் நிகழ்த்தப்பட்ட கலவரங்களைக் குறிப்பிடலாம். இன்று நாட்டில் யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இந்த பௌத்த இனவாத சக்திகள் முஸ்லிம்களுக்கு எதிரான தமது இன ஒடுக்குதல்களை மேற்கொள்வதற்கு எதுவித தடைகள்

இல்லாததும், சுதந்திரமானதுமான ஒரு சூழல் இருப்பதாக உணர்கிறார்கள். அதன் அடிப்படையிலேயே பொது பல சேனாவும், சிங்கள ராவய, ராவணா பலய போன்ற இனவாத சக்திகள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

■ **கேள்வி: இந்த நெருக்கடிகளின் உருவாக்கத்திற்கான அரசியல், கலாசார, பொருளாதார பின்னணிகள் என்னவென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?**

***பதில்:*** இவ்வாறான ஒரு நெருக்கடி நிலை உருவாகுவதற்கு ஒரு பக்கத்தில் முஸ்லிம் சமூகம்சார் அரசியல், கலாசாரம், பொருளாதாரம் ஆகிய அனைத்துமே கணிசமானளவு பங்களிப்புச் செய்துள்ளன என்பதனை நாம் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். எமது அரசியலை எடுத்துக்கொண்டால், தனியானதும் தனித்துவமானதுமான அரசியலைச் செய்வதாகக் கூறிக்கொள்ளும் சக்திகள் யாரும் தேசிய ரீதியான நலன்களையும், நாட்டின் குடிமக்களின் பெரும்பான்மையோரின் விருப்பங்களையும் கவனத்திற் கொண்டு செயற்பட தவறியே வந்துள்ளனர்.

எப்போதும் பதவிகளையும், தனிநபர் அதிகாரங்களையும் முன்னிறுத்தியே அரசியல் செய்து வந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் காலப்போக்கில் தமக்கிடையேயான பதவி, அதிகாரங்களுக்கான போட்டியில் பிளவுபட்டு ஒவ்வொருவரும் பிராந்திய ரீதியாகவும், பிரதேச வாரியாகவும் தமக்கான அரசியல் தளங்களை வளர்த்துக் கொண்டு அதனடிப்படையில் தமது அரசியலை செய்து வருகின்றனர். இவர்களின் சொந்த அரசியலுக்காக நாட்டினுடைய பொது நிதியை வீணடிக்கின்றனர். 30 வருட யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு வறுமைக்குள் தள்ளப்பட்டிருக்கும் அனைத்து சமூக மக்களாலும் இது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகவே பார்க்கப்பட்டு வருகின்ற நிலையிலும், நாட்டில் யுத்தம் முடிவடைந்து பெரும்பான்மை சமூகத்தவர்கள் வெற்றி பெற்ற களிப்பில் உள்ள நிலையிலும் அவர்களது கவனம் எமது அரசியல்வாதிகளின் இனம், பிரதேசம் சார்ந்த சுயநல அரசியலுக்கெதிராக திரும்பியுள்ளது என்பது கசப்பான உண்மையாகும்.

கலாசார ரீதியான பின்னணிகளைப் பொறுத்தமட்டில் இலங்கை முஸ்லிம்களிடையே கலாசார ரீதியான விழிப்புணர்வும் அதன் தாக்கமும் *1980*களில் ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சியை அடுத்தே ஆரம்பமாகியது என்று கருதுகின்றேன். இதனையடுத்து இலங்கையில் வளர்ச்சி பெற்ற இஸ்லாமிய அழைப்புப் பணி தொடர்பான இயக்கங்கள், அவை எந்த நாடுகளில் உருவாக்கம் பெற்றனவோ அந்த நாடுகளின் ஆடை அணிகலன் முறைகளையே எமது கலாசார ஆடை அணிகலன்களாக இலங்கையிலும் அறிமுகம் செய்தனர். பல் சமூகங்கள் வாழ்கின்ற ஒரு கலாசாரச் சூழலில் எமது கலாசார அலகுகளைப் பாதுகாப்பதற்கான ஒரு ஏற்பாடாக இதனை நடைமுறைப்படுத்தினர். ஆனால் மற்றைய சமூகத்துக்குள் உள்ள சில பிரிவினர் இதனை சந்தேகத்துடனும், அச்சத்துடனுமே நோக்கினர். சில வேளைகளில் இத்தகைய கலாசார அடையாளங்களைப் பின்பற்றும் முஸ்லிம்களுள் சிலர் ஏனைய சமூக அங்கத்தவர்கள் மத்தியில் நடந்து கொள்கின்ற விதமும் இத்தகைய கலாசார அடையாளங்களுக்கு எதிராக அவர்களைத் தூண்டிவிடக் காரணமாக அமைந்துள்ளது.

இன்னொரு புறம் வீதிக்கு வீதியாக நாளாந்தம் முளைத்து வரும் பள்ளிவாசல்களும், மார்க்க கல்லூரிகளின் அதிகரிப்பும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. முன்பு முழு நாட்டுக்குமே விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய நிலையிலிருந்த இத்தகைய கல்லூரிகளின் எண்ணிக்கை தற்போது ஒவ்வொரு ஊருக்கும் ஒன்று அல்லது இரண்டு என்ற எண்ணிக்கையில் அதிகரித்துக் காணப்படுகிறது. இவ்வாறான நிறுவனங்களின் அதிகரிப்பும், அதிலிருந்து வெளியேறும் மார்க்க அறிஞர்களின் எண்ணிக்கையும் சிங்கள மக்களுள் ஒரு பிரிவினரால் தமது பௌத்த நாட்டுக்கு பாரிய அச்சுறுத்தலாகப் பார்க்கப்படுகிறது. அதேவேளை இன்று பல மத்திய கிழக்கு நாடுகளில் இடம்பெற்று வருகின்ற புரட்சியும் இலங்கையிலும் இத்தகைய ஒரு அச்சுறுத்தல் உள்நாட்டு முஸ்லிம்களால் ஏற்படுத்தப்பட்டு விடுமோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் அடிப்படையிலேயே முஸ்லிம்களின் கலாசார அடையாளங்கள் மீதான பௌத்த பேரினவாதிகளின் தாக்குதல் அமைகின்றது.

பொருளாதார பின்னணிகளைப் பொறுத்தமட்டில் இலங்கை முஸ்லிம்கள்



**தனியானதும் தனித்துவமானதுமான அரசியலைச் செய்வதாகக் கூறிக்கொள்ளும் சக்திகள் யாரும் தேசிய ரீதியான நலன்களையும், நாட்டின் குடிமக்களின் பெரும்பான்மையோரின் விருப்பங்களையும் கவனத்திற் கொண்டு செயற்பட தவறியே வந்துள்ளனர்.**

வியாபாரத்தையே தம் பிரதானமான தொழிலாகக் கொண்டு இயங்குவதும், அதனையொட்டிய சில முஸ்லிம் வர்த்தகர்களின் ஆடம்பர வாழ்க்கை முறையும் சிங்கள பௌத்த மக்களுள் உள்ள ஒரு சில வர்த்தகப் பிரிவினருக்கு உறுத்தலாக அமைந்து விட்டுள்ளது. இதனடிப்படையிலேயே சிங்கள பௌத்த தீவிரவாத அமைப்புக்களுக்கு அவர்களால் நிதியுதவிகள் வழங்கப்பட்டு முஸ்லிம்களின் வியாபார இலக்குகள் மீது தாக்குதல்களுக்கு தூபமிடப்படுகின்றன. இவ்வாறான தாக்குதல்களை சில சாதாரண அப்பாவி சிங்கள பௌத்த மக்களும் நியாயம் காண்பதற்கு எமது சில முஸ்லிம் வர்த்தகர்களின் நேர்மையற்ற வியாபார முறைமையும், நாணயமற்ற தன்மையும் காரணமாக அமைந்துள்ளன. அவர்கள் அடிக்கும் கொள்ளை இலாபம் தமக்கெதிராகவே செலவு செய்யப்படுவதான ஒரு தோற்றப்பாட்டினையும் சிங்களவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய அரசியல், கலாசார, பொருளாதார பின்னணிகளே இன்றைய நெருக்கடிகளுக்கு குறிப்பிடத்தக்க பின் காரணிகளாகவும் அமைந்துள்ளன.

■ **கேள்வி: இந்த நெருக்கடி நிலையை உருவாக்கியதில் சம்பந்தப்படும் தரப்புகளாக யார் இருக்கிறார்கள் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?**

**பதில்:** இந்த நெருக்கடி நிலையை உருவாக்கியதில் பல்வேறு தரப்புகள் சம்பந்தப்பட்டுள்ள போதிலும் முஸ்லிம்களுக்குள் இருக்கின்ற முஸ்லிம்களே பெரும்பங்கினை வகித்துள்ளனர். உதாரணமாக எமது அரசியலை எடுத்துப் பாருங்கள். மஹிந்த ஆட்சிக்கு வந்து விடக்கூடாது எனப் பேசுபவர்களே பின்னர் தமது பொருளாதார நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும், பதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் மஹிந்தவுடன் போய் சேர்கின்றார்கள். இவ்வாறு எமது அரசியல்வாதிகளின் தனிப்பட்ட நலன்களுக்காக முஸ்லிம் அரசியலின் ஸ்திரத் தன்மை இல்லாமல் செய்யப்படுகின்றபோது அது முஸ்லிம்களுடன் குரோதம் பாராட்டுபவர்களுக்கு முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடாத்துவதற்கான சந்தர்ப்பத்தினை இலகுவாக்கிக் கொடுக்கின்றது. சிங்கள சமூகத்துள்ளும், ஏனைய சமூகத்தவர்கள் மத்தியிலும் முஸ்லிம்கள் தொடர்பான காழ்ப்புணர்வுகள் இருக்கின்ற போதிலும் எமது சமூகத்துக்குள் இருந்து வெளிப்படுகின்ற அரசியல், கலாசார ரீதியான பேச்சுக்கள் மற்றும் வியாபார கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான நடத்தைகள் பெரும்பான்மை சமூகத்தவர்கள் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பான எதிர்மறையான ஒரு மனோநிலையையே தோற்றுவித்துள்ளது. தற்போதைய அரசாங்கமும், ஆட்சியை நிர்வாகம் செய்கின்ற செயலாளர்களும் இச்சந்தர்ப்பத்தினை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை திரைமறைவில் இருந்து கொண்டு வழி நடாத்துகின்றனர்.

■ **கேள்வி: அரசாங்கம் இந்த நிலைமைகளைக் கையாள்வதில் பொறுப்புடன் நடந்துகொண்டுள்ளதா?**

**பதில்:** இந்நிலைமைகளைக் கையாள்வதில் அரசாங்கம் ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடந்து கொண்டுள்ளது. அநுராதபுரத்திலே பள்ளியை உடைத்தார்கள், தம்புள்ளையில் பள்ளிவாசலைத் தாக்கினார்கள், கொழும்பிலே பெஷன் பக் எனும் வியாபார நிலையத்தைத் தாக்கினார்கள். மிக அண்மையில் கொழும்பு நகரில் கிரேன்பாஸ் எனும் இடத்தில் இருந்த பள்ளிவாசல் ஒன்றை நூற்றுக் கணக்கான சிங்கள இனவாதிகள் பொலிஸாரின் முன்னிலையில் தாக்கியிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் அரசாங்கம் நினைத்திருந்தால் ஒரு அரை மணித்தியாலத்தினுள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்க முடியும். ஆனால் அரசாங்கம் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டு மட்டுமே நின்றது. இதன் மூலம் அரசாங்கம் மௌனமாக இருந்து கொண்டு இனவாதிகளுக்கு ஆதரவு வழங்குகின்றது. இனவாதிகளும் உற்சாகம் பெற்றுள்ளார்கள். இதுபற்றி இன்று வரை முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கத்திடம் கேட்கின்றார்கள். ஆனால் அரசாங்கம் இதுவரை அவர்களுக்கு பதிலளித்ததாகவோ அல்லது பொறுப்புணர்ச்சியுடன் ஏற்றுக் கொண்டதாகவோ தெரியவில்லை.

இதனை இன்னும் ஆழமாகப் பார்ப்பதாக இருந்தால் நாட்டில் இருந்த மிகப் பலம் பொருந்திய ஒரு கெரில்லா இயக்கத்தையே அழித்தொழித்த பாதுகாப்பு பிரிவினரும், அவர்களது உளவுப் பிரிவினரும் சிங்கள பௌத்தர்களுக்குள் உருவாகியிருக்கும் இத்தகைய இனவாத சக்திகள் தொடர்பாகவும், அவர்கள் மேற்கொள்கின்ற வன்முறைகள் தொடர்பாகவும் எதுவுமே தெரியாதவர்களாக இருந்திருக்கின்றார்கள் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. அவர்களுக்கு எல்லாமே தெரிந்துதான் நடந்தேறியிருக்கின்றன. இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும்போது அரசாங்கம் இவ்விடயத்தில் பொறுப்புடன் செயற்படத் தவறியுள்ளது என்பது மாத்திரமல்லாது இந்த பௌத்த சிங்கள இனவாதிகளுக்கு சார்பாக செயற்படுகிறது என்றுதான் கூற வேண்டும்.

■ **கேள்வி: இன்றைய முஸ்லிம் தலைமைகள், அவர்களது செயற்பாடுகள் குறித்த உங்களின் அவதானம் என்ன?**

**பதில்:** இன்றைய முஸ்லிம் அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசியல் ரீதியான எதுவித எதிர்கால சிந்தனையு மற்றவர்களாகத்தான் காணப்படுகின்றார்கள். ஆரம்ப கால முஸ்லிம் தலைவர்கள் எல்லாம் பொதுவாக முஸ்லிம்களுக்கு என்றுதான் பேசியிருக்கின்றார்கள், சேவை செய்திருக்கின்றார்கள். அவர்கள் வடக்கு முஸ்லிம்களுக்கு என்றோ அல்லது கிழக்கு முஸ்லிம்களுக்கு என்றோ அல்லது வேறேதும் குறித்த ஒரு பிரதேசத்துக்கு என்றோ பேசவில்லை. ஆனால் இன்றைய முஸ்லிம் அரசியல் தலைமைகள் அப்படியல்ல. குறித்த ஒரு பிராந்தியத்துக்கும், பிரதேசத்துக்கும் என்று அரசியல் செய்கின்றார்கள். இது ஒரு நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் அல்ல. எமது அரசியல்வாதிகளின்

இனம், பிராந்தியம், பிரதேசம் சார்ந்த அரசியலோடு பெரும்பாலான சிங்களவர்கள் முரண்படுகின்றார்கள்.

மிக அண்மைக்காலம் வரை விடுதைப்புலிகளின் தயவில்தான் எமது அரசியல்வாதிகள் அரசியல் செய்து வந்திருக்கின்றார்கள். அதாவது எமது உயிர்களுக்கு பாதுகாப்பில்லை, புலிகள் கொல்வார்கள், உடமைகளுக்குப் பாதுகாப்பில்லை, எமது வாழிடங்களில் இருந்து நாம் விரட்டியடிக்கப்படும் அபாயங்கள் உள்ளன என்றெல்லாம் கூறித்தான் தமது அரசியலை செய்து வந்திருக்கின்றார்கள். இவற்றை வைத்தே தமது நலன்கள் சார்ந்த அரசுகளுடனான கூட்டணிகளை அமைத்து அவற்றை நியாயப்படுத்தியும் வந்துள்ளனர். ஆனால் இன்று நிலைமை முற்றிலும் மாறியிருக்கிறது. எல்லோரும் ஒரு தீர்வை நோக்கிய அரசியலை செய்து வருகின்றபோது இது தொடர்பான எதுவித திட்டங்களோ அல்லது அணுகுமுறைகளோ இல்லாத ஒரு அரசியல் தலைமைத்துவமாகத்தான் இன்றைய முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் காணப்படுகிறது. ஜெனீவாவிலே பேசுகின்றபோது முஸ்லிம்களுக்கான தீர்வு திட்ட ஆலோசனைகள் தம்மிடம் இருப்பதாகக் கூறினார்கள். ஆனால் அது என்னவென்று கடைசி வரையும் அவர்கள் கூறவேயில்லை. விடுதலைப்புலிகள் தமது ஆலோசனைகளை முன்வைக்கட்டும் அதன் பிறகு எமது ஆலோசனைகளை முன்வைக்கின்றோம் என்று வெறுமனே காலத்தை கடத்திக் கொண்டிருந்தார்கள். ஆக வரும்போது பார்த்துக் கொள்வோம் என்கிற ஒரு சமாளிப்பு அரசியல்தான் இவர்களிடம் காணப்படுகிறது. அதாவது முன்கூட்டியே எவ்வாறு தங்களை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும் என்ற திட்டம் முஸ்லிம் தலைமைகள் யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

■ **கேள்வி: முன்கூட்டியே தங்களை ஒழுங்கமைத்துக் கொண்டு அரசியல் செய்வது என்பதை விடவும் நிலைமைகளைச் சமாளித்து எவ்வாறு தத்தமது சுயநலன்களை அடைந்து கொள்வது என்பதை ஒட்டிய அரசியலை செய்கின்றார்கள் என்பது இதன் அர்த்தமா?**

**பதில்:** ஆம். ஆனாலும் தற்போது அவர்கள் அதிலும் தோல்வியையே சந்தித்து வருகின்றார்கள். உதாரணத்துக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை எடுத்துக் கொள்ளுங்கள். தற்போது அவர்கள் அரசாங்கத்திலும் அங்கம் வகிக்கின்றார்கள். முக்கியமான அமைச்சுப் பொறுப்புக்களையும் வகிக்கின்றார்கள். ஆனாலும் அரசாங்கத்தின் திட்டங்கள் தொடர்பான எந்தவொரு மந்திராலோசனைகளுக்கும் இவர்கள் உள்வாங்கப் படுவதில்லை. தற்போது 13வது திருத்தச் சட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக ஒரு தெரிவுக் குழுவை அமைத்திருக்கின்றார்கள். அதிலும் அவர்களுக்கு இடமில்லை. இதுவெல்லாம் அவர்களது அரசியல் அணுகுமுறைகளில் உள்ள பலவீனத்தையே காட்டுகின்றது. இவர்களது அரசியல் அணுகுமுறைகளிலுள்ள பலவீனங்களை தற்போதைய அரசு நன்கு புரிந்து கொண்டே விடயங்களை நகர்த்திக் கொண்டு செல்கிறது.



**மிக அண்மைக்காலம் வரை விடுதைப்புலிகளின் தயவில்தான் எமது அரசியல் வாதிகள் அரசியல் செய்து வந்திருக்கின்றார்கள். அதாவது எமது உயிர்களுக்கு பாதுகாப்பில்லை, புலிகள் கொல்வார்கள், உடமைகளுக்குப் பாதுகாப்பில்லை, எமது வாழிடங்களில் இருந்து நாம் விரட்டியடிக்கப்படும் அபாயங்கள் உள்ளன என்றெல்லாம் கூறித்தான் தமது அரசியலை செய்து வந்திருக்கின்றார்கள். இவற்றை வைத்தே தமது நலன்கள் சார்ந்த அரசுகளுடனான கூட்டணிகளை அமைத்து அவற்றை நியாயப்படுத்தியும் வந்துள்ளனர்.**

■ **கேள்வி: இலங்கை முஸ்லிம்கள் தற்போதைய நிலை குறித்து என்ன கருதுகின்றார்கள்? அவர்களது மனோ நிலையை எப்படி நீங்கள் உணர்கிறீர்கள்?**

**பதில்:** அங்கு வாழ்கின்ற சாதாரண முஸ்லிம்கள் மிகுந்த அச்சத்துடன் வாழ்கின்றார்கள். நாளை எமக்கு என்ன நடக்கும்? எமக்கான பாதுகாப்பை யார் உத்தரவாதம் செய்து தருவார்கள்? போன்ற வினாக்களுடனும் சந்தேகங்களுடனுமே வாழ்ந்து வருகின்றார்கள். உதாரணமாக எமது நாட்டில் இறைச்சிக் கடை என்பதும், இறைச்சி உணவு சாப்பிடுவது என்பதும் முஸ்லிம் பிரதேசங்களிலும், முஸ்லிம்களின் வாழ்க்கை முறையிலும், அவர்களின் உணவுப் பழக்கங்களிலும் ஒன்றிப்போன விடயம். இன்று திடீரென இறைச்சிக் கடைகள் வைக்கக்கூடாது. இறைச்சி சாப்பிடக்கூடாது என்றெல்லாம் தடை செய்ய முயற்சிக்கின்றபோது அவர்கள் நாளை இதைவிட மோசமான செயற்பாடுகளும் தமக்கெதிராக இடம்பெறலாம் என்ற அச்சத்துடன் வாழ்கின்றார்கள். நாளை எமது பள்ளிவாசல்களுக்கு பாதுகாப்புத் தருவது யார்? எங்களுடைய பெண் பிள்ளைகள் பர்தாவுடன் வீதிகளில் பாதுகாப்பாக நடந்து செல்வதற்கான உத்தரவாதத்தினைத் தருவது யார்? போன்ற வினாக்களுடனும் மன உளைச்சலுடனும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இன்று அவர்கள் இத்தகைய மன உளைச்சலில் இருந்தும், அச்சத்திலிருந்தும் தம்மை விடுதலை செய்கின்ற ஒரு மாற்றீடான தலைமைத்துவத்தின் தேவையை உணர்ந்து அதனை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

■ **கேள்வி: இலங்கை முஸ்லிம்களுக்குள் மாற்று அரசியலுக்கான ஒரு தேவை இருக்கிறது. ஆனால் அத்தளத்தினைக் கட்டியெழுப்புவதில் பெரும் தேக்கமும் சிக்கலும் உள்ளது. இது தொடர்பில் உங்களது கருத்து என்ன?**

**பதில்:** இந்த மாற்றீடான தலைமைத்துவத்தினைக் கட்டியெழுப்புகின்ற கடப்பாடு அரசியல்

ஸ்தாபனங்களுக்கும், மார்க்க ரீதியான நிறுவனங்களுக்கும் இருக்கின்றன. சிலவேளை இத்தகைய சரியான ஒரு மாற்றீடு வழங்கப்படாத பட்சத்தில் சில மத ரீதியான இயக்கங்கள் முஸ்லிம்களைத் தவறாக வழி நடாத்துவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. ஏனெனில் ஒவ்வொரு இயக்கங்களும் தமக்கென கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் கொண்டிருப்பதோடு தத்தமது இயக்கங்களைப் போசிக்கின்ற நாடுகளின் கொள்கைகளை உள்வாங்கி அவற்றை நடைமுறைப்படுத்த உதவுபவர்களாகவும் இருக்கின்றார்கள். இவ்வாறானவர்கள் முஸ்லிம்களின் இன்றைய நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு நிலைமைகளைக் கையாள முற்படுவார்களாயின் அது தற்போதைய நெருக்கடி நிலையை மேலும் சிக்கலாக்குவதோடு, முஸ்லிம்களைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்து அவர்களை மேலும் மேலும் பலவீனப்படுத்தி நெருக்கடிக்குள் தள்ளி விடுவதாகவே அமையும். எனவே முஸ்லிம்களுக்கு ஆன்மீக ரீதியான தலைமைத்துவத்தினை வழங்குகின்ற நிறுவனங்களும், சிவில் சமூக மற்றும் அரசியல் அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஒரு வேலைத் திட்டத்துடனும், பொதுமைப்படுத்தப்பட்ட அடையாளத்துடனும் இயங்குவதே சிறந்த ஒரு அணுகுமுறையாக அமையலாம். தனிநபர், அமைப்பு, கட்சி, பிராந்திய, பிரதேச நலன்களுக்கு அப்பால் தூர நோக்குடன் செயற்படுவது இதன் அடிப்படை நிபந்தனையாக இருத்தல் வேண்டும்.

■ **கேள்வி: முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பில் சிங்கள - தமிழ், அரசியல் சமூக அமைப்புக்களின் பங்களிப்பு எந்தளவில் உள்ளன? இது தொடர்பான எதிர்பார்ப்புக்கள் முஸ்லிம் சமூக சக்திகளிடம் உள்ளனவா?**

**பதில்:** சிங்கள - தமிழ் சமூகங்களுக்குள் உள்ள நேர்மையான, முற்போக்கான சக்திகள் எமது பிரச்சினையில் அக்கறையுடையவர்களாக இருக்கின்றார்கள். முஸ்லிம்களுக்கு எதிரான இந்தப் பிரச்சினை அரசியலிலே இருக்கின்ற ஒரு பிரிவினருக்கே தேவையானதாக உள்ளது. ஆனால் பெரும்பான்மையான சிங்கள மக்களோ அல்லது தமிழ் மக்களோ இதனை விரும்பவில்லை. சிங்களவர்களுக்குள் இருக்கின்ற பெரும்பாலான சிவில் சமூக அமைப்புக்களும், மனித உரிமை அமைப்புக்களும், புத்திஜீவிகளும் முஸ்லிம்களுக்கு எதிரான இந்த வன்முறைகளுக்கு எதிராக பேசியும், அதனைக் காரசாரமாகக் கண்டித்தும் வருகின்றனர். இவற்றைப் புரிந்து கொண்டு, இத்தகைய முற்போக்கான சக்திகளை இணைத்துக் கொண்டு ஒரு வேலைத் திட்டத்தில் இயங்குவதற்கான ஒழுங்கு எம்மிடம் இல்லாதது ஒரு துரதிஷ்டவசமாகும். இத்தகையதொரு பொது நிகழ்ச்சி நிரலில் இணைந்து வேலை செய்வதற்கு ஏனைய சமூகங்களுக்குள் இருக்கின்ற முற்போக்கான சக்திகளுக்கு தடைகள் உள்ளன. கடந்த மூன்று தசாப்தங்களாக எமது அரசியல் தலைமைகள் செய்துவந்த அரசியலின் விளைவாக இலங்கை முஸ்லிம்கள் நம்பத் தகுந்த ஒரு சமூகம் அல்ல என்றதொரு தோற்றப்பாட்டினை அவர்களின் மனங்களில் விதைத்திருக்கின்றோம். எனவே அவர்களின் மனங்களில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி புரிந்துணர்வுடன் கூடிய அரசியலைச் செய்வதற்கான ஒரு ஒழுங்கு இன்று முஸ்லிம்களுக்கு தேவைப்படுகின்றது.

இன்று தமிழ் அரசியல் தலைவர்கள் எமக்கெதிரான பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்றார்கள். ஊடகங்களிலும், மாகாண சபையிலும், பாராளுமன்றத்திலும் பேசுகின்றார்கள். இலங்கைக்கு வெளியே புலம்பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளில் வாழும் தமிழர்களும் எமக்கெதிரான அநீதி பற்றிக் குரல் எழுப்புகின்றார்கள். அவர்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. 40 வருடங்களாக சந்தித்த இழப்புக்கள் இருக்கின்றன. அவ்வாறு இருந்தும் அவர்கள் இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களுக்கு எதிரான அநீதிகளுக்கு எதிராகப் பேசுகின்றார்கள். எனவே முஸ்லிம்களாகிய நாம்தான் மாற வேண்டிய நிலையில் இருக்கின்றோம். முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்து தமது அரசியலைக் கட்டியெழுப்புவதா? அல்லது சிங்களவர்களுடன் இணைந்து தமது அரசியலைக் கட்டியெழுப்புவதா? என்பது தொடர்பில் முஸ்லிம்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் முஸ்லிம்கள் செறிந்து வாழ்வதால் இவ்வாறான ஒரு அரசியலைக் கட்டியெழுப்புவதில் சிக்கல்களும் உள்ளன. முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்துதான்



**கடந்த மூன்று தசாப்தங்களாக எமது அரசியல் தலைமைகள் செய்து வந்த அரசியலின் விளைவாக இலங்கை முஸ்லிம்கள் நம்பத் தகுந்த ஒரு சமூகம் அல்ல என்றதொரு தோற்றப்பாட்டினை அவர்களின் மனங்களில் விதைத்திருக் கின்றோம். எனவே அவர்களின் மனங்களில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி புரிந்துணர்வடன் கூடிய அரசியலைச் செய்வதற்கான ஒரு ஒழுங்கு இன்று முஸ்லிம்களுக்கு தேவைப்படுகின்றது.**

தமது அரசியலைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றிருந்தால் அது வடக்கு கிழக்கில் மாத்திரம்தான் சாத்தியமானதாகவிருக்கும். அல்லது சிங்களவர்களுடன் இணைந்துதான் தமது அரசியலைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றிருந்தால் நாம் இன்னொரு சமூகத்தை விட்டு வெளியே போய் விடுவோம்.

எனவே இது தொடர்பில் முஸ்லிம்களுக்கு ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கின்றது. நாம் எல்லோரும் இந்த தமிழ் பயங்கரவாதத்தால் நேரடியாகப் பாதிக்கப் பட்டிருக்கின்றோம். ஆனாலும் நாம் ஒன்றை மறந்து விடமுடியாது. அதாவது எம்மோடு பின்னிப் பிணைந்து வாழ்கின்ற தமிழ்ச் சமூகம் தமது அரசியல் உரிமைகள் தொடர்பான போராட்டத்தில் ஒடுக்கப்பட்டு, மிகவும் பின்தள்ளப்பட்டு அவர்களும் தமக்கு எதுவிதமான அரசியல் உரிமைகளும் கிடைக்காத நிலையில் உள்ளபோது முஸ்லிம்கள் அது தொடர்பாகப் பேசாமல், அவர்களுடன் சேராமல், அவர்களை ஒதுக்கித் தள்ளி விட்டு முஸ்லிம்கள் மட்டும் தமக்கான அரசியலை தனியாக செய்து கொண்டு செல்லலாம் என்பது எவ்வளவு தூரம் சாத்தியமானதும், தார்மீகமானதும் என்று விளங்கவில்லை. எனவே எங்களது சிந்தனைகள் மாற வேண்டும். மற்றவர்களின் மனங்களை வெல்ல வேண்டும். அதன் மூலமான ஒரு இணக்கப்பாட்டு அரசியலே இன்று முஸ்லிம்களுக்கு இருக்கின்ற சாத்தியமான தேர்வாகும்.

■ **கேள்வி: இவ்வாறானதொரு இணக்கப்பாட்டு அரசியலைச் செய்வதற்கான சாத்தியம் முஸ்லிம்களின் பெரும்பான்மையானவர்களின் ஆதரவினைப் பெற்ற ஒரு கட்சி என்ற வகையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு அதிகம் இருக்கின்றது என நீங்கள் கருதுகின்றீர்களா?**

***பதில்:*** முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை வட கிழக்கிலே தமிழ் அரசியல் தலைமைகளுடன் இணைந்து இணக்கப்பாட்டுடனான அரசியலைச் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே இருந்தன. ஆனாலும் அவர்கள் அதை நழுவ விட்டு விட்டார்கள். வெளிப்படையாகச் சொல்வதானால் கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுக்கு நல்லதொரு வாய்ப்பு இருந்தது. அதன் மூலம் தமிழ் - முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்புவதற்கு இருந்த சந்தர்ப்பத்தினையும் மாகாண சபையினூடாக முஸ்லிம்களின் உரிமைகளை ஓரளவேனும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இருந்த வாய்ப்பினையும் அவர்கள் தவறவிட்டு விட்டார்கள். அந்த தவறை அவர்கள் செய்ததால்தான் அரசு அவர்களின் சரணாகதி அரசியலை நன்கு விளங்கி அவர்களைத் தெரிவுக் குழுவில் இருந்தும் புறக்கணித்துள்ளார்கள். அன்று மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் செய்த 'அடையாளமிடப்பட்ட மாகாண சபை' அரசியலை இவர்கள் சாதிக்கத் தவறியுள்ளனர். அன்று அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து இதனைச் சாதித்திருந்தால் இலங்கையினதும், இலங்கை முஸ்லிம்களதும் அரசியல் வேறு ஒரு பரிமாணத்துக்குச் சென்றிருக்கும். இதைக் கையாள்வதில் முஸ்லிம் அரசியல்வாதிகள் விலை போயிருக்கின்றார்கள் என்றுதான் கூற வேண்டும்.



**எங்களது சிந்தனைகள் மாற வேண்டும். மற்றவர்களின் மனங்களை வெல்ல வேண்டும். அதன் மூலமான ஒரு இணக்கப்பாட்டு அரசியலே இன்று முஸ்லிம்களுக்கு இருக்கின்ற சாத்தியமான தேர்வாகும்.**

இன்று சர்வதேச அரசியல் இலங்கை அரசியலுக்குள் ஊடுருவியிருக்கின்றது. அது அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சீனா அல்லது இந்தியா எந்த நாடாக இருந்தாலும் இன்று அவர்கள் தமது அணிசேராக் கொள்கைகளுக்குப் புறம்பாக இலங்கைக்குள் அரசியல் செய்வதற்குக் காரணம் இன்று நாட்டிலுள்ள அரசியலில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு இருந்த சந்தர்ப்பங்களில் இருந்து முஸ்லிம் அரசியல் தலைமைகள் பின்வாங்கியதுதான். இறுதியாக நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தமது பொறுப்பினை மிகச் சரியாகச் செய்திருந்தால் இன்றைய பூகோள அரசியலில் கிழக்கு மாகாண அரசியல் ஒரு காத்திரமான இடத்தினை வகித்திருப்பதற்கான வாய்ப்பு இருந்தது.

இதனை நாம் இன்னொரு வகையில் பார்ப்போமானால், இன்றைய முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு உள்ள பலவீனம் அவர்களுக்கு மத்திய அரசைப் பகைத்துக் கொண்டு அரசியல் செய்து பழக்கம் கிடையாது. முஸ்லிம் மக்களும் தமது தலைவர்கள் மத்திய அரசில் அமைச்சுப் பதவிகளை வகிப்பதனையும், பரிவாரங்களுடன் வலம் வருவதனையும், மத்திய அரசிலிருந்து அவர்கள் தமக்கு வேண்டிய சில சலுகைகளைப் பெற்றுத்தர வேண்டும் என்பதனையும் விரும்புகின்றார்களே தவிர எதிர்க் கட்சிகளுக்குள் இருக்கின்ற முற்போக்கு, ஜனநாயக சக்திகளுடன் இணைந்து அரசியல் செய்வதற்கு ஆயத்தமில்லை. இத்தகைய மனோ நிலையில் இருந்து முஸ்லிம் சமூகம் விடுபட வேண்டும்.

■ **கேள்வி: சர்வதேச நாடுகள் இலங்கைக்குள் தமது பூகோள அரசியலை முன்னெடுப்பதாகச் சொன்னீர்கள். அது எப்படி என்று சற்று விளக்கமாகச் சொல்ல முடியுமா?**

**பதில்:** ஆம். இன்று ஒவ்வொரு நாடும் தத்தமது உள்நாட்டு நலன்களின் அடிப்படையில் இலங்கைக்குள் தமது பூகோள அரசியலைச் செய்து வருகின்றார்கள். அவுஸ்திரேலியா ஏன் இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் என்றால் இலங்கையிலிருந்து அகதிகளை ஏற்றிக் கொண்டு படகுகள் அவுஸ்திரேலியாவுக்குள் வருவதைத் தடுக்க வேண்டுமாக இருந்தால் இது விடயத்தில்

இலங்கை அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற நோக்கில் ஆதரவு வழங்குகின்றார்கள். பிரித்தானியா அந்நாட்டிலே வாழ்கின்ற இலட்சக் கணக்காண இலங்கை அகதிகளை அவர்களின் நாட்டுக்கு திருப்பி அனுப்ப வேண்டுமாக இருந்தால் இலங்கையில் இருக்கின்ற பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். கனடாவைப் பொறுத்தவரை அங்கு வாழ்கின்ற இலட்சக் கணக்கான இலங்கைத் தமிழர்களின் வாக்குகளைப் பெற வேண்டும் என்ற நோக்கில் இலங்கைக்கு ஆதரவு வழங்காமல் இருக்கின்றார்கள். அதேபோல் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் இலங்கைக்கு ஊடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய விடயங்களின் நிமித்தம் இலங்கைக்குள் அரசியல் செய்கின்றார்கள். கடந்த மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்திருக்கும் பட்சத்தில் இவை அனைத்து நாடுகளும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமது திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்ற விடயம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமையுடன் அவசியம் பேச வேண்டிய நிர்ப்பந்தத்தினை உருவாக்கியிருக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள பேரினவாதிகளின் அத்துமீறல்கள் தொடர்பாக இந்நாடுகள் ஊடாக இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான உபாயங்களைச் செய்திருக்க முடியும். இவை அனைத்தையும் இவர்கள் இன்று இல்லாமல் செய்து விட்டிருக்கின்றார்கள்.

■ **கேள்வி: இன்றைய நிலையில் புலம்பெயர் அமைப்புக்கள், மக்களின் பொறுப்புகள், செயற்பாடுகள் தொடர்பாக இலங்கையில் நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் முஸ்லிம்கள் எதனை எதிர்பார்க்கின்றார்கள்?**

***பதில்:*** இலங்கைத் தீவுக்கு வெளியே புலம் பெயர்ந்து வாழ்கின்ற நபர்களுக்கும், அமைப்புகளுக்கும் மிகப் பெரிய தார்மீகப் பொறுப்பு இருக்கின்றது. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது நாம் உள்நாட்டு சிங்கள தேசியவாதிகளின் பிடியிலிருந்து விடுபட்டு புலம்பெயர் நாடுகளில் சுதந்திரமாக இருக்கின்றோம். இரண்டாவது குறுகிய நோக்கங்கள் கொண்ட அரசியல்வாதிகளின் குறுகிய வட்டங்களை விட்டு வெளியே வந்திருக்கின்றோம். மூன்றாவது நாம் வாழ்கின்ற நாடுகளின் சர்வதேச அமைப்புகளுடனும், அரசியல் நிறுவனங்களுடனும் இலகுவாகத் தொடர்பாடல்களை ஏற்படுத்துவதற்கும் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்குமான வாய்ப்புகள் எமக்கு அதிகமுள்ளன. இவை எல்லாவற்றையும் விட இலங்கைக்கு வெளியே புலம் பெயர்ந்து வாழ்கின்ற முற்போக்கான தமிழ், சிங்கள அமைப்புகளுடனும் சிந்தனையாளர்களுடனும் இணைந்து இயங்குவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. இதில் முக்கியமான அம்சம் என்னவெனில் முஸ்லிம்கள் உள்நாட்டில் தமிழர்களுடன் இணைந்ததான ஒரு அரசியலைத்தான் கட்டியெழுப்ப வேண்டும் என்றிருந்தால், அது தனியே உள்நாட்டில் உள்ள தமிழ் அரசியல் தலைமைகளுடன் மாத்திரம் பேசி சரிவராது. வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் புத்தி ஜீவிகளுடனும், நேர்மையான அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படல் வேண்டும். அதற்கான வாய்ப்புகள் புலம் பெயர்ந்து வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு நிறையவே உள்ளன.

எவ்வாறாயினும் உள்நாட்டு முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற மக்கள், அமைப்புக்கள் ஊடான திட்டவட்டமானதும், அரசியல் ரீதியானதுமான எதிர்பார்ப்புகள் எதுவும் தற்போதைக்கு இல்லை என்றே நினைக்கின்றேன். அந்தளவுக்கு அரசியல் ரீதியான பரிணாமம் பெற்ற ஒரு சமூகமாக இலங்கை முஸ்லிம் சமூகம் இன்னும் வளர்ச்சி பெறவில்லையாயினும் ஒரு சில புத்தி ஜீவிகளும், சிவில் சமூக அமைப்பைச் சேர்ந்தவர்களும் மாத்திரமே இது பற்றிச் சிந்திக்கின்றனர். இருந்த போதிலும் புலம் பெயர்ந்து வாழ்கின்ற அனைத்து புத்தி ஜீவிகளும், அரசியல் சமூக செயற்பாட்டாளர்களும் இது தொடர்பான தமது பங்களிப்புக்களைச் செய்வது அவர்களது தார்மீகப் பொறுப்பாகும். ▣



## எதேச்சாதிகாரப் பாதையில் சிறிலங்கா - நவநீதம்பிள்ளை

சிறிலங்காவில் எதேச்சாதிகாரப் போக்கு அதிகரித்து வருவதாக ஐ.நா மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை எச்சரித்துள்ளார். சிறிலங்காவில் உண்மை கண்டறியும் பயணத்தை மேற்கொண்ட நவநீதம்பிள்ளை தனது பயணத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பாதுகாப்பு அமைப்புகளால், மனிதஉரிமை ஆர்வலர்கள் துன்புறுத்தப்படுவது அதிகரித்துள்ளது. சிறிலங்கா எதேச்சாதிகாரப் பாதையில் செல்வதற்கான அறிகுறிகள் அதிகரித்துள்ளது மிகவும் ஆழமான கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த உண்மை கண்டறியும் பயணத்தின் போது, என்னுடன் கலந்துரையாடிய மனிதஉரிமை ஆர்வலர்கள் சிறிலங்கா காவல்துறை மற்றும் இராணுவத்தினரால் துன்புறுத்தலை எதிர்கொண்டது கொஞ்சமும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

இது உயர்மட்டத்தில் உள்ளது. இதுபோன்று நடந்து கொள்வதற்கு, என்னைப் போன்றவர்களை அழைக்கக் கூடாது.

இதுபோன்ற கண்காணிப்பும், துன்புறுத்தலையும் வைத்துப் பார்க்கும் போது, சிறிலங்கா மோசமான நிலையில் உள்ளது என்று தோன்றுகிறது. போர் நடந்த வடக்கு, கிழக்குப் பகுதிகளில், நிலைகொண்டுள்ள படைகளை சிறிலங்கா அதிபர் குறைக்க வேண்டும். சிறிலங்காவில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் மதரீதியான வன்முறைகள் குறித்து கவலை வெளியிட்ட நவநீதம்பிள்ளை, அது தொடர்பான விபரங்களை கேட்டறிந்துள்ளார்.



# பொருளாதார நெருக்கடிகளின் பெயரால் அகதிகளையும் பிறநாட்டவர்களையும் நெருக்கும் ஐரோப்பிய அரசுகள்

**ஷபி**

ஐரோப்பிய நாடுகள் பெருமளவில் பொருளாதார வீழ்ச்சியில் சிக்கித் தவிக்கின்றன என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இந்த பொருளாதார வீழ்ச்சியை காரணம் காட்டி, முன்னெப்போதும் இல்லாத அளவு இந்த நாட்டில் வாழுகின்ற அகதிகளையும் பிற நாட்டுக் குடியேற்றக்காரர்களையும் கடுமையான அளவில் கட்டுப் படுத்தும் செயற்பாடுகளில் ஐரோப்பிய அரசாங்கங்கள் இறங்கி இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. இதில் பிரித்தானிய அரசு கடும் போக்கினை கடைப்பிடிப்பதற்கான செயற்பாடுகளை நாளுக்கு நாள் தீவிரப்படுத்தி வருகிறது.

சமூக உதவி கொடுப்பனவு திட்டங்களில் குறைப்பு, அதிகரித்த கண்காணிப்பு, வதிவிட உரிமை இல்லாதோரை கைது செய்தல், தடுத்து வைத்தல், நாடு கடத்தல், கடுமையான குடிவரவுக் கொள்கை என அதன் செயற்பாடுகள் நாளுக்கு நாள் தீவிரமடைகின்றன. வாழ்க்கை செலவு அதிகரிப்பு, வேலையில்லாத் திண்டாட்டம் என்பன பெருகுவதற்கு அகதிகளும், பிறநாட்டு குடியேற்றக்காரர்களுமே பிரதான காரணமாக இருக்கிறார்களென பிரச்சாரப்படுத்துவதன் ஊடாக சுதேச மக்களை உண்மை நிலையிலிருந்து திசை திருப்பவே அரசாங்கம் முயல்கிறது. இந்த நிதி நெருக்கடி நிலைக்கான உண்மை நிலைக் காரணம் ஐரோப்பா முழுவதிலும் பல்தேசிய நிறுவனங்களின் பணச்சுரண்டலே என பொருளாதார ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

இந்நிலையில் தற்கொலை, கொள்ளை, வழிப்பறி, சமூக அசாதாரண சூழல் அதிகரித்துள்ளதுடன் ஒவ்வொரு தனிமனிதனினதும் கடன் சுமை அதிகரித்தும் வருகிறது. நிதி நிறுவனங்கள், வங்கிகள் தனிமனிதர்களை மட்டுமல்ல அரசுகளையே கட்டுப்படுத்தும் நிலை உருவாகியுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, அரசுகளின் உள்நாட்டுக் கொள்கைகளை தீர்மானிக்கும் அளவு நிதிநிறுவனங்களின் கை பலம் பெற்றுவிட்டுள்ளது.

இன்னும் சில வருடங்களில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள சமூகநலத் திட்டங்கள், இலவச மருத்துவம், இலவசக் கல்வி போன்றவை ஒழிக்கப்படுவதற்கான வாய்ப்புள்ளது எனவும் வறுமை மிகு சமூகப் பிரிவினர் அதிகரிப்பது தவிர்க்க முடியாதது எனவும் எதிர்வு கூறப்படுகிறது. இந்த நிலை எழுகின்ற போது மக்களை கட்டுப்படுத்துவதற்கான இறுக்கமான கட்டமைப்பை நோக்கியே இந்த அரசுகள் செல்கின்றன. அதற்காகவே நாளுக்கு நாள் அதிகரித்த கெடுபிடிகளையும் கண்காணிப்பையும் மேற்கொண்டு வருகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

பிரித்தானியாவில் வேலையற்றோர் தொகை கடந்த 20 வருடங்களில் இப்படி இருந்ததில்லை என தெரிவிக்கப்படுகிறது. லண்டனில் விக்கி ஹரிசன் என்ற 21 வயது நிரம்பிய இளம்பெண் வேலை கிடைக்காத காரணத்தால் அண்மையில் தற்கொலை செய்து கொண்டது ஊடகங்களில் பெரும் பரபரப்பாக பேசப்பட்டது. 'பல்கலைக்கழகத்தில் படித்தும் தனது திறமைக்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லை என்றும் குறைந்தது சூப்பர் மார்க்கட்டிலாவது வேலைக்கு சேர வேண்டும் என்ற முயற்சி கூட கைகூடாததாலும் 200க்கும் அதிகமான நேர்முகப் பரீட்சைகளுக்குத் தான் தோற்றியும் இனியும் வேலை கிடைக்கும் என நம்பவில்லை என்பதாலும் தற்கொலை செய்துகொள்வதாக' தனது பெற்றோருக்கு கடிதம் எழுதி வைத்து தற்கொலை செய்தது நிலைமையின் தீவிரத்தை காட்டுகிறது.

இந்த மோசமான நிலைமைகள் மக்கள் எதிர்ப்புணர்வாக அரசாங்கத்தையும் ஆட்சியாளர்களையும் நோக்கி திரும்பாமல் இருக்க, அகதிகளையும் குடியேற்ற வாசிகளையும் இலக்கு வைத்து, மக்களை தம் மீதான அதிருப்தியில் இருந்து காத்துக் கொள்ள இந்த அதிகரித்த கெடுபிடிகளும் இறுக்கமான நடவடிக்கைகளும் உதவும் என இந்த அரசுகள் கருதுகின்றன. பிரித்தானிய அரசின் அண்மைக்கால ஒரு சில தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் பெட்டி தகவல்களில் இங்கு பார்க்கலாம்.



## பிரித்தானியாவில் எந்த நேரமும் பொலிஸ் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படலாம்

பிரித்தானிய முழுவதும் வெளி நாட்டுக் குடியேறிகளுக்கு எதிரான உணர்வும் நிறவெறியும் பிரித்தானிய ஆளும் பழமைவாதக் கட்சியின் ஆதரவுடன் தூண்டிவிடப்படுகிறது. ஆங்கிலேயர் பாதுகாப்பு அமைப்பு என்ற அமைப்பு பிரித்தானியா முழுவதும் தனது நிறவெறியை எந்தத் தடையுமின்றிப் பரப்பிவருகிறது. பிரித்தானியாவில் உருவாகியுள்ள முதலாளித்துவ தாராளவாத பொருளாதார நெருக்கடிக்கு எதிராக எழுச்சிகொள்ளும் மக்களைத் திசைதிருப்பும் நோக்குடனேயே நிறவெறியும் வெளி நாட்டவர்களுக்கு எதிரான உணர்வும் தூண்டப்படுகிறது.

வீதிகளிலும், முக்கிய இடங்களிலும் வெளிநாட்டவர்களின் கைரேகைகளை பரிசோதிக்கும் கருவி ஒன்றுடண் பிரித்தானிய காவல்துறை பொது இடங்களில் அலைந்து திரிகிறது. கைரேகைப் பதிவிலிருந்து தகவல்களைக் கண்டறிந்து கொள்கிறது. பதிவு இல்லாதவர்களையும், விபரங்களில் வதிவிட அனுமதி காணப்படாதவர்களையும் வாகனங்களில் ஏற்றிச் செல்கிறது.

பிரித்தானியாவில் முழு நேரமும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்ட ஒடுக்குமுறைச் சூழலிலும் அச்சத்தின் மத்தியிலும் வெளி நாட்டவர்கள் வாழும் சூழல் உருவாகிவருகிறது. இப் பரிசோதனை முறையை பிரித்தானியா முழுவதும் விரிவுபடுத்தப் போவதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## பிரிட்டனில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையர்கள் சுயவிருப்புடன் நாடு திரும்புமாறு தூதுவர் கோரிக்கை

பிரித்தானியாவில் சட்ட விரோதமான முறையில் தங்கியுள்ள இலங்கையர்களை சுயவிருப்பத்துடன் நாடு திரும்புமாறு, பிரித்தானியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஜோன் ரென்கின் கோரியுள்ளார். இதற்காக விசேட சுயாதீன வேலைத்திட்டம் ஒன்றை பிரித்தானிய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

அவ்வாறு சுயாதீனமாக பிரித்தானியாவில் இருந்து வெளியேறுகின்ற சட்டவிரோத குடியேறிகளுக்கு, மீண்டும் பிரித்தானியாவுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுமா? என்ற கேள்விக்கு பதில் வழங்கும் போது உயர்ஸ்தானிகர், எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு சுயவிருப்புடன் பிரித்தானியாவில் இருந்து வெளியேறும் சட்ட விரோத குடியேறிகள் மீண்டும் பிரித்தானியாவுக்குள் பிரவேசிப்பதற்கு விதிக்கப்படுகின்ற தடையின் காலம் குறைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.


## உங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்லுங்கள், அல்லது கைது செய்யப்படுவீர்கள்!

"இலண்டனில் சட்டவிரோதமாக வாழ்கிறீர்களா? உங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்லுங்கள், அல்லது கைது செய்யப்படுவீர்கள்!"

இந்த வாசகம் பொறிக்கப்பட்ட விளம்பரத் தட்டி ஒன்றை ஏந்திய வாகனம், லண்டன் மாநகரின் சில பகுதிகளில் ரோந்து சுற்றி வருகின்றது. லண்டனில் சட்டவிரோதமாக தங்கியுள்ள குடியேறிகளை வெளியேற்றும் நோக்குடன், பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு இந்த விளம்பரத்தை செய்து வருகின்றது.



# சட்டவிரோத குடியேற்ற வாசிகள்



பிரித்தானிய குடிவரவு துறை அதிகாரிகள் சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருப்போரை தேடி கைது செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். லண்டனின் வோல்ஹம்ஸ்டேவ், கென்சல் கிறீன், ஸ்டப்பேர்ட் மற்றும் கிரிக்கெல்வூட் பிரதேசங்களில் கடந்த தினங்களாக அதிகாரிகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். இத்தேடுதலின் போது சட்டவிரோத குடியேற்ற வாசிகள், தர்ஹம், மென்செஸ்டர் உட்பட நாடு முழுவதும் 90 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவில் சட்டவிரோதமாக தங்கியிருப்போரை எச்சரித்து வெளியிடப்பட்டிருந்த சர்ச்சைக்குரிய சுவரொட்டிகளை அடுத்தே அதிகாரிகள் இந்த தேடுதல்களை ஆரம்பித்துள்ளனர். இந்த நிலையில், இந்த தேடுதல்களை அடிப்படை சுதந்திரத்தை மீறும் வன்முறை செயல்கள் என தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பெர்ரி காடினர் தெரிவித்துள்ளார். இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் எனவும் உள்துறை அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார். கடந்த மாதம் குடிவரவு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின் போது, சட்ட விரோதமாக தங்கியிருந்த ஐந்து இலங்கையர்கள் உட்பட இந்தியன் ஒருவரையும் கைது செய்துள்ளதாக பிரித்தானிய தூதரகம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ▣

# விசாவுக்கு பிணைப்பணம்



பிரித்தானியாவுக்கு வரும் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் சில நாட்டவர்களுக்கு நாட்டுக்குள் வரும் முன், விசா பிணையாக ரொக்கத் தொகையைப் பெற பிரித்தானிய அரசு திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் முதல் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த விசா பிணைக்கு உள்ளாகும் நாடுகளில் பங்களாதேஷ் மற்றும் கானாவும் உள்ளடங்குகின்றன. இதன்படி 6 மாத பயண விசாவில் வரும் 18 வயதுக்கு மேற்பட்டோரிடம் 4,600 டொலர்களை பிணைத் தொகையாக அறவிட பிரித்தானிய அரசு திட்டமிட்டுள்ளது. இவ்வாறு பெறப்படும் பிணைத் தொகை விசா காலத்தையும் மீறி தங்குவோரிடம் அபராதமாக ஈட்டவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் பிரித்தானிய உள்நாட்டு செயலாளர் தெரேசா, பிரதமர் டேவிட் கெம்ருனின் கன்ஸர்வேடிவ் கட்சியின் அனுமதியைப் பெற காத்திருப்பதாக கூறப்படுகிறது.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டில் பிரித்தானியாவுக்கு வருவோரின் எண்ணிக்கையை 100,000 ஆக குறைக்க பிரதமர் கெமரூன் எதிர்பார்த்துள்ளார். கடந்த ஆண்டில் பிரித்தானியாவுக்கு ஆறு மாத விசாவில் இந்தியாவில் இருந்து 2,96,000 பேரும் நைஜீரியாவிலிருந்து 1.01,000 பேரும் பாகிஸ்தானில் இருந்து 53,000 பேரும் இலங்கை, பங்களாதேஷில் இருந்து தலா 14,000 பேரும் பிரிட்டனுக்கு சென்றுள்ளனர். அதிக நிச்சயமற்ற தன்மை நிலவும் நாடுகளில் இருந்து இங்கிலாத்துக்குள் பிரவேசிக்கும் நபர்கள். குடியேற்ற துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த விதிமுறை அமுல்படுத்தப்பட உள்ளது. அவுஸ்திரேலியாவை முன் மாதிரியாக கொண்டு செயற்படுத்தப்படவுள்ள இந்த நகர்வில் விசா காலப்பகுதிக்கு மேலதிகமாக தங்கியிருப்போர் இந்த பிணைப் பணத்தை இழக்க நேரிடும். ▣


# இலங்கை

## மாற்றங்கள் நிகழ வேண்டிய தருணம்!

தி. ஸ்ரீதரன் - சுகு

இலங்கையின் ஆட்சி - நிர்வாக யந்திரம் - சமூக வாழ்வு மோசமாகப் பழுதடைந்துள்ளன. நவீன உலகத் தேவைகளுக்கேற்ப இதில் மாற்றம் வேண்டும். இராணுவ மயப்பட்ட சர்வாதிகார ஆட்சிமுறைகள் நியாயப்படுத்தப்படவும், சகித்துக் கொள்ளப்படவுமான மோசமான நிலைமைகள் காணப்படுகின்றன. ஊழல், சட்டம் ஒழுங்கு நீதித்துறை ஸ்தம்பிதம், சுயாதீனமின்மை போன்றன பெரும் பிரச்சனைகளாக உருவாகியிருக்கின்றன. அதிகாரங்களை மையத்தை நோக்கி குவிப்பது - படை மயமாக்கல் என்பது மக்களின் ஜனநாயக, மனித உரிமைகளை இழிவு படுத்துவதாகவும் - அலட்சியம் செய்வதாகவும், எள்ளி நகையாடுவதாகவும் நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கிறது. சமூக மட்டத்தில் குரோதமும், விரோதமும் இன - மத ரீதியாக தூண்டி விடப்பட்டுள்ளன. பெரும்பான்மையினரின் கலாச்சார திணிப்பு - மேலாதிக்கம் - கீழ்ப்படிவுள்ள சமூகங்களாக சிறுபான்மைச் சமூகங்கள் வாழவேண்டும் என்பது போன்ற நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் அடங்கி ஒடுங்கி நடக்க வேண்டும். இயல்பாக தமது சமூக கலாச்சார பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதென்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் இயக்கங்கள் விலைவாசி உள்ளிட்ட தமது அக்கறைகளை ஜனநாயக ரீதியில் வீதிக்கு வந்து வெளிப்படுத்தும் போது அதனை நியாயமான முறையில் எதிர்கொள்ளாமல் அதனை சதி என்பதும் அதனை தோற்கடிப்பதில் பெருமை பேசுவதும் அதிகார மட்டத்தில் காணப்படுகிறது. மத இன வெறுப்பாளர்கள் போசிக்கப் படுகிறார்கள். தீய சக்திகள் அதிகார மட்டத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. ஏற்கனவே நிலவுகின்ற மாகாண அதிகாரப் பரவலாக்கல் கட்டமைப்பை ஒரேயடியாக உருச்சிதைப்பதற்கான வீதி நாடகங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. பரவலாக வெறுப்பும், குரோதமும் விசுறப்பட்டுக் - கொண்டிருக்கின்றன. அண்டை அயலருடன், உலகத்துடன் வேண்டாத பகை வளர்க்கப் படுகிறது. இந்த நிலை மாற என்ன செய்ய வேண்டும்?



ஐ.தே.க அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான சில யோசனைகளை முன்வைத்துள்ளது. சில நம்பிக்கை தரும் வார்த்தைகளும் இருக்கின்றன. ஆனால் கடந்தகால அனுபவங்கள் திகிலூட்டுபவை, வறட்சியானவை. சந்தேகங்களை ஏற்படுத்துபவை. எனவே நம்பகரமான விதத்தில் வெளிப் படுத்தல்கள் அமைய வேண்டும். முக்கியமாக அதிகார வர்க்கமும் சமூக வாழ்வும் என்ற விடயம் பொருட்படுத்தப்படுவதில்லை. பொலிஸ் அல்லது சிவில் நிர்வாகம் மக்களுடன் காலம்காலமாக மேற்கொண்டு வரும் அணுகுமுறை பொருட்படுத்தப் படுவதில்லை. ஊழலும், இழிவும், சாதாரண மனிதருக்கு அவமரியாதையும் தான் மிச்சமாகிறது. அவர்கள் கூனிக்குறுகிப் போகிறார்கள். அவமானத்தில் சுருங்கிப் போகிறார்கள். சேவை செய்ய

வேண்டும் என்பதை விட மக்கள் மேல் அதிகாரம் செலுத்தவேண்டும் என்ற அகங்காரமே பரவலாக காணப்படுகிறது. ஜனநாயக உணர்வு மிக மிக குறைந்த மட்டத்திலேயே இருக்கிறது. இந்த கட்டமைப்பு காலாவதியாக வேண்டும். சாதாரண மக்களை அரவணைப்பதற்கான, வரவேற்பதற்கான, நம்பிக்கை அளிப்பதற்கான கட்டமைப்பு தேவைப்படுகிறது.

எமது மனிதர்களில் எத்தனை பேர் நீதிமன்றம் செல்ல, பொலிஸ் நிலையம் செல்ல விரும்புகிறார்கள்? நியாயம் கிட்டும் என்று நம்புகிறார்கள்? இது எளிமையான உண்மை. சுயாதீனமான பொலிஸ் நீதிச் சேவை பொதுநிர்வாக ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அது சரி. ஆனால் புரிதல் எப்படி இருக்கிறது. அதிகாரமா? சேவையா? இதுதான் இங்கு பிரச்சனை. சமூகத்தின் பொதுவான பிரச்சனைகளான இன - மத - பால், சமூக சமத்துவம் இவை பற்றிய புரிதல்கள் இவர்களுக்கு இருக்கிறதா. இவர்களுக்கான கல்வி முறையில்தான் இவை அடங்கி இருக்கின்றனவா. மக்களுக்கு நட்பான நிர்வாக யந்திரம் தேவை. அதிகார போதை பாடசாலை, பல்கலைக்கழகம், சுகாதாரத்துறை, போக்குவரத்து துறை அன்றாட வாழ்வில் சந்திக்கும் எல்லா இடங்களிலும் ஊறிக்கிடக்கிறது. கிராம சேவகருக்கும் மக்களுக்குமிடையேயான உறவு சுமுகமாக இருக்கிறதா. தமது காரியங்களை இலகுவாக ஆற்றலாம் என்ற நம்பிக்கை இருக்கிறதா? இறைமை மக்களுடையது என்று சொல்லப்படுகிறது. மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தான் அரசு யந்திரத்தை இயக்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

உண்மையில் என்ன நடைபெறுகிறது வாக்களிப்பதுடன் காரியம் முடிவடைகிறது. மற்றபடி மக்களுக்கு எந்த முக்கியத்துவமும்



**அரச மட்டத்திலிருந்து சாமானிய மக்களின் மட்டம் வரை எல்லாமே செல்லரித்துப் போய்க்கிடக்கிறது. இந்த அமைப்பு முறையில் மாற்றம் வேண்டாமா? இன மத வெறுப்புணர்வுகள் பால் நிலை மேலாதிக்கம், தீண்டாமை உள்ளிட்ட சமூக அநீதிகள் புரையோடிப் போய்கிடக்கின்றன.**


இருக்காது. கணிசமான மக்கள் இந்த இழிநிலை பற்றி எந்தப் பிரக்ஞையும் இல்லாமல் இருக்கிறார்கள். தம்மை கேவலமாக நடத்துபவர்களை மீண்டும் மீண்டும் தெரிவு செய்யவும் செய்கிறார்கள். அரச மட்டத்திலிருந்து சாமானிய மக்களின் மட்டம் வரை எல்லாமே செல்லரித்துப் போய்க் கிடக்கிறது. இந்த அமைப்பு முறையில் மாற்றம் வேண்டாமா? இன மத வெறுப்புணர்வுகள் பால் நிலை மேலாதிக்கம், தீண்டாமை உள்ளிட்ட சமூக அநீதிகள் புரையோடிப் போய்கிடக்கின்றன. ஐரோப்பாவும் - வட அமெரிக்காவும் கணிசமான காலனிகளை வைத்திருந்தன. இன்றும் எண்ணெய் வளங்களை கையகப் படுத்துவதற்காக அறமற்ற வழிகளில் செயற் படுகின்றன. உலகின் வளங்களை, அருகிப் போகும் மூலப்பொருட்களை கையகப்படுத்துவதற்கான கெடுபிடி யுத்தங்கள் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் ஐரோப்பிய - வட அமெரிக்க நாடுகளில் நிலவும் மனித உரிமை ஜனநாயகம் எமது நாடுகளில் நினைத்துப் பார்க்க முடியாதவை. எம்மவர்கள் ஐரோப்பிய - வட அமெரிக்க - அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோருவதற்கு வெறுமனே பொருளாதார காரணிகள் மாத்திரமல்ல. அங்கு நிலவும் ஜனநாயக சூழலும் எமது நாட்டின் ஜனநாயக இடைவெளி குறைவான அவல நிலையும் காரணம். மக்களை அடக்கி வைத்துக் கொண்டு வார்த்தை ஜாலங்களை உதிர்ப்பவர்கள் எமது அதிகார வர்க்கத்தினர். ஆழமான பொருள் கொண்டதாக மக்களுக்கு அர்ப்பணிப்பு கொண்ட வார்த்தை ஜாலங்கள் இருக்கும். நடைமுறை சுமையாகவும் கெடுபிடியானதாகவும் இருக்கும். உலகளாவிய அளவில் சமூக அரசியல் இயக்கங்கள் மனித வாழ்வை செழுமைப்படுத்தி வந்திருக்கின்றன.

இன்று வரை உலகளாவிய அளவில் மாற்றத்திற்கான, சமூக அநீதிகளுக்கெதிரான இயக்கம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. காந்தியடிகள் காட்டிய அறிநெறி - சுதந்திர இயக்கம் ஆபிரிக்க - அமெரிக்க கண்டங்களில் நிறவெறிக்கெதிரானதும் - சுதந்திரத்துக்குமான இயக்கங்களுக்கு வழிகாட்டியுள்ளது. இலங்கையிலும் சமூக அநீதிகளுக்கெதிரான இடதுசாரி இயக்கமும், காந்தியடிகளைப் பின்பற்றிய யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசும் 1930களில் தோற்றம் பெற்றன. நடேசையர் அவர்களின் அரசியல் - தொழிற்சங்க செயற்பாடுகளும் மலையகத்தில் தீவிரம் பெற்றிருந்தன. ஆனால் கடந்து வந்த காலங்களில் அறஉணர்வுகள் சிதைந்த அரசியல் சமூக கட்டமைப்பே எஞ்சியிருக்கிறது. அதிருப்திகள் 1970களில் 80களில் கிளர்ச்சிகளாகவும், நீண்ட 3 தசாப்தகால யுத்தமாகவும் மாறியது. ஆனால் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்கு பதிலாக தீவிரமடைவதற்கான

நிலைமைகளே தக்க வைக்கப் பட்டிருக்கின்றன. பயங்கரவாதத்தை ஒடுக்கிவிட்டோம் என்ற ஆரவாரம் மாத்திரமே காதைப் பிளக்கிறது. வெறுப்பும், குரோதமும், மேலாதிக்க அகங்காரமும் தலைதூக்கி நிற்கின்றன. படிப்பினைகளை கருத்திற்கெடுத்து சமூக நல்லுறவை ஏற்படுத்துவதற்கு, இலங்கையின் பல்லினப்பங்கை ஏற்றுக் கொள்வதற்கான மனோநிலை ஏற்படவில்லை. மதச் சார்பின்மை, சுதந்திரமான சமூக பொருளாதார சமூக அபிவிருத்தி என்ற பேச்சுக்கே இடமில்லை சூறையாடல் - வரம்பற்ற சூறையாடலுக்கான வழி திறக்கப் பட்டிருக்கிறது. சாதாரண மக்களின் சேமிப்பு எல்லாம் கரைந்து நுகர்வு கலாச்சாரத்தால் கடனாளிகளாக மாறும் நிலை காணப்படுகிறது. சேவை என்பதை விட வசூல் அதிகமாக நடைபெறுகிறது. 'லீசிங்' இலகு கடன் என வெவ்வேறு பெயர்களில் இது நடந்து கொண்டிருக்கிறது. பங்குச் சந்தை தான் பொருளாதார வளர்ச்சியின் அளவீடாகிறது. சூறையாடல் இயல்பானதே என ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. வைத்தியமும், கல்வியும் மிகுந்த லாபம் தரும்; வியாபாரங்களாக மாறியுள்ளன.

உணவு, இருப்பிடம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து என்பன குறைந்த செலவில் கிட்டுவதாக இருக்க வேண்டும். இராணுவ பிரசன்னமும், நில அபகரிப்பும் சமூகங்களின் வாழ்வின் மீதான - அந்தரங்க வாழ்வின் மீதான தலையீடுகள் வளர்ச்சியையோ, சமூகப் பாதுகாப்பையோ நோக்கமாக கொண்டவை அல்ல. பயங்கரவாத தடைச் சட்டத்தை தக்க வைத்திருப்பதற்கும் எந்த நியாயமும் கிடையாது. மேலாதிக்கம், சமூகங்களிடையே விரிசலை ஏற்படுத்துவது, ஜனநாயக எதிர்பியக்கங்களை நசுக்குவது, அதிகார வர்க்கத்தின் பிடியை இறுக்குவது என்பனவே இவற்றின் அடிப்படையாக இருக்கின்றன. நாட்டின் வாழ்வு என்பது மக்களின் இருப்பு, வெவ்வேறு சமூகங்களின் இருப்பு, நலிவுற்றவர்களின் இருப்பு என்பவற்றில் தானே அடங்கியிருக்கிறது. மக்களிடையே நம்பிக்கையை கட்டி எழுப்புவதில் தானே ஒரு நாடு உயிர்க்கிறது. ஆனால் அதிகார போதை இங்கு கிறங்கடிக்கிறது. இந்த நிலை மாறினால் தான் நாட்டின் வளங்களை மக்களிடையே சிறந்த முறையில் பகிர முடியும். சேவைத் துறைகள் உண்மையான அர்த்தத்தில் செயற்படமுடியும் இன சமூகங்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும். அரச முறையில் அனைத்து சமூகங்களையும் பங்கு பற்றவைக்கமுடியும். அச்சமற்ற - எழிலார்ந்த - சுதந்திர வாழ்வொன்றை ஸ்தாபிக்க முடியும். ஜனநாயக மாற்றத்துக்கான நாடுதழுவிய மக்களியக்கத்தின் வரலாற்றுத்தேவை உருவாகியிருக்கிறது. ▣


# Creating Printing - UK



- Books
- Magazines
- Souvenirs
- Invitations...


- Printing
- Layout and
- Type setting...

மலர்கள் | சஞ்சிகைகள் | அழைப்பிதழ்கள் | விளம்பர பிரசுரங்கள்
மற்றும் தமிழில் தட்டச்சு, வடிவமைப்பு, அச்சு வேலைகளுக்கு

078 1726 2980

# பௌத்த அடிப்படைவாதத்துக்கு மத்தியில் முஸ்லிம்கள் தரப்பில் செய்ய வேண்டியது என்ன?

ஜிஃப்ரி ஹாஸன்



இலங்கையும் இனவாதமும் எப்போதும் சேர்ந்தே இருக்கும் என்பதைப் போலவே இலங்கையின் கடந்தகால மற்றும் தற்கால அரசியல் போக்குகள் காணப்படுகின்றன. இலங்கை முஸ்லிம்களுக்கெதிராக இன்று சிங்கள பௌத்த அடிப்படைவாத செயற்பாடுகள் தீவிரம் பெற்றுள்ளன. 'பொது பலசேன'. 'சிங்கள ராவய' 'இராவணா' போன்ற பெயர்களில் பௌத்த அடிப்படைவாதம் இன்று நிறுவனமயப்பட்டுள்ளது.

இத்தகைய பௌத்த தீவிரவாத அமைப்புகள் போருக்குப் பின்னரான இலங்கையில் ஒரு கூட்டிணைந்த வேலைத் திட்டத்தினூடாக முஸ்லிம்களைக் குறிவைத்து தங்களது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ளன. ஆனால் இலங்கையில் பௌத்தர்களுக்கும் - முஸ்லிம்களுக்குமிடையில் நீண்டகால நட்பும், உறவும் இருந்து வந்ததை பல்வேறு எழுத்தாளர்கள் வரலாற்று ஆய்வுகளுக்கூடாக நிரூபித்துள்ளனர்.

உண்மையில் பௌத்தத்துக்கும் - இஸ்லாத்துக்கும் எந்தவொரு நாட்டிலும் சமய ரீதியிலான நேரடி மோதல்களோ முரண்பாடுகளோ இயல்பாகத் தோன்றி இருந்ததில்லை. அதேபோன்று முஸ்லிம்களுக்கும் - யூதர்களுக்குமிடையில் காணப்படுகின்ற முரண்பாடுகள் கூட பௌத்தர்களுக்கும் - முஸ்லிம்களுக்குமிடையில் காணப்பட்டதில்லை.

இந்த நடைமுறை யதார்த்தங்களுக்கு மத்தியில் சிங்கள பௌத்தர்களுக்கும் - முஸ்லிம்களுக்குமிடையில் இன, மத, சாதி வேறுபாடுகளற்ற ஒரு சகவாழ்வு நீண்ட காலமாகவே இலங்கையில் முஸ்லிம்கள் குடியேறிய காலத்திலிருந்தே மன்னராட்சி மற்றும் காலனித்துவ காலம் உள்ளடங்களாக இந்த பௌத்த முஸ்லிம் சகவாழ்வும், நல்லிணக்கவும் இலங்கை வரலாற்றில் நிலவி வந்துள்ளது இதனையே இலங்கையின் முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி பத்தியுத்தீன் மஹ்மூத் அவர்கள் ''சிங்கள - முஸ்லிம் உறவு 1400 ஆண்டு காலமாக நிலவி வருகிறது'' சிங்கள - இலங்கைச் சோனகர்களின் நல்லுறவு 2600 ஆண்டுகளாக கி.மு. 6ம் நூற்றாண்டு இலங்கைச் சோனகர்களின் மூதாதையர்களான 'சேவிய' அராபியர்களும் 'பினிசிய' அராபியர்களும் வர்த்தகர்களாக வந்த காலந்தொட்டே நீடிக்கிறது'' என்று ஓர் உரையில் குறிப்பிட்டார்.

அதேநேரம் காலஞ்சென்ற பிரதமர் SWRD பண்டாரநாயக்கா அவர்கள் "சிங்களவர்களாகிய நாம் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்துள்ளோமோ அத்தனை ஆண்டுகள் இலங்கைச் சோனகர்களும் இந்த நாட்டில் வாழ்ந்துள்ளனர் இந்த இரு சமுகத்தினரிடையே நெருங்கிய நட்பு நீடிக்கிறது" என்று குறிப்பிட்டது நடைமுறைக்குப் புறம்பான ஒரு மேலோட்டமான கருத்தல்ல, வரலாற்றையும் அவரது அரசியலையும் காலத்தையும் மேவி அவர் வெளியிட்ட உண்மைத் தகவல்களாகும்.

இலங்கையில் பௌத்த - முஸ்லிம் சகவாழ்வின் வரலாற்றை சுருக்கமாக நோக்குவோமாயின் கோட்டை, கண்டி போன்ற இராசதானிகளில் மன்னர்களுக்கும் - முஸ்லிம்களுக்கும் - பௌத்தர்களுக்குமிடையில் நல்லுறவும் சகவாழ்வும் இடம் பெற்று வந்துள்ளது. கோட்டை மற்றும் கண்டி மன்னர்கள் முஸ்லிம்களுக்கு முக்கிய பதவிகளை வழங்கி அவர்களை கௌரவப் படுத்தியுள்ளனர்.

கண்டி இராஜ்ஜியத்தில் அதன் நிர்வாகத் துறையில் 'முகாந்திரம்' என்றொரு பதவி காணப்பட்டது. இந்த 'முகாந்திரம்' பதவிக்கு கண்டி மன்னன் முஸ்லிம்களையும் நியமித்தமையானது முஸ்லிம்கள் மீது சிங்கள மன்னர்கள் வைத்திருந்த நம்பிக்கையையும் இரு சமூகங்களுக்கிடையில் காணப்பட்ட இன சௌஜன்யத்தையுமே எடுத்துக் காட்டுகிறது. பௌத்தர்களின் வணக்கஸ்தல நிர்மாணப் பணிகள் போன்றவற்றிலும் முஸ்லிம்கள் பௌத்தர்களுடன் நட்புடன் செயற்பட்டு வந்துள்ளனர்.

காலனித்துவ காலத்திலும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற ஐரோப்பியர்கள் இலங்கையை ஆக்கிரமித்த போது முதலில் அதனை எதிர்த்தவர்கள் முஸ்லிம்களேயாவார். அதன் பின்னர் சிங்களவர்களும் முஸ்லிம்களுடன் இணைந்து போர்த்துக்கேயரைத் தாக்கினர். முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் இலங்கையின் பண்டைய மன்னர்கள் எவரும் இடையூறு விளைவித்ததில்லை. அந்நியர்களின் அழுத்தங்களால் ஒரு சில விதிவிலக்கான சம்பவங்கள் இடம் பெற்றிருந்த போதிலும் இனவாத அடிப்படையில் அத்தகைய சம்பவங்கள் இடம் பெற்றிருக்கவில்லை.

ஆனால் தற்போது இந்த உறவு மோசமான திசையை நோக்கி திட்டமிட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சில பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் சிங்கள - முஸ்லிம் உறவை சீர் குலைப்பதோடு ஓர் இனவாத மோதலுக்கும் தூபமிடுகின்றன. இந்நிலை நீடிக்குமானால் இலங்கையில் சிங்கள - முஸ்லிம் சக வாழ்வு ஒரு பெரிய சவாலுக்குட்படக்கூடிய வாய்ப்புள்ளது.


பொது பல சேனா, சிங்கள ராவய போன்ற தீவிரவாத அமைப்புக்களின் செயற்பாடுகள் முஸ்லிம்கள் குறித்த பௌத்த மக்களின் மனப்பாங்கில் பெரிய மாற்றங்கள் எதனையும் ஏற்படுத்தவில்லை என்ற நம்பிக்கை ஒரு புறமிருந்தாலும் இதனைக் கருத்திற் கொண்டு இது விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பது போராபத்தானது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

முஸ்லிம்கள் தமது தரப்பில் இது குறித்துச் செய்யவேண்டியது என்ன என்பது குறித்துத் தீவிரமாக சிந்தித்துச் செயற்பட வேண்டிய கட்டாயத் தருணமாக இது உள்ளது. பொது பல சேன, சிங்கள ராவய போன்ற பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் முஸ்லிம்களின் பொருளாதாரம் மற்றும் கலாசார உரிமைகள் மீதே குறிவைத்துச் செயற்படுகின்றன.

உண்மையில் முஸ்லிம்களின் சில கலாசார கூறுகளை பௌத்த அடிப்படைவாத பிக்குகள் சிங்கள மக்கள் மத்தியில் தவறாக அறிமுகப்படுத்தி வருகின்றன அதே நேரம் சிங்கள மக்களுக்கும் முஸ்லிம்களின் கலாசார அம்சங்கள் குறித்து போதிய அறிவில்லாத நிலை காணப்படுகிறது. இந்த வாய்ப்பான சூழலை பயன்படுத்திக் கொண்டு பௌத்த அடிப்படைவாத பிக்குகள் சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம்கள் குறித்து தவறான பிரச்சாரத்தை மேற்கொள்கின்றனர். பௌத்த பிக்குகளின் இந்தத் தவறான பிரச்சாரங்களால் சில சிங்கள இளைஞர்கள் தூண்டப்பட்டு இனவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் அபாயம் இன்று இலங்கையில் அதிகரித்து வருகிறது. இதன் விளைவுகளே பள்ளிவாசல்கள் மீதான தாக்குதலாகும்.

முஸ்லிம்களின் சமூகப் பண்பாட்டு அம்சங்கள், தனித்துவ அரசியல் மற்றும் இனத்துவ அடையாளம் குறித்து சிங்கள மக்கள் போதிய அறிவில்லாதிருப்பதும் ஒரு வகைப் பெரும்பான்மை இன அதிகாரத்தையே எடுத்துகாட்டுகிறது. சிறுபான்மை மக்கள் பற்றி வேண்டுமென்றே அறிந்து கொள்ள மறுக்கும் பெரும்பான்மை அகம்பாவமாகவே அது கொள்ளப்படவேண்டும்.

பெரும்பான்மை இன மாணவர்களை அதிகமாகப் கொண்ட பல்கலைகழக மொன்றில் எனக்கு இது தொடர்பான அனுபவங்கள் பல ஏற்பட்டன. அங்கு சமூக விஞ்ஞானம் பயிலும் மாணவர்கள் கூட முஸ்லிம்களின் சமூக பண்பாட்டு அரசியல் மற்றும் இனத்துவ அடையாளங்கள் குறித்து சராசரி அறிவைக்கூட கொண்டிருக்காத ஒரு துரதிஸ்ட நிலைமை காணப்பட்டது. அவர்களைப் பொறுத்தவறை முஸ்லிம்கள் தொடர்பில் அவர்கள் அறிந்து வைத்திருத்ததெல்லாம் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவது, முஸ்லிம் ஆண்கள் நான்கு திருமணம் முடிக்கலாம் என்ற விடயம் போன்றவைதான்.



அதேநேரம் முஸ்லிம்களின் இனத்துவ மற்றும் அரசியல் சார்ந்து அவர்கள் பிழையான பல புரிதல்களையும் கொண்டிருந்தனர். வட-கிழக்கில் வாழும் தமிழ் மக்களையும்-முஸ்லிம்களையும் பிரித்தறியும் சமூக அறிவோ, முஸ்லிம்கள் மீது புலிகள் மேற்கொண்ட இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் குறித்தோ. புலிகள் வேறு முஸ்லிம்கள் வேறு என்ற அடிப்படையான அரசியல் புரிதல்களோ அவர்களிடம் காணப்படவில்லை சமூக விஞ்ஞானம் பயிலும் பல்கலைக்கழக மாணவர்களின் நிலைமையே இதுவென்றால் சாதாரண மக்களைப் பற்றி சொல்லவே தேவை இல்லை.

## எனவே இந்த இடத்தில் முஸ்லிம்கள் தரப்பில் செய்யவேண்டியது என்ன?

தங்களைப்பற்றி மற்றவர்களுக்கு தெரியப்படுத்தும் பொறுப்பு தங்களுக்கு இருப்பதை முஸ்லிம்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்பணியை முஸ்லிம் அரசியல் தலைமைகள் செய்வார்கள் என்று நம்புவது முட்டாள் தனமானது, முஸ்லிம் அரசியல் தலைமைகள் இத்தகைய ஆக்கபூர்வமான பணிகளைச் செய்யாது மக்களுக்குத் தொடர்ந்தும் துரோகமிழைத்து வந்ததே வரலாறாகும்.

எனவே இது விடயத்தில் முஸ்லிம் சிவில் சமூக இயக்கங்கள் விரைந்து செயற்பட வேண்டியுள்ளது. பெரும்பான்மை மக்களுக்கு வேண்டுமென்றே சர்ச்சைக்குள்ளாக்கப்படும் நமது பண்பாட்டு அரசியல், பொருளாதார விடயங்கள் குறித்து தெளிவுபடுத்தும் வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கபட்டாக வேண்டும். இல்லாவிட்டால் முஸ்லிம்களுக்கெதிரான பௌத்த அடிப்படைவாத அமைப்புகளின் செயற்பாடுகள் தீவிரம் பெற்று எதிர்காலத்தில் ஒரு பாரிய இன வன்முறைக்கு வழிவகுக்கும் என்ற உண்மையை புரிந்து செயற்பட நாம் அனைவரும் முன் வந்தாக வேண்டும். ▣

## தேசிய ஷூரா சபை தனித்துவமானது
## அஷ்ஷேய்க் எஸ்.எச்.எம் பளீல்



ஷூரா (கலந்தாலோசனை) செய்வது முஸ்லிம் சமூகத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும். ஷூரா என்பது பல்துறை சார்ந்தவர்களது அனுபவங்களையும் அறிவுகளையும் பெறுவதற்கான ஒரு பொறிமுறையாகும். வித்தியாசமான பல கோணங்களில் சிந்திப்பவர்களது கருத்துக்களுக்கு செவிமடுக்கப்பட்டு இறுதியாக தீர்மானங்கள் பெறப்படும் போது சமூகம் ஸ்திரமான அடிப்படைகளைப் பெற்றிருக்கும். தற்காலத்திலும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், அரசியல், பொருளாதாரம், தொடர்பாடல், உளவியல் என்று துறைகள் பலதரப்பட்டவையாக இருப்பதால் பல்துறை சார் நிபுணர்களது ஆலோசனைகள் பெறப்பட்ட பின்னரே மிக முக்கிய தீர்மானங்களுக்கு முஸ்லிம் சமூகம் வர வேண்டும். கடந்த காலத்தில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கிய சவால்களுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு மாத்திரமல்ல எதிர்காலத்திற்கான காத்திரமான திட்டங்களை வகுப்பதற்கும் பிற சமூகங்களுடனான நல்லுறவைப் பேணுவதற்கும் இது அவசியப்படுகிறது.

அந்தவகையில், இலங்கை முஸ்லிம்களது சகல துறைகளையும் இஸ்லாத்தின் வழி நின்று திட்டமிடுகின்ற ஒரு பொதுச் சபை அல்லது கூட்டுத் தலைமை உருவாக்கப்பட வேண்டுமென்ற கருத்து அண்மைக்காலமாக வலுப்பெற்றுவந்துள்ளது. இது பற்றிய முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்ட போதும் ஆக்கங்கள் எழுதப்பட்ட போதும் சமூகம் பேரார்வத்தோடு அதனை வரவேற்றது. அப்படியான ஒரு சபை பற்றிய கருத்துக்களை கேட்டறிவதற்காக இலங்கையின் தஃவா மற்றும் சமூகசேவை அமைப்புக்களது தலைவர்களும், முக்கியஸ்தர்களும், துறைசார் நிபுணர்களும், புத்திஜீவிகளும் அழைக்கப்பட்டு, இரண்டு முக்கியமான கூட்டங்கள் தலைநகரில் நடத்தப்பட்டபோது அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் இச்சபையின் உருவாக்கத்திற்கு ஊக்கமளித்தார்கள். உண்மையில் இவ்விரு கூட்டங்களும் தேசிய ஷூரா பற்றிய கோட்பாட்டை சமூகத்திற்கு முன்வைத்து அது பற்றிய சமூகத்தின் மஷூராவை - ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டவையாகும்.

தற்போது அதனை நோக்கிய பயணத்தின் ஒரு முக்கிய கட்டமாக இலங்கை முஸ்லிம் பேரவை என்ற பெயரில் அதற்கான நிறைவேற்றுக் குழுவும், செயலகக் குழுவும் நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே திட்டமிடப்பட்ட மாகாண, மாவட்ட, நகர, கிராம மட்டங்களிலான உப குழுக்கள் அமைக்கப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

### அரசியல் நிலைப்பாடு

தேசிய ஷூரா சபையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை மிகுந்த கரிசனையோடு முன்வைத்த சில சகோதரர்கள் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் குறிப்பிட்ட ஒரு கட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்தியிருப்பதாகவும் தேர்தலில் நேரடியாகவோ மறைமுகமாகவோ சில நிலைப்பாடுகளை எடுத்திருப்பதாகவும் கூறி ஷூரா பற்றிய சந்தேகங்கள் சிலரால் எழுப்பப்பட்டு வருகின்றன. இதற்கு பின்வரும் வகையில் பதிலளிக்க முடியும்.

அந்த அரசியல் நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகக் கூறப்படும் சகோதரர்களது தனிப்பட்ட கருத்தாகவே அது கொள்ளப்படுகிறது. அதே வேளை அவர்கள் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் அல்லர். செயலகக் குழுவில் மட்டுமே அவர்கள் அங்கம் வகிக்கிறார்கள். நிறைவேற்றுக் குழுவில் எடுக்கப்படும் தீர்மானங்களும் முடிவுகளுமே ஷூராவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளாக கணிக்கப்படும். செயலகக் குழுவில் இருப்பவர்கள் எடுக்கும் தனிப்பட்ட எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றிருக்கத் தேவையில்லை. அந்த வகையில் மேற்படி சகோதரர்கள் அரசியல், சமூக சேவை, பொருளாதார நடவடிக்கைகள், மீடியாச் செயற்பாடுகள், தஃவா முயற்சிகள் என்பவற்றில் ஈடுபடும் போது அவற்றை ஷூராவின் நிறைவேற்றுக் குழுவின் முடிவுகளாக எவரும் கருதத் தேவையில்லை. ▣




# மலாலாவும், மறைக்கப்படும் உலகின் கவனமும்!

■ அத்தார்

> ❝ யெமனில் மட்டும் அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானங்கள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்ட சிறுமிகளின் எண்ணிக்கை 30ஐ தாண்டும். ❞

உலகமே 'மலாலா' எனும் ஒரு பாகிஸ்தானிய முஸ்லிம் சிறுமியை தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடிக் கொண்டிருக்கிறது. எந்தளவுக்கு என்றால் மலாலா எனும் பெயரில் தனி பரிசில்கள், சர்வதேச தினங்கள், ஐநா சபையில் விசேட உரைகள், அது மட்டுமல்லாமல் அந்த சிறுமியின் தந்தைக்கு உயரிய பதவி போன்ற காட்சிகள் தான் உலகின், சர்வதேச ஊடகங்களின் பேசுபொருளாக மாறியுள்ளது. ஆனால் ஏன் இந்த சிறுமியை சுற்றிலும் இந்தளவுக்கு ஒரு ஒளிவெள்ளம் பாய்ச்சப்பட்டு நம் கண்கள், அவதானம் எல்லாம் பலவந்தமாக அவரை நோக்கித் திருப்பப்படுகிறது?. மேற்கத்தேய நாடுகளும், அதன் தலையாட்டி பொம்மைகளான சர்வதேச ஊடகங்களுக்கும் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் கேள்விக்குட்படுத்த மலாலா எனும் நவீன ஆயுதம் ரெடி. அதனை கூர்படுத்தும் முயற்சியில் தான் இத்துணை சப்தங்களும், கண்காட்சிகளும் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

○ ○ ○

மலாலா மீது நடாத்தப்பட்ட கொலைத் தாக்குதல் கண்டிக்கப்பட வேண்டியது. அவர் சுடப்பட்ட சம்பவம் சாதாரண ஒரு சம்பவமாகத்தான் ஆரம்பத்தில் ஊடகங்களில் வெளிவந்தது. அதுவரை அவர் பற்றி எந்தவொரு செய்தியும், கல்விக்காக அவர் குரல் கொடுத்ததாக எந்தவொரு உள்ளூர் பத்திரிகையும் செய்தி வெளியிட்டதில்லை. மலாலாவின் அவ்வாறான முயற்சிகள் குறித்து அவரது சொந்தக் கிராம மக்களே அறிந்திருக்கவில்லை. ஆனால் என்றைக்கு மலாலாவின் மீதான தாக்குதல் தாலிபான்களால் நடத்தப்பட்டதாக மேற்கத்தேய ஊடகங்களில் செய்தி வெளியானதோ, அதன் பின் இணைப்பாக பெண்கள் கல்விக்காக மலாலா குரல் கொடுத்ததாக ஒரு கண்டுபிடிப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதுவும் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் தொலைவில் இருக்கும் நாடுகளின் ஊடகங்களின் புலனாய்வு செய்தியாளர்கள் அமெரிக்க சி.ஐ.ஏ.வின் உதவியுடன் கண்டுபிடித்த உண்மை அது. அதன் பின்னர்தான் பெண் கல்விக்காக குரல் கொடுத்த மலாலா வீராங்கனையாக்கப் படுகின்றார். அதன் பின்புலத்தில் அமெரிக்காவும், பிரிட்டனும் தலையிட்டு அவருக்கு விசேட சிகிச்சையளிக்க பிரிட்டனுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றார். சர்வதேச ஊடகங்களின் தலைப்புச் செய்தியாக மாற்றப்படுகின்றார்.

தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியின் முன் இன்றைய உலகின் வீரர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும் பரமாதிபத்திய சக்தியை ஊடகங்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டுள்ளன. ஒரே நிமிடத்தில் உங்களை உலக மட்டத்தில் உயர்த்தி வைக்குமளவுக்கு அற்புதமான மந்திரக் கோல் ஒன்றை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அது மட்டுமன்றி உலகில் நடைபெறும் போராட்டங்களின் இலக்குகளையும், அதற்கான உரிமைகளையும் மறக்கடிக்கச் செய்யும் வகையில் ஊடகங்கள் உருவாக்கும் வீரர்கள் நிலைப்படுத்தப் படுவார்கள். மலாலா யூசுப் ஸாய் சிறுமிக்கு உலகம் இந்தளவுக்கு முக்கியத்துவம் அளிப்பதும், ஊடகங்கள் வரிந்து கட்டிக்கொண்டு செய்திகளை வெளியிடுவதற்குமான பின்னணியைப் புரிந்து கொள்ள மேற்கண்ட முன்னுரை பெரிதும் உதவியாக இருக்கும். மேற்கத்தேய ஊடகங்கள் சிறுமி மலாலாவை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுவதை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது?

மேற்கத்தேய நாடுகளின் முதலாளித்துவ ஜனநாயகம் அவர்களின் சொந்த நாடுகளை விட மூன்றாம் உலக நாடுகளில் அவர்களின் தலையீட்டினைப் பொறுத்தே கேள்விக்குட்படுத்தப்படுகின்றது. அதிலும் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலேயே முதலாளித்துவ ஜனநாயகத்தின் முகமூடி கிழிக்கப்படுமளவுக்கு அது

கேள்விக்குட்படுத்தப் படுகின்றது. இந்த நாடுகளில் காணப்படும் கலாசார விழுமியங்களுக்கு முதலாளித்துவ ஜனநாயகத்தின் மூலம் ஏற்படுத்தப்படும் அழுத்தம், நெருக்கடிகள் காரணமாக இங்கு வாழும் மக்களும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் மேற்கொள்ளும் தலையீடுகளைப் பொறுத்து அவர்களின் நேர்மை கேள்விக்குட்படுத்தப் படுகின்றது.

சிறுமி மலாலாவைச் சுற்றி பிணையப்பட்டுள்ள வலைப் பின்னலை இதன் அடிப்படையில் தான் நாம் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. ஊடகங்களின் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு சிறுமி மலாலா தாலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியிருந்தால், அதனை உலகில் யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் இந்தச் சம்பவத்தின் பின்னர் அவள் மேற்கத்தேய ஊடகங்களின் தலைப்புச் செய்தியாக மாற்றம் பெறுமளவுக்கு, பின்னணியாக இருந்த நிகழ்வுகளை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டியுள்ளது. அவள் மருத்துவ சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட தொடக்கம், சிகிச்சை முடிந்து பிரித்தானிய மருத்துவமனையில் இருந்து வெளியேறியதைக் கூட மேற்கத்தேய நாடுகளின் ஊடகங்கள் ஒன்றுவிடாமல் முக்கிய செய்தியாக பிரசுரித்திருந்தன. இதனை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது? எந்த தர்க்கத்தின் அடிப்படையில் இதனை நியாயப்படுத்த முடியும்?

பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்கில் ஒரு சிறுமிக்கு நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு குறித்து உலகின் ஒட்டுமொத்த கவனம் குவிக்கப் பட்டாலும், ஒபாமாவின் நிர்வாகத்தின் கீழ் பாகிஸ்தானில் மட்டும் இதுவரை 300க்கும் அதிகமான தடவைகள் ஆளில்லா விமானங்களின் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதல்களில் 98 வீதத்துக்கும் அதிகமான குண்டுவீச்சுத் தாக்குதல்களின்போது பொதுமக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதல்களின் காரணமாக கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகமாகும். இதில் மலாலாவின் வயதையொத்த அல்லது அந்த வயதைவிட குறைந்த வயதையுடைய 176 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 3 தொடக்கம் 17 வயது வரையானவர்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

யெமனில் மட்டும் அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானங்கள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்ட சிறுமிகளின் எண்ணிக்கை 30 ஐ தாண்டும். இப்படியிருக்க சிறுமி மலாலா மட்டும் முன்னிலைப் படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படும் ஊடக பிரச்சாரங்கள் குறித்து நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டியுள்ளது. இதனையொட்டி சில கேள்விகளும் நமக்குள் எழுகின்றன.

○ ○ ○



இதில் பிரதானமான கேள்வி என்னவென்றால், அமெரிக்கத் தாக்குதல்களுக்கும், மலாலா மீது தாலிபான்கள் "மேற்கொண்டதாக" கூறப்படும் தாக்குதலுக்கும் இடையில் உள்ள பிரதானமான வித்தியாசம் என்ன? மேற்கத்தேய நாடுகளின் பார்வையில் வீராங்கனையாகப் போற்றப்படும் மலாலாவுக்கும், அமெரிக்கத் தாக்குதலில் முகம் கருகி வாழ்க்கையையே போராட்டமாக எதிர்கொண்டுள்ள ஷாகிரா போன்ற சிறுமிகளுக்கும் இடையிலான வேறுபாடு என்ன? மலாலாவை போற்றும் உலகம் இவர்களை கண்டுகொள்ளாமல் விட்டதற்கான நியாயங்கள் என்ன?

இதில் பிரதானமான கேள்வி என்னவென்றால், அமெரிக்கத் தாக்குதல்களுக்கும், மலாலா மீது தாலிபான்கள் "மேற்கொண்டதாக" கூறப்படும் தாக்குதலுக்கும் இடையில் உள்ள பிரதானமான வித்தியாசம் என்ன?

ஜூலை 12 - ஐ.நா.வால் "மலாலா தினமாக" அறிவிக்கப்பட்டிருக்கிறது. உலகின் எல்லா பெண் குழந்தைகளுக்கும் கல்வி உரிமையை வலியுறுத்தி, மலாலாவைக் கௌரவப்படுத்தும் விதமாக, இத் தினம் அனுசரிக்கப்படுவதாக ஐ.நா.பொதுச்செயலாளர் திரு. பான் கி மூன் தெரிவித்துள்ளார். பாராட்டி வரவேற்கப்பட வேண்டியது. இதுபோலவே "அபீர் ஹம்ஸா தினம்" என்று மார்ச் 12-ம் தேதியை ஐ.நா. அறிவிக்குமா? 2006ம் ஆண்டு அன்றைய தினம்தான்,மலாலாவைவிட இளையவளான சிறுமி அபீர் ஹம்ஸா, இராக்கை ஆக்கிரமித்த அமெரிக்க ராணுவத்தினரால் கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, குடும்பத்தோடு கொல்லப்பட்டாள். உலகம் அறியாத அபீர் ஹம்ஸாக்கள் எத்தனை பேரோ!கல்வியைவிட மானமும், உயிரும் பெரிதல்லவா?

ஆனால் இதுகுறித்து யாரும் வாய் திறக்க மாட்டார்கள். ஏனெனில் தமக்கு விதிக்கப்பட்ட பாதையில், தமக்கு அளிக்கப்பட்ட சுதந்திரத்தை அனுபவித்தபடி, தமது எஜமானின் மூக்குக் கண்ணாடியினூடாக புலனாய்வுகளை மேற் கொண்டு, செய்திகளைத் தருவதுதான் அவர்களின் பணி.

மலாலாவுக்காக மட்டும் ஒரு தினத்தை பிரகடனப்படுத்துவதாக இருந்தால், தினமும் செத்து மடிகின்ற ஆப்கானிய, பாலஸ்தீன, ஈராக்கிய, சிரிய குழந்தைகளுக்கு எந்தத் திகதியை பிரகடனப்படுத்துவது? வருடத்தில் 365 நாட்களுக்கும் தினம் 50-60 குழந்தைகளின்


பெயர்களை வைக்கலாம். செப்டம்பர் 30ஐ மறந்துவிட்டதா ஐ.நா. சபை? அமெரிக்காவின் செல்லப்பிள்ளை இஸ்ரேலின் தாக்குதலில் படுகாயமடைந்த சிறுவன் அது 'முஹம்மத் அல் துர்ராஹ் உயிரிழந்த தினம்' ஆயிற்றே அது... மலாலாவைக் கொண்டாடும் உலகின் முன் அவன் என்ன பாவம் செய்தான்? மலாலாவை விட வயதிலும் இளைய முஹம்மத் அல் துர்ராஹ், ஆயிரம் கனவுகளுடன் பாடசாலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த வழியில், இஸ்ரேலின் தாக்குதலில் கொடூரமாக சிதைக்கப்பட்ட நிலையில் தானே கொல்லப்பட்டிருந்தான்? அப்படியென்றால் அவனுக்கு கல்வி கற்கும் உரிமை இல்லையா?



ஷாகிரா

மலாலா வாழ்ந்த அதே மண்ணில் மலாலாவை விட மூன்று மடங்கு வயதில் இளையவளான ஷாகிரா என்றொரு சிறுமி கொடூரமான முறையில் படுகாயமடைந்து உயிருக்காகப் போராடினாளே, அப்போது இந்த ஊடகங்கள் எங்கே போயின? ஆறே வயதான இந்தப் பாலகி அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானத் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்தவள். முகம் உட்பட தலையின் பெரும்பகுதி கருகிப் போன நிலையில், உள்ளூர் மருத்துவர்களின் தீவிர முயற்சியின் பின் குணமடைந்து, நடைப்பிணமாக வாழ்க்கையை எதிர்கொண்டுள்ள பச்சிளம் பாலகி ஷாகிராவுக்கு ஒரு நீதி, மலாலாவுக்கு ஒரு நீதி என்பது எந்தவகையில் நியாயம்? மேற்கத்தேய நாடுகளின் பார்வையில் வீராங்கனையாகப் போற்றப்படும் மலாலாவுக்கும், அமெரிக்கத் தாக்குதலில் முகம் கருகி வாழ்க்கையையே போராட்டமாக எதிர்கொண்டுள்ள ஷாகிரா போன்ற சிறுமிகளுக்கும் இடையிலான வேறுபாடு என்ன? மலாலாவை போற்றும் உலகம் இவர்களை கண்டுகொள்ளாமல் விட்டதற்கான நியாயங்கள் என்ன?

இதிலுள்ள இன்னொரு வேடிக்கை என்னவென்றால், மேற்கத்தேய நாடுகளின் ஊடகங்களில் பெண்களின் கல்விக்கு எதிராக துப்பாக்கிச் சூடு நடத்தியதாக கூறப்படும் தாலிபான்களை உருவாக்கியவர்களே அமெரிக்கா என்பதை எல்லோரும் வசதியாக மறந்து விடுகின்றார்கள். ஒருபுறத்தில் தாலிபான்களையும் வளர்த்துவிட்டு மறுபுறத்தில் அவர்கள் இஸ்லாமிய தீவிரவாதிகளாகவும், பெண் கல்விக்கு எதிரானவர்களாகவும் அவர்களின் வளர்ப்புப் பெற்றோர் மூலமே அடையாளப் படுத்தப்படுகின்றார்கள். இந்த முரண்பாட்டை எந்த வகையில் விளங்கிக் கொள்வது? ஆப்கானிஸ்தானில் தாலிபான்களின் 'இஸ்லாமிய அடிப்படைவாத' பாடசாலைகளை உருவாக்க நிதியுதவி செய்ததும் இதே அமெரிக்கா தான். 1980களின் ஆரம்பத்தில் ஆப்கானிஸ்தானில் மத அடிப்படையிலான பாடசாலைகள் 2500 மட்டுமே காணப்பட்டது. 2000ம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் அவ்வாறான பாடசாலைகளின் எண்ணிக்கையை 39 ஆயிரம் வரை அதிகரிக்க நிதியுதவி செய்தது அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உளவு அமைப்புத்தான்.

அதைவிட பயங்கரமான ரகசியம் என்னவென்றால் தாலிபான்களின் நிர்வாகத்தின் கீழ் இருந்த பாடசாலைகளில் போதிக்கப்பட்ட "இஸ்லாமிய ஜிகாத்" பாடநூல்கள் அனைத்தும் அமெரிக்காவில் தான் தயாரிக்கப்பட்டன. அந்த பாடநூல்களின் உள்ளடக்கம் எப்படியிருக்க வேண்டும் என்பதை அமெரிக்காவின் நெப்ராஸ்கா பல்கலைக்கழகத்தில் தான் முடிவு செய்யப்பட்டது. அந்தப் பாடப் புத்தகங்களில் அடிப்படைவாதம் குறித்து போதிக்கும் வகையிலான படவிளக்கங்கள் உள்ளடக்கப் பட்டிருந்ததுடன், அன்றைய காலகட்டத்தில் இது குறித்து கருத்துத் தெரிவித்த வெள்ளை மாளிகை நிர்வாகம், பாடப் புத்தகத்தின் உள்ளடக்கம் அமெரிக்கக் கொள்கைகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் இசைவாக உள்ளதாக நற்சான்றிதழ் வழங்கியிருந்தது. சோவியத் உடனான யுத்தத்தின்போது ஆப்கானில் அடிப்படைவாதத்தை வளர்த்தெடுப்பதும்



அதனை தனது நலன்களுக்காக பயன்படுத்திக் கொள்வதும் அமெரிக்காவின் உபாயமாக இருந்தது.


இந்நிலையில் இந்தக் கட்டுரையின் இறுதியாக 'மலாலாவின்' பின்னணியை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு பரீஆ அல் முஸல்மியின் சம்பவம் நமக்கு உதவியாக இருக்கும். ஐக்கிய அமெரிக்காவின் ராஜாங்க திணைக்களத்தின் புலமைப்பரிசில் பெற்று அங்கு கல்வி கற்கும் முஸல்மி, அமெரிக்காவின் செனட் சபையில் உரையாற்றியபோது தனது நாட்டின் மீது (யெமன்) மேற்கொள்ளப்படும் அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானங்களின் (ட்ரோன்) தாக்குதல்களை நிறுத்தும்படி கோரிக்கை விடுத்திருந்தார்." என் பெயர் பரீஆ அல் முஸல்மி. நான் யெமனின் மிகவும் பின்தங்கிய மலைப் பள்ளத்தாக்கு பகுதியான வெஸ்சாப் பள்ளத்தாக்கை சேர்ந்தவன். உலகின் பெரும்பாலானவர்களுக்கு இந்த மலைப்பள்ளதாக்கு குறித்து எதுவும் தெரிந்திருக்காது. ஆனால் இப்போதைக்கு ஆறு நாட்களுக்கு முன் எனது ஊரில் அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல் நடைபெற்றது. அந்தக் குண்டுவீச்சின் மூலம் ஆயிரக்கணக்கான அப்பாவி விவசாயிகளின் வாழ்க்கை சிதைக்கப்பட்டு, தலைகிழாக புரட்டிப் போடப்பட்டது" அமெரிக்க செனட் சபையில் பரீஆ ஆற்றிய உரையின் சாராம்சம் இதுதான்.

ஒரே கணத்திற்குள் தலைகீழாக புரட்டிப் போடப்பட்டு, சிதைக்கப்பட்ட அந்த அப்பாவி விவசாயிகளின் வாழ்க்கை குறித்து, அவர்கள் எதிர்கொண்ட அவலங்கள், அமெரிக்கத் தாக்குதலின் பின் அவர்கள் முகம்கொடுத்த மருத்துவ சிகிச்சைப் பிரச்சினைகள் மற்றும் உயிர்வாழ்வதற்கான போராட்டங்கள் குறித்து எந்தவொரு மேற்கத்தேய ஊடகமும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் மரத்தன் போட்டியில் நிகழ்த்தப்பட்ட குண்டுத் தாக்குதல் குறித்து உலகின் அனைத்து ஊடகங்களும் முந்திக் கொண்டு செய்திகளை வழங்குவதில் போட்டி போட்டன. இதுதான் இன்றைய ஊடக தர்மம். யெமன் நாட்டில் அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் இதுவரை மேற்கொண்டுள்ள தாக்குதல்களின் எண்ணிக்கை 80ஐத் தாண்டியுள்ளது. இதில் 170 பேர் வரையானோர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் மலாலாவின் வயதையொத்தவர்கள் மட்டும் சுமார் 30 பேரளவில் இருக்கும் என்று தெரியவந்துள்ளது

இவ்வளவு ஏன்? நமது இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது அழிஞ்சிப்பொத்தானை, காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலைகள், செஞ்சோலைப் படுகொலை, முள்ளிவாய்க்கால் படுகொலைகள் என இருதரப்பாலும் பச்சிளம் பாலகர்கள் கொன்று குவிக்கப்பட்ட எத்தனையோ தாக்குதல்கள் நடைபெற்றனவே... அப்போதெல்லாம் இந்த அமெரிக்காவும், மேற்கத்தேய ஊடகங்களும் என்ன செய்து கொண்டிருந்தன? மலாலாவை தங்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு, உலக நாடுகளையும் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுமாறு நிர்ப்பந்தம் செய்யும் ஐக்கிய நாடுகள் சபையோ, அமெரிக்காவோ இந்த அப்பாவிகளைக் கண்டுகொள்ளவே இல்லை.

## பெண்கல்வியும் இஸ்லாமிய பெண்களும்...


*1821ம் ஆண்டு வரை அமெரிக்காவில் பெண்களுக்கான கல்வி உரிமை மறுக்கப்பட்டே இருந்தது. 1841ம் ஆண்டுதான் அமெரிக்காவில் பெண்கள் ஆசிரியத் தொழிலில் ஈடுபட*



பரீஆ அல் முஸல்மி








அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாமிய நிழலில் பெண்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டுவிட்டது. இன்னொரு புறத்தில் உலகில் முதன் முதலில் பல்கலைக்கழகத்தை நிறுவி அதன்மூலம் சான்றிதழுடன் கூடிய பட்டப் படிப்புகளைத் தொடங்கியவர்களே இரண்டு முஸ்லிம் பெண்கள்தாம். பாத்திமா அல் ஃபிஹ்ரி, அவருடைய சகோதரி மர்யம் ஆகிய இரண்டு பெண்கள் கி.பி. 859ஆம் ஆண்டில் மொராக்காவோவில் ஒரு கல்வி நிறுவனத்தை உருவாக்கினர். அது படிப்படியாக பல்கலைக்கழகமாக வளர்ந்தது. இன்றும் அல்காராவின் பல்கலைக்கழகம் *(Al Qaraouine University)* என்னும் பெயருடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்கூட இதற்குப் பிறகுதான் - 1096இல் தான் தொடங்கப்பட்டது. அந்த முஸ்லிம் பெண்கள் உருவாக்கிய பல்கலைக்கழகத்தில் மார்க்கக் கல்வியுடன் வானவியல் *(Astronomy)*, புவியியல், மருத்துவம் என அனைத்துக் கல்வியும் கற்றுக் கொடுக்கப்பட்டன. இன்னொரு இஸ்லாமியப் பெண்ணான கரீமா அல் மர்வாசிய்யா எனும் பெண் மாபெரும் கல்வி மேதையாக விளங்கினார் என்று ஐரோப்பிய அறிஞர் கோல்ஸீஹரே நற்சான்று அளித்துள்ளார். *(Goldziher, Muslim Studies Part 2, 366)*

இந்த நூற்றாண்டிலும்கூட எகிப்தின் ஜைனப் கஸ்ஸாலி, அமெரிக்காவின் லூயி லாமா அல்பரூக்கி, மாபெரும் பெண் அறிஞர் மர்யம் ஜமீலா, கனடாவின் தலைசிறந்த கல்வியாளரான ஷாஹினா சித்தீகி, தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த கதீஜா ஹப்பாஜு எனத் தொடங்கி ஏராளமான முஸ்லிம் பெண் கல்வியாளர்கள் வரலாற்றில் ஜொலிக்கிறார்கள். இவர்களில் கதீஜா ஹப்பாஜு 1995இல் சீனாவில் நடந்த ஐநா பெண்கள் மாநாட்டில் முஸ்லிம் பெண்கள் சார்பாகக் கலந்துகொண்டவர். பல விருதுகள் பெற்றவர். இவர்களையெல்லாம் மேற்கத்தேய நாடுகளின் அறிக்கைகளை அப்படியே செய்தியாக்கும் சர்வதேச ஊடகங்கள் கண்டுகொள்ளவில்லை. குறைந்தபட்சம் அவர்களின் பெயரில் ஒரே ஒரு சர்வதேச தினம் கூட பிரகடனப்படுத்தப்படவில்லை. ஆனால் அமெரிக்காவுக்கும் அதன் சொற்படி ஆடும் மேற்கத்தேய நாடுகளின் ஊடகங்களுக்கும் மலாலா போன்றவர்கள்தான் வீராங்கனைகளாக உருவெடுக்கின்றார்கள். அதன் மூலம் மூன்றாம் மண்டல நாடுகளில் தமது தலையீடுகளை நியாயப்படுத்திக் கொள்ள அவர்களை உருவாக்குகிறார்கள். அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் நலன்களுக்காக தினமும் கொன்று குவிக்கப்படும் ஆயிரக்கணக்கான குழந்தைகளை வசதியாக கண்டும் காணாமல் மறந்துவிடும் ஊடகங்கள், தமது நாடுகளின் நலன்களை பாதுகாத்துக் கொள்ள மலாலா போன்றவர்களுக்கு தங்கத் தாம்பாளம் விரித்து நம் கண்களை மறைக்கிறார்கள்.

ஆனால் நியாயமான சிந்தனைப் போக்குக் கொண்ட சொற்ப ஊடகங்கள் மட்டும் மலாலா மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு அமெரிக்காவின் நலன்களுக்காக, அதன் கூலிப்படைகளால் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச் சூடு என்பதாக தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருக்கின்றன. எனினும் முதலாளித்துவ ஜனநாயக ஊடகங்களின் முன்னால் அவற்றின் குரல்கள் அடங்கிப்போவதால் யாரும் கண்டுகொள்வதில்லை. அந்த இடைவெளிக்குள் நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருக்கும் கணத்தில் கூட மலாலாவின் மண்ணில், இந்தப் பூமியியின் வெவ்வேறு பகுதிகளில் இன்னொரு அப்பாவிச் சிறுமி, அமெரிக்காவின் தாக்குதலில் மரணித்துக் கொண்டிருப்பாள்... அநியாயமாக... அவர்களை யார் நினைவு கூர்வர்? அவர்களை யார் கௌரவிப்பர்?. ▣

# சிங்கள - முஸ்லிம் இன நல்லுறவு



எஸ். சிபான்

சிங்கள - முஸ்லிம் மக்களிடையே இன உறவை சீர்குலைப்பதற்கான எத்தனம் எடுக்கப்பட்டு வருகிறது. பலப் பல பெயர்களிலும் புதுப்புது வழிமுறைகள் ஊடாகவும் , முஸ்லிம் விரோத சக்திகள் சிங்கள மக்கள் மத்தியில் தமது பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களுடனும், இனவாதத்திற்கு எதிராக செயற்படுகின்ற அமைப்புகளுடனும் பரஸ்பர புரிதலுடன் இணைந்து வேலை செய்ய வேண்டிய காலகட்டம் இது. மகியங்கனை பள்ளிவாசல் அகற்றப்படுவதற்கு எதிராக, பொது பலசேனாவை எதிர்த்து, மகியங்கனை நகரிலேயே தனது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தியவர் ஒரு பௌத்த பிக்குதான்.

மகியங்கனை பிரேதேச சபை உறுப்பினராகவும், அப்பிரதேச மக்களின் நன்மதிப்பை பெற்றவருமான விஜித தேரர், மகியங்கனையிலிருந்து கொழும்புக்கு பிரயாணம் மேற்கொண்ட போது, அவரை பின் தொடர்ந்து வந்த இனவாதிகள், முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவித்தமைக்காக போராதனையில் வைத்து தாக்கப்பட்டார். தன்னை தாக்கியவர்கள், மகியங்கனை பிரதேச சபையை சேர்ந்த ஒரு அரசியல்வாதியும், பொதுபலசேன உறுப்பினர்களும் என கேகாலை பொலிஸ் நிலையத்தில் பௌத்த தேரர் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். சிங்கள மக்களுக்குள் இருந்து இந்த இனவாதிகளுக்கு எதிரான குரல்கள் வெளிவருவது மிகமுக்கியமாகும்.

○ ○ ○

இலங்கை தேசத்தின் வரலாற்றை எழுதும் ஆய்வுகள் சுதந்திரத்துக்கு முந்தியகாலம் மற்றும் சுதந்திரத்துக்குப் பிந்திய காலம் என்று இரண்டு காலகட்டங்களை தனித்தனியாக எழுதுவது வழக்கம். இலங்கையின் வரலாறு கூறும் மகாவம்ச நூல் சுதந்திரத்துக்கு முந்திய இலங்கையின் வரலாற்றையே எழுதி வைத்துள்ளது. எனினும் இதில் பௌத்த மதம் சாராத ஏனைய இனங்களின் வரலாறுகள் இருட்டடிப்புச் செய்யப் பட்டிருப்பதிலிருந்தே மன்னர் கால இலங்கையிலும் ஏனைய இனங்களின் உரிமைகளை மறுப்பதில் பௌத்த பிக்குகளின் இனவாதம் வெளிப்பட்டிருப்பதை தெளிவாக காணமுடிகின்றது. ஏனெனில் மகாவசம்சம் என்ற நூல் பெரும்பாலும் பௌத்த பிக்குகளாலேயே எழுதப்பட்டது. எனினும் மகாவம்சம் அதன் தொடர்ச்சியான சூளவம்சம் நூல்களுக்கு அப்பால் சென்று இலங்கையின் வரலாற்றை ஆராயும்போது முற்கால இலங்கையில் அராபியர்கள் மற்றும் அதன் வழித்தோன்றல்களான முஸ்லிம்களின் பங்களிப்பு குறித்த காத்திரமான சான்றுகள் எமக்குக் காணக்கிடைக்கின்றது.

இதன் ஆரம்ப சான்றாக கி.பி. 150ம் ஆண்டில் தொலமி வரைந்த பூகோள வரைபடத்தில் இலங்கையில் பல பகுதிகளிலும் பாரசீக மற்றும் அரேபியக் குடியிருப்புகள் காணப்பட்டமைக்கான சான்றுகள் பதிவாகியுள்ளன. தொலமியின் வரைபடத்தில் அக்காலத்தில் இலங்கையில் காணப்பட்ட நதிகளுக்கு அந்த நதி தீரங்களில் வாழ்ந்த வர்த்தக சமூகங்களின் பெயரையே அவர் சூட்டியுள்ளார். அதன் அடிப்படையில் திருகோணமலையின் கொட்டியாரக்குடாவில் கடலில் சங்கமமாகும் மகாவலி ஆறு பலூசியஸ் நதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பலூசியஸ் என்பது அக்கால பாரசீகத்தின் இன்னொரு பெயராகும். பாரசீகம் என்பது இன்றைய ஈரான் மற்றும்

ஈராக் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு பெரும் நிலப்பரப்பாகும். அடுத்ததாக சிலாபம் நகரை ஊடறுத்துச் சென்று கடலில் கலக்கும் தெதுறு ஓய நதி பிலூசியஸ் நதி என்பதாக தொலமியின் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'பிலூசியஸ்' என்பது அக்கால அரேபியாவாகும். சிலாபம் முத்துவிளையும் பிரதேசமாக இருந்த காரணத்தினால் அக்காலத்தில் முத்து வர்த்தகத்தில் பெயர்பெற்று விளங்கிய அரேபியர்கள் இந்த நதி தீரத்தில் குடியமர்ந்திருந்தார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

என்னதான் மறைத்து, திரித்து வரலாறு எழுதப்பட்ட போதும் மகாவம்ச வரலாற்று நூலிலும் ஒரு சில இடங்களில் முஸ்லிம்கள் மற்றும் அரேபியர் பற்றிய குறிப்புகள் சிற்சில இடங்களில் தவிர்க்க முடியாத வகையில் அந்த நூலில் இடம்பெற்றுள்ளது. அந்த வகையில் அனுராதபுர ராசதானியில் அரேபிய வர்த்தகர் குடியிருப்பு பற்றிய குறிப்புகள் மகாவம்சத்தில் இடம்பெற்றுள்ளது. சிங்கள மன்னர்களுக்கு உயர் ரக பாரசீக குதிரைகளை வழங்கிய வர்த்தகர்களாக மகாவம்ச வரலாற்றுத் தடங்களில் முஸ்லிம்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர். மேலும் அக்கால போர்ப்படை வீரர்களுக்கு குதிரையேற்றப் பயிற்சியும் முஸ்லிம் வர்த்தகர்களாலேயே வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு போர்க்குதிரைப் பயிற்சி வழங்கிய ஒரு அரேபிய வர்த்தகர் இஸ்லாமிய வணக்க வழிபாடுகளில் ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். அக்கால மக்கள் அவரை அதிகம் மதித்ததாகவும், அவர் மரணித்த போது அனுராதபுர நகரின் மத்தியில் அவருடைய ஞாபகமாக ஒரு சமாதி எழுப்பப்பட்டதாகவும் இன்றளவும் ஒரு வாய்வழி வரலாறு அனுராதபுரத்தில் நிலவுகின்றது. இந்த சமாதி பிற்காலத்தில் சியாரம் என்றழைக்கப்பட்டதுடன், அதனுடன் இணைந்ததாக ஒரு பள்ளிவாசலும் நிர்மாணிக்கப் பட்டிருந்தது. இந்தப் பள்ளிவாசல் தான் இன்றைய துட்டகைமுனு என்றழைக்கப்படும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆசியோடு சிங்கள இனவாதிகளால் கடந்தாண்டு ஆரம்பத்தில் இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தது.

இதற்கு அடுத்ததாக இலங்கையில் அரேபியரின் பிரசன்னம் பற்றிய தெளிவான குறிப்புகளை வழங்கியிருக்கும் வரலாற்று பதிவு 5ம் நூற்றாண்டின் மத்திய காலப் பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்த சீனாவின் தேச சஞ்சாரி பாகியன் பிக்குவின் வரலாற்றுக் குறிப்புகளில் காணப்படுகின்றது. அவரது இலங்கை விஜயத்தின் போது அராபிய வர்த்தகர்களை இலங்கையில் கண்டதாக அவர் பதிந்துள்ளார். இலங்கை சிங்களவரின் ஆடைகளில் முஸ்லிம்களின் செல்வாக்கு மிகுந்திருந்த காலகட்டம் ஒன்றிருந்தது. கண்டி இராச்சியத்தின் சிங்கள பிரபு வர்க்கத்தினர் அணிந்த துப்பட்டி என்ற ஆடை முஸ்லிம்களாலேயே உருவாக்கப்பட்டது. இதன் காரணமாக முஸ்லிம்களில் நெசவுத் தொழில் புரிந்தோர் 'துப்பட்டி குருன்னெஹெ' என்ற கௌரவப் பெயரால் அழைக்கப்பட்டனர். 1915ம் ஆண்டின் மார்ச் மாதம் 05ந் திகதி வெளிவந்த தினமின சிங்கள ஏட்டில் டி.எஸ்.டீ அல்விஸ் என்பவர் அக்கால சிங்கள ஆடவர் அணியும் ஆடையை வகைப்படுத்தியிருந்தார்.

அவற்றில் தொப்பி, நெமிபனா எனப்படும் வளைந்த சீப்பு, பெணியன், கமிசை, கம்பாயம், ரெத்த, காற்சட்டை என்பன முக்கிய இடம் பெற்றிருந்தது. இவற்றில் நெமிபனா எனும் சீப்பை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் இஸ்லாமிய ஜாவர்கள் ஆவர். ஒல்லாந்த படையுடன் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்கள். இவர்களின் வருகைக்கு முன்னர் நெமிபனாவுக்கு பதில் தலைப்பாகை அணியும் வழக்கமே சிங்களவர் மத்தியில் காணப்பட்டது. மேலும் இதில் காணப்படும்

**என்னதான் மறைத்து, திரித்து வரலாறு எழுதப்பட்ட போதும் மகாவம்ச வரலாற்று நூலிலும் ஒரு சில இடங்களில் முஸ்லிம்கள் மற்றும் அரேபியர் பற்றிய குறிப்புகள் சிற்சில இடங்களில் தவிர்க்க முடியாத வகையில் அந்த நூலில் இடம்பெற்றுள்ளது. அந்த வகையில் அனுராதபுர ராசதானியில் அரேபிய வர்த்தகர் குடியிருப்பு பற்றிய குறிப்புகள் மகாவம்சத்தில் இடம்பெற்றுள்ளது.**

கமிசை என்ற மேற்சட்டை கமிஸ் எனப்படும் அராபிய சொல்லில் இருந்தே உருவானது. மேலும் இன்றளவும் கிராமப்புற சிங்களவர் மத்தியில் காணப்படும் வழக்கத்தில் உள்ள சாரம் அணியும் முறையும் முஸ்லிம்களால் தான் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவும் ஜாவர் மற்றும் மலாய முஸ்லிம்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. சாரம் என்பது ஒரு ஜாவா மொழிச் சொல்லாகும். பிற்காலத்தில் மட்டக்களப்பு சாரம் என்ற பெயரில் தரமான சாரம் உற்பத்தியும் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 1910ம் ஆண்டின் ஜூன் மாதம் 10ம் திகதி வெளிவந்த தினமின சிங்கள பத்திரிகையின் "மட்டக்களப்பு புடவை" எனும் ஆசிரியர் தலையங்கத்தில் இலங்கை நெசவுத் தொழில் வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்களிப்பு தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சிங்களப் பெண்களின் கலாசார ஆடையான ஒசரி சேலை கூட இஸார் என்ற அராபிய சொல்லின் பிறழ்வாக உருவான வார்த்தையைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆடை வடிவமைப்பு என்பதாகவே சிங்கள ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கை வெளி நாட்டவரின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் அராபியர் மற்றும் இஸ்லாமியரின் உதவி இலங்கை ஆட்சியாளர்களுக்கு கிடைத்திருப்பதும் வரலாற்றுத் தகவல்களில் பதியப்பட்டுள்ளது. தம்பதெனிய இராஜதானியை அரசாண்ட இரண்டாம் பராக்கிரமபாகு காலத்தில் - *(1236-1270)* ஜாவா தேசத்து அரசன் சந்திரபானுவின் ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அராபியரின் கப்பற் படை உதவியுடனேயே சந்திரபானுவை இலங்கை அரசன் விரட்டியடித்தான். அதன் பின்னர் 1505ம் ஆண்டு போர்த்துக்கேயர் ஆக்கிரமிப்பின் போதும் இலங்கை முஸ்லிம்களின் உதவி சிங்கள ஆட்சியாளருக்கே கிடைத்தது. இதற்குப் பழிவாங்கும் முகமாக தென்னிலங்கையில் பலப்பிட்டி உள்ளிட்ட சில பகுதிகளில் வாழ்ந்த ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் போர்த்துக்கேயரால் இனசங்காரம் செய்யப்பட்டனர். அதற்குப் பின்வந்த காலப்பகுதியில் மாயாதுன்னை அரசன் காலத்தில் நவமுஸ்லிம் அரசன் சமோரினின் கடற்படை உதவி, இலங்கை அரசனுக்கு சார்பாக கடற்போரிட்டு தன்னுயிரை மாய்த்த குஞ்சலி மரைக்காயர் என்ற முஸ்லிம் வீரத் தளபதி வரலாறும், மாயாதுன்னை அரசனின் தரைப்படைத் தளபதி பிச்சை இபுராஹிமின் அர்ப்பணிப்புகளும், கண்டி சிங்கள மன்னனை பாதுகாக்க தன்னுயிரை இழந்த மஹியங்கனை முஸ்லிம் பெண்ணின் தியாகமும் இலங்கையின் வரலாற்றுத் தடங்களில் இன்றளவும் அழிக்கப்படாத சுவடுகளாக காணப் படுகின்றது.



மறுபுறத்தில் சிங்கள அரசர்கள் மற்றும் பிரதானிகளால் காலத்துக்குக் காலம் முஸ்லிம்களுக்கும் கண்ணியமளித்து, கௌரவித்த நிகழ்வுகளும் ஏராளம் பதியப்பட்டுள்ளன. பேருவளையில் முதலில் குடியேறிய முஸ்லிம்களால் நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜிதுல் அப்ரார் சிங்கள அரசனின் அனுசரணையுடனேயே நிர்மாணிக்கப்பட்டது. இதுதான் இலங்கையின் முதற் பள்ளிவாசலாகும். காலி கஜுவத்தையில் 1300 ஆண்டுகள் பழமையான பள்ளிவாசல் காணப்படுகின்றது. இவ்வாறாக முஸ்லிம்களுக்கு பள்ளிவாசல்களை நிர்மாணித்து மதவழிபாடுகளை மேற்கொள்ள சிங்கள மன்னர்கள் அனுமதியளித்த நிகழ்வுகள் தொடர்பான வரலாற்று ஆதாரங்களில் ஒன்றாக கி.பி. 1016ம் ஆண்டு பேருவளையில் வாழ்ந்த பெரிய தம்பி முதலி மரைக்காயர் என்பவருக்கு சிங்கள அரசர் ஒருவரால் வழங்கப்பட்ட பழங்கால செப்புப் பட்டயம் தொடர்பில் குறிப்பிடலாம். மேலும் 1720ம் ஆண்டில் கண்டி அரசன் ஸ்ரீ பராக்கிரம நரேந்திர சிங்கன் புத்தளத்திற்கு விஜயம் செய்தபோது புத்தளம் மக்கள் அவருக்கு மகத்தான வரவேற்பளித்து கௌரவித்தனர். அந்த பெரு வரவேற்பில் மனம் மகிழ்ந்த அரசன் அரச இலட்சினை பொறிக்கப்பட்ட கொடி, வெண்தாமரை, ஆலவட்டங்கள் போன்ற பல பொருட்களை புத்தளம் பள்ளிவாசலுக்கு அன்பளிப்பாக வழங்கியதாக வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டி மஹிய்யாவையில் அமைந்திருக்கும் ஜாமியுஸ் ஸஹராத் பள்ளிவாசல் தலதா மாளிகைக்கு அருகில் அமைந்துள்ள ஒரு பள்ளிவாசலாகும். இதன் அமைப்பு அக்கால அரசர்கள் தமது அமைச்சர் பிரதானிகளுடன் கலந்தாலோசனை நடத்தும் மங்குல்மடுவ அரங்கின் அமைப்பை ஒத்திருக்கின்றது. இதன் மூலம் சிங்கள அரசனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மங்குல்மடுவ அரங்கமே பள்ளிவாசலாக மாற்றம் பெற்றுள்ளதை நாம் அறிய முடிகின்றது. அக்கட்டிடத்தைச் சூழ இருந்த விசாலமான நிலப்பரப்பும் கண்டிஅரசன் ராஜாதி ராஜசிங்கனால் பள்ளிவாசலுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

இவ்வாறாக அந்நிய ஆக்கிரமிப்புக்கு முன்னும், அதன் பின்னும் இலங்கை சிங்கள அரசர்கள் மற்றும் பொதுமக்கள் உடனான முஸ்லிம்களின் உறவுகள் நல்ல முறையில் பேணப்பட்டு வந்துள்ளது. இருதரப்பும் ஒருவரையொருவர் மதித்து, கண்ணியப்படுத்திய சம்பவங்கள் வரலாற்றில் பரவிக் காணப்படுகின்றது. இலங்கையின் ஆட்சிக் கட்டிலும் குறுகிய காலகட்டத்திற்காயினும் முஸ்லிம்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளது. சிங்கள இராசதானிகள் தென்மேற்காக இடம்பெயர்ந்தபோது சிலாபம், புத்தளம், மன்னார் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசங்களை குமார வன்னியர் என்ற

பெயரில் அறியப்பட்ட முஸ்லிம் இளவரசர் ஒருவர் நிர்வகித்துள்ளார். 3ம் விஜயபாகு மன்னன் மணமுடித்திருந்த பேருவளை முஸ்லிம் பெண்ணொருவரின் வழித்தோன்றலான கலே பண்டார அல்லது வத்ஹிமி குமாரயா என்றழைக்கப்பட்ட குறைசான் ஸேஹ் இஸ்மாயில் என்ற இளவரசர் பேருவளை பகுதியை தன் நிர்வாகத்தின் கீழ் வைத்திருந்தார். மேலும் தன் தந்தையின் மறைவின் பின் சிறிது காலம் எதுகல்புர என்றழைக்கப்படும் இன்றைய குருநாகல் பகுதியை ஆட்சி செய்துள்ளார். இலங்கையின் காலனித்துவ கால வரலாற்றில் முஸ்லிம்கள் இலங்கை நாட்டிற்கு செய்த பங்களிப்புகள் ஏராளம் உள்ளன.

சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையிலும் 1982ம் ஆண்டளவில் இலங்கையின் சபாநாயகராக இருந்த பாக்கீர் மாக்கார் அவர்கள், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன மற்றும் பிரதமர் பிரேமதாச ஆகியோர் நாட்டில் இல்லாத நிலையில் பதில் ஜனாதிபதியாக சிறிது நாட்கள் நாட்டின் ஆட்சியதிகாரத்தில் இருந்த சம்பவம் இங்கு நினைவுகூறத்தக்கது. இவ்வாறான நட்பும் புரிந்துணர்வும் கலந்த சிங்கள - முஸ்லிம் சகவாழ்வில் 1915ம் ஆண்டு நிகழ்ந்த சிங்கள - முஸ்லிம் இனக்கலவரம் ஒரு கறைபடிந்த நிகழ்வாகும். அதுவரை அந்நியோன்யமாக வாழ்ந்து கொண்டிருந்த இரண்டு சமூகங்களுக்கிடையில் விரிசல் விழத் தொடங்கிய ஆரம்ப புள்ளி அதுதான். அதன் பின்னர் சமூக அரங்கில் அநாகரிக தர்மபால போன்ற இனவாதிகளின் எழுச்சி, இந்த விரிசலை அதிகப்படுத்தியது. இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில் தான் 1948ம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கின்றது. மறுபுறத்தில் இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களின் சுதந்திரம் பறிபோன ஆண்டும் அதுதான் எனலாம். ஏனெனில் வரலாற்றுக் காலம் தொட்டு சிங்கள மன்னர் ஆட்சிக் காலங்களிலும், அதன் பின் 1505ம் ஆண்டு தொடக்கம் இலங்கையை ஆண்ட அந்நியர் நிர்வாகத்திலும் ஓரளவுக்கேனும் சிறுபான்மை சமூகங்களின் உரிமைகள் பாதுகாக்கப் பட்டிருந்தன. அவற்றைப் பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் அரசியல் அமைப்பில் உள்வாங்கப் பட்டிருந்தன. மேலும் இன்றைய நாடாளுமன்றத்தின் முன்னோடியான அன்றைய சட்டவாக்க சபையில் சிறுபான்மை சமூகங்களின் பிரதிநித்துவம் காத்திரமானதாகவே இருந்தது.

தமது ஆட்சிக் காலத்தில் ஓரளவுக்கு கௌரவமாக நடத்தப்பட்ட சிறுபான்மை மக்கள் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்து கொண்டு, தமக்கெதிரான நிலைப்பாட்டில் இருந்தபோதும், ஆங்கிலேயர் ஓரளவிற்கு பெருந்தன்மையுடனேயே கடைசிவரை நடந்து கொண்டனர். இதன் காரணமாகவே ஆட்சிப் பொறுப்பை சுதேசிகளிடம் ஒப்படைப்பதற்கு முன்பாக அவர்கள் இயற்றித் தந்த சோல்பரி யாப்பில் 29வது சரத்து என்ற பெயரில் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டது. சிறுபான்மை மக்கள் தொடர்பான விடயங்களில் அவர்களின் சம்மதம் இன்றி எந்தவொரு சட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாதவாறு ஆட்சியாளர்களுக்கு இந்த சட்டப்பிரிவு கடிவாள மிட்டிருந்தது. எனினும் இலங்கை சுதந்திரமடைந்தது தொடக்கம் இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டுக் கொண்டேவந்தது. கரையான் அரிப்பைப் போன்று படிப்படியாக பறிக்கப்பட்ட உரிமைகளை வேறுவழியின்றி விட்டுக் கொடுத்துக் கொண்டு, பெரும்பான்மை மக்களுடன் இணக்கப்பாடான அரசியல் நடவடிக்கைகள் தவிர சிறுபான்மை மக்களின் முன் வேறு தெரிவுகள் இருக்கவில்லை. எனினும் 1956ம் ஆண்டு தான் சுதந்திர இலங்கையில் சிறுபான்மை மக்களின் ஒட்டுமொத்த உரிமைகள் காலடிக்குள் போட்டு நசுக்கப்பட்டு, அடிமைச் சாசனம் எழுதப்பட்ட வரலாறு ஆரம்பிக்கப்பட்டது. சுதந்திர முறையில் சிறுபான்மை மக்கள் எதிர்கொண்ட முதலாவது சவால் பண்டாரநாயக்கவின் ஆட்சியில் தான் நடந்தது.

பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலத்தில்தான் பிக்குகளின் தலைமையும் பிரித்தும், 'பண' ஓதுதலும், கண்டி நடனமும், 'கிரிபத்'தும் அரசியலில் பிரதான இடம்பெற்றன, பிக்குகள் அரசியலில் பிரதான இடத்தை பெற்றனர். சிங்கள இனத் தேசியவாதம் பிரதான பத்திரத்தினை ஏற்றது, பண்டார நாயக்கா அன்று விதைத்த விதைதான் இனவாத விருட்சமாக இன்று கிளை பரப்பி இலங்கையில் சிறுபான்மை மக்களின் வாழ்வாதாரத்திற்கான அச்சுறுத்தலாக உருவெடுத்தது. அடிப்படை உரிமைகளுக்கே கூட அடிமைப்பட்டு கெஞ்ச வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. இவ்வாறான நிலையில் தான் தனி அரசியல் வழி நின்று தமது உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தில் தமிழ்த் தரப்பு முதல் காலடி எடுத்து வைத்தது. தந்தை செல்வநாயகம் தலைமையிலான சமஷ்டிக் கட்சி தமிழர் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதையும், தமிழர் பிரதேச சுயாதிபத்திய அதிகாரத்தை நோக்காகவும் கொண்டிருந்தது.

எனினும் இக்காலப்பகுதியிலும் முஸ்லிம் அரசியல் தொடர்ந்தும் பெரும்பான்மை சமூகத்தின் நிழலில் தான் இளைப்பாறிக் கொண்டிருந்தது. சேர் ராசிக் பரீத், டி.பி. ஜாயா, பதியுதீன் மஹ்மூத் போன்ற முஸ்லிம் தலைமைகள் பெரும்பான்மை அரசியல் போக்குடன் இணக்கப்பாடான நிலையில் நின்று தம்மாலான வகையில் முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் உரிமைகள் என்ற பெயரில் சிற்சில சலுகைகளைப் பெற்றுக் கொள்வதிலும் வெற்றி கண்டனர். இவ்வாறான கால ஓட்டத்தின் நகர்வின் இடையே பண்டார நாயக்கவின் துணைவியார் ஸ்ரீமாவோ ஆட்சிக் காலத்தில் அதுவரை பெயரளவிலேனும் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து

வந்த அரசியலமைப்பின் 29வது சரத்து முற்றாக நீக்கப்பட்டது. சோல்பரி யாப்புக்குப் பதில் குடியரசு யாப்பு அறிமுகப் படுத்தப்பட்டது. அரசியல் மற்றும் சமூக ரீதியாக சிறுபான்மை சமூகங்கள் மீதான பெரும்பான்மை மக்களின் குரோதங்கள் வெளிப்படையாக கட்டவிழ்த்து விடப்பட்டது. அதற்கான அரச ஆதரவும் வெளிப்படையாகவே வழங்கப்பட்டது.

## சிங்கள இனவாதம் அரசியல் கட்சியாக மாறுதல்

வெவ்வேறு தளங்களில் இயங்கிக் கொண்டிருந்த சிங்கள இனவாதிகள் ஒரே அமைப்பின் கீழ் அணிதிரண்டு, அரசியல் களத்தில் செயற்படத் தொடங்கிய நிகழ்வாக திலக் கருணாரத்தின தலைமையில் தோற்றம் பெற்ற சிஹல உருமய கட்சியைக் குறிப்பிடலாம். அதே கட்சிதான் இன்று இனவாத விழுதுகளை சமூகத்தின் அடிமட்டம் வரை பரப்பி, ஜாதிக ஹெல உறுமய கட்சியாக பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. ஒரு காலத்தில் சிங்கள - முஸ்லிம் நல்லுறவை அன்றைய சிங்கள ஆட்சியாளர்கள் ஊக்குவித்தனர். ஆனால் இன்றைய சிங்கள ஆட்சியாளர்களோ இன விரிசலுக்கான முயற்சிகளுக்கே அனுசரணை வழங்கி, நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கின்றனர்.

அதிலும் குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் ஆட்சிக் காலத்தில் தான் முஸ்லிம்களுக்கு எதிரான ஏராளம் இனவிரோத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு அரச ஆதரவும் வெளிப்படையாகவே கிடைத்துள்ளது. மேலும் தங்களுக்கு எதிரான அநீதிகளின் போது எதிர்த்துக் குரல் கொடுக்க முடியாத

**சிங்கள பொது மக்களுடனான உறவும், முஸ்லிம்களுடனான அவர்களின் உறவையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்புவது அடிப்படையான விடயமாக மாறியுள்ளது. இதனை முக்கிய விடயமாக எடுத்து செய்வதன் மூலமே இன்றைய நெருக்கடிகளை ஓரளவு எதிர்கொள்ளமுடியும்**

வகையில் முஸ்லிம்களின் தனித்துவ அரசியல், அரசியல் பிரதிநிதித்துவம் என்பன நசுக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் சிங்கள ஆட்சியாளரின் அனுசரணையுடன் நமக்கான வழிபாட்டிடங்கள் அமையப் பெற்றன. இன்றோ அதே இனத்தில் வந்த ஆட்சியாளர்களின் அனுசரணையுடன் எமது பள்ளிவாசல்கள் அழிக்கப்படும் நிகழ்வுகள் தொடர்கின்றன. இன்றைய சிங்கள மக்களின் தேசிய ஆடைகள் அன்றைக்கு எமது முன்னோர் வடிவமைத்துக் கொடுத்த ஆடைகளே. ஆனால் இன்றோ நமது கலாசார ஆடைகளுக்கே சிங்கள மக்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் குறுகிய காலப்பகுதியிலாயினும் நமது முன்னோர் இந்த நாட்டை ஆட்சி செய்துள்ளார்கள். ஆட்சியாளர்களின் பறிபோன அரசுகளைத் திரும்பப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள். ஆனால் இன்றைக்கு நமது அடிப்படை அரசியல் உரிமைகள் கூட இனவாத சிந்தனைகளின் எழுச்சி காரணமாக பறிபோய்க் கொண்டிருக்கிறது.

இன்று முஸ்லிம்களை அந்நியராக கருதி ஒதுக்கி வைக்க முனைகின்றார்கள். ஆட்சிக்கு ஆதரவு கொடுத்த போதும் ஆட்சியில் பங்கு கேட்காமல், நியாயமான உரிமைகளை கேட்டால், வந்தேறிகள் என்று விரட்டியடிக்க முனைகின்றார்கள். அந்த வகையில் இன்றைய கள நிலைமை பயங்கரமான எதிர்காலத்தை எம் மனக்கண் முன் காட்சிப்படுத்தி நிற்கின்றது. எமது எதிர்கால சந்ததியினரின் இருப்பையே அடியோடு துடைத்து எறிவதற்கான முயற்சிகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றைத் தகர்த்தெறிந்து, எமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ளவும், இலங்கைத் திருநாட்டில் எமது இருப்பையும், வரலாற்று பெருமைகளையும் தக்கவைத்துக் கொள்ளவும் விவேகமாகவும், வேகமாகவும் செயற்பட வேண்டிய வரலாற்றின் நெருக்கடிக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இந்த நெருக்கடியிலிருந்து விடுபடுவதாயின் முதலில் எம்மத்தியில் தெளிவான சிந்தனையும், நிதானமான போக்கும் அவசியப் படுகின்றது. இதில் சிங்கள பொது மக்களுடனான உறவும், முஸ்லிம்களுடனான அவர்களின் உறவையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்புவது அடிப்படையான விடயமாக மாறியுள்ளது. இதனை முக்கிய விடயமாக எடுத்து செய்வதன் மூலமே இன்றைய நெருக்கடிகளை ஓரளவு எதிர்கொள்ளமுடியும் என்பதுடன், அரசியல், இன நோக்குடன் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் திரட்டும் இனவாத சக்திகளின் நோக்கத்தினை முறியடிக்க முடியும். அத்துடன் ஊடக வெளி, அரசியல் அரங்கு, சமூக செயற்பாடுகள் என அனைத்து தளங்களிலும் இன நல்லுறவுக்கான செயற்பாடுகளில் எமது பங்களிப்பை வழங்குவது அவசியமாகும். அத்துடன் இனவாதத்திற்கு எதிராக சிங்கள மக்களுக்குள் இருந்து எழுகின்ற அனைத்து முற்போக்கு சக்திகளுடனும் நேச உறவை கட்டி எழுப்புவதும் நாட்டின் அடிப்படை விடயங்களில் அதிக அக்கறை எடுப்பதும் அவசியமாகும்.

# தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான இன உறவு!

## கடக்கவேண்டிய விடயங்களும், காலகட்டத் தேவையும்...

● பையூஸ் அஹமட்

**1**

**சிறுபான்மை தேசிய இனங்கள் தமக்குள் ஒரு உரையாடலையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை திறந்து விடுதல்.**

இந்த விடயம் பற்றி உடனடியாக மனம் திறந்து இன்று பேசுவது மிக முக்கியமானது. அதே வேளை இந்த விடயம் பல விவாதங்களை எழுப்பக்கூடியதாகவும் இருபக்கமும் கசப்புகள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. எந்தப் புள்ளியிலிருந்தாவது தொடங்க வேண்டும் என்கிற தேவை இருப்பதால் இக்கட்டுரை எழுதப்படுகிறது. நான் ஏலவே தொட்டுக் காட்டியது போல் இது மிக்க சிக்கலான விடயமாதலால் பல்வேறு கருத்துக்களையும் பார்வைகளையும் பொதுவெளிக்கு கொண்டு வருவதன் ஊடாக மனம் திறந்த ஒரு மதிப்பீட்டுக்கு வரமுடியும் என்று நம்புகிறேன். இந்த உரையாடலில் எரிந்த கட்சி எரியாத கட்சி ஆரோக்கியமாகாது. இருபக்கமும் உள்ள விடயங்களை பொது நோக்கில் பார்ப்பதற்கும் அலசுவதற்கும் தயாராக வேண்டியதே முக்கியமானது.

தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையேயான உறவும், ஐக்கியமும் தேவையா? இல்லையா? என்கிற கேள்வி முதலில் பிரதானமானது. தேவை இல்லை என்று சொல்பவர்களுடன் உடனடியாக நாம் இது தொடர்பான கருத்துப் பரிமாற்றத்திற்கு செல்லத் தேவையில்லை. வேண்டும் என்று சொல்பவர்களுடன் அதன் இன்றையத் தேவை என்ன? முக்கியத்துவம் என்ன? இரு இன மக்களுக்கும் இந்த உறவு எந்தளவு பங்களிக்கும்? நன்மை பயக்கும் என்பதையிட்டு ஒரு கணக்கீட்டை செய்ய வேண்டியிருக்கிறது. இந்தக் கட்டுரையாளரைப் பொறுத்தவரை தமிழ், முஸ்லிம்களின் உறவு இன்றியமையாத தேவை என்பதை வரலாற்று சூழல் உணர்த்துகிறது என்று உறுதியாக நம்புகிறேன்.

இலங்கையின் அரசியல் சூழலைப் பொறுத்தவரை சிறுபான்மை தேசிய இனங்கள் என்ற வகையில் அவர்களுக்கு இரண்டு விடயங்கள் இந்த இன உறவைப் பொறுத்தவரை முக்கியமானது. ஒன்று, சிறுபான்மை தேசிய இனங்கள் தமக்குள் ஒரு உரையாடலையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை திறந்து விடுதல். இரண்டாவது சிங்கள இனத்துடன் உரையாடலையும், உறவையும் தொடர்ச்சியாகப் பேணுவது. இந்த இரு விடயங்களும் இலங்கையின் இனத்துவ அரசியல் நிலைமையைப் பொறுத்தவரை என்றும் பிரதானமானது. இந்த உரையாடலும் உறவும் நீண்டகால தேவை நோக்கில் செய்யப்படவில்லை என்பதே உண்மை. எடுக்கப்பட்ட ஆகக்குறைந்த முயற்சிகளும் சீர்குலைக்கப்பட்டே வந்திருக்கின்றன. தேசிய இன முரண்பாடு ஆழப்படுவதற்கும், இனவாதம் இறுகி அதிகார மையமாக மாறியதற்கும் இனங்களுக்கிடையே உறவு அருகிப் போனமை முக்கியமானது.

சிறுபான்மை தேசிய இனங்கள் என்கிற வகையில் தமிழர்களும், முஸ்லிம்களும், தங்களது அரசியல், சமூக தனித்துவங்களை பேணுகின்ற அதேவேளை மைய அரசின் இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராக எப்போதோ கைகோர்த்து இருக்க வேண்டும். அது நடக்கவில்லை. அதற்கு தடையான பல வலிய காரணங்களை அனைத்து தரப்பும் பட்டியலிட முடியும். இத்தரப்புகளில் உள்ள குற்றச்சாட்டுகளும், அதற்கான நியாயங்களும் இருக்கின்றன. ஆனால் இந்த உறவும், ஐக்கியமும் ஏற்படாததன் விளைவு, சிறுபான்மை இனங்கள் தமது அரசியல், சமூக இருப்பு, உரிமையை உருதிப்படுத்துவதில் தோல்வியை கண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு பிராந்தியங்களை தமது அரசியல் உரிமைக்கான அலகாகக் கொள்வதால், வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற

**2**

**சிங்கள இனத்துடன் உரையாடலையும், உறவையும் தொடர்ச்சியாகப் பேணுவது.**



முஸ்லிம்களுடனான உறவும் புரிதலும் அவர்களுக்கு முக்கியமானது. அதே போல் இலங்கை வாழ் ஒட்டுமொத்த முஸ்லிம்களைப் பொறுத்தவரை முஸ்லிம்களின் குடிப்பரம்பல், வாழ்நிலை இருப்புகளின் அடிப்படையில் தென்னிலங்கையில் சிங்கள மக்களுடனும், மலையக தமிழ் மக்களுடனும், வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுடனும் உறவையும், புரிதலையும் வளர்க்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பலமும் நிலப் பலமும் கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கிழக்கு மாகாணத்தையே முஸ்லிம்கள் தமது அரசியல் கோரிக்கைக்கான பிராந்தியமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது தமிழ்த் தரப்பிலிருந்து கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயமாக உள்ளது. கடந்த காலத்தின் சரி, பிழைகள் பேசப்படல் வேண்டும். தவறுகள் திருத்தப்படுவதுடன், முரண்பாடுகளை நீக்கிக் கொள்வதற்கான வழிமுறைகள் கண்டறியப்படல் வேண்டும். ஆழமான மனக்கசப்புகள் ஆற்றப்படுவதற்கான மருத்துவம் தேவை. அது இன்று செய்யப்பட வேண்டிய பணி என்பதையும், இனியும் காலம் கடத்த முடியாதவை என்பதை இன்றைய இலங்கையின் அரசியல் சூழல் நமக்கு முன் உணர்த்துகிறது.

ஆண்டாண்டு காலமாக வடக்கு-கிழக்கு தாயகத்தில் தமிழ், முஸ்லிம் மக்களிடையேயான உறவு மத, கலாசார, பண்பாட்டு, பொருளாதார அடையாளங்களையும் தாண்டி (சில குறைபாடுகளுடன், முரண்களுடன்) சுமுகமாக இருந்து வந்திருக்கிறது. இந்த உறவில் வெடிப்பும், காயங்களும் முரண்களும் அதிகரிக்க 'அரசியல் நிலை' பிரதான பங்காற்றியிருக்கிறது. அரசியல் நிலை மாற்றங்கள் விடயங்களை தீர்மானிக்கிறது. மிகத் தெளிவாகப் பார்த்தால் 1980க்குப் பின் தமிழ், முஸ்லிம் உறவு நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை அவ்வவ் காலகட்ட அரசியல் நிகழ்வுகளுடன், போக்குகளுடன் துல்லியமாக இனம்காண முடியும். இந்த மாற்றங்களும், போக்குகளும் இரு இனங்களுக்குள்ளும் இருந்த அனைவரையும் ஏதோ ஒரு விதத்தில் பாதித்து இருக்கிறது. தேசியவாதிகளை, அரசியல் செயற்பாட்டாளர்களை, முற்போக்காளர்களை, கல்விப்பிரிவினரை, தொழிலாளர்களை, சாதாரண மக்களை என இந்தப் பாதிப்பு ஆழமாகத் தாக்கியுள்ளது. எழுத்துக்களில், படைப்புகளில், அரசியல் முன்மொழிவுகளில், அரசியல் தீர்மானங்களில், மன

**அரசியல் நிலை மாற்றங்கள் விடயங்களை தீர்மானிக்கிறது. மிகத் தெளிவாகப் பார்த்தால் 1980க்குப் பின் தமிழ், முஸ்லிம் உறவு நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை அவ்வவ் காலகட்ட அரசியல் நிகழ்வுகளுடன், போக்குகளுடன் துல்லியமாக இனம்காண முடியும்.**

வெளிப்பாடுகளில் இதன் தாக்கங்களை தெளிவாகக் காண முடியும்.

தமிழ் - முஸ்லிம்களுக்கு இடையேயான பகை நிலைக்கு பிரதான காரணம் இரு தேசிய இனங்களின் அரசியல் நிலைப்பாடுகளையும் ஒவ்வொரு இனமும் எதிரிடையாக பார்க்கும் தன்மையைக் கொண்டிருத்தலே ஆகும். அத்துடன் இனத்துவ மேலாதிக்க சிந்தனையும் இதில் உள்ளடங்கும். ஒரு இனத்தின் தனித்துவத்தினையும், அடையாளங்களையும் அவ் இனத்தின் அரசியல் நிலைப்பாடுகளையும் (ஏற்றுக் கொள்ளுதல் என்று சொல்ல முடியாது) மதிக்கத் தயார் இல்லை எனும்போது உறவு தொடர்வதற்கான சூழல் மூடப்படுவதுடன் உரையாடல்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் குறைகிறது. திறந்து சொல்லப்பட வேண்டுமானால் இரு தேசிய இனங்களும் தமக்கான அரசியல் நிலைப்பாட்டை கொண்டிருக்க உரித்துடையவர்களாவர். அவர்கள் தமக்கு வெளியேயான இனத்தை மேலாதிக்கம் செய்யவோ, அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தவோ, அல்லது அவர்களது அடையாளங்களை தமக்குள் கரைக்கவோ முடியாது!. ஒடுக்கப்படுகின்ற மக்கள் என்கிற வகையில் அவர்கள் ஒன்றிணையவேண்டிய வாசல் மூடப்பட மேற்சொன்ன விடயங்கள் கைவிடப்படாதது இதுவரையான பலவீனமான, தடையான கூறுகளாக உள்ளது.



தமிழ், முஸ்லிம் உறவு தொடர்பில் இந்த விடயத்தில் அக்கறையுள்ள இரு தரப்பினரிடையேயும் உரையாடல்கள், பேச்சுக்கள், எழுத்துக்கள், கருத்துப் பகிர்வுகள் செய்யப்படல் வேண்டும். இதற்கு கருத்துநிலை மாற்றங்களுடன், பார்வை மாற்றங்களும் அவசியமாகும். இக்கட்டுரை அதற்குரிய ஒரு சிறு முற்குறிப்பே. அரசியல் கருத்தாளர்களுக்கு சமூகப்பிரக்ஞை பற்றிய பார்வை இன்றியமையாதது என்ற அடிப்படை இந்த விடயத்தில் இன்று முக்கியமாகி உள்ளது. ◘

# கருத்துக்கள்



## 'சமூக நோக்கு' –
## காத்திரமான சமூக அரசியல் இதழ்

'இலங்கை முஸ்லிம்களின் நிலை தொடர்பான பல்வேறு கருத்துகளை உள்ளடக்கிய சமூக, அரசியல் இதழ்' என்ற முகப்பு வாசகத்துடன், உலகப் புகழ்பெற்ற பலஸ்தீனக் கவிஞர் மஹ்மூத் தர்வீஷின் கவிதை வரிகளைத் தாங்கி அட்டைப் படம் அமைந்துள்ளது. 'பேஸ்புக்'கில் இதன் உள்ளடக்கங்களை ஆங்காங்கே பார்க்கக் கிடைத்தது. அப்போதே இதனை எப்படியாவது படிக்க வேண்டுமென்ற ஆர்வம் கிளர்ந்தது. எதிர்பாராத ஒரு பொழுதில் இந்த இதழின் பிரதியொன்று கைகளை வந்தடைந்தது மகிழ்ச்சிக்குரியது.

'இச்சஞ்சிகை பல சகோதரர்களினதும் நண்பர்களினதும் ஒத்துழைப்புடன்தான் தொடர்ச்சியாக வெளிவருவது சாத்தியமானது. ஒரு இதழுக்கான அண்ணளவான நிதிச் செலவாக, £1200 செலவிடப்படுகிறது. தனிப்பட்ட உதவி, சந்தா, விளம்பரம் என உங்களினது முழு ஆதரவினை தாருங்கள். புலம்பெயர் நாடுகளில் நீங்கள் வாழும் பிரதேசத்தில் இதழை மக்களிடம் கொண்டு செல்லுங்கள். நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். இந்தக் கூட்டு வேலையில் உங்கள் பொறுப்பை முன்வந்து எடுத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.' என ஆசிரியர் குழு முதல் பக்கத்திலேயே வேண்டியுள்ளது.

ஒரு இதழுக்கு அண்ணளவாக இலங்கை ரூபாயில் இரண்டரை இலட்சம் என்பது மிகப் பாரிய தொகைதான். இதழியல் பணியின் வலிகளை உணர்ந்தவர்களுக்கு இதன் சுமை நன்கு தெரியும். அச்சாக்க செலவு மட்டுமல்ல, மொத்த தயாரிப்பு வேண்டி நிற்கும் முயற்சியும் கடின உழைப்பும் இதழில் தெரிகிறது.

முதல் இதழில் ஆசிரியர் குழு எழுதிய தலையங்கத்திலிருந்து...

'எமது இந்த முயற்சி நாளாந்த செய்திகளை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதை இலக்காகக் கொண்டதல்ல. ஒடுக்குவோருக்கும் ஒடுக்கப்படுவோருக்குமிடையிலான அடிப்படை வேறுபாட்டினை தெளிவு படுத்துவதும், ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளையும் குரலினையும் 'யாவரும் கேளீர்' என எத்தி வைப்பதுடன், அடக்கு முறையை எதிர்கொள்வதற்கான கருத்துருவாக்கத்தினை பலப்படுத்துவது மேயாகும்.'

'எமது முதலாவது இதழில் இலங்கை முஸ்லிம்கள் சமகாலத்தில் எதிர்கொள்கின்ற சில விடயங்களை பல எழுத்தாளர்கள், கருத்தாளர்களின் எழுத்துகளின் வழியாக நேரடியாகவும், ஒப்பீடு செய்தும் உங்களிடம் கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம். இதிலுள்ள அனைத்து கருத்துகளிலும் நீங்கள் உடன்பாடு கொள்ள வேண்டும் என நாங்கள் எந்த எதிர்பார்ப்பினையும் கொண்டவர்களல்ல. உங்களுக்குள் இருக்கும் கருத்தினையும் உணர்வினையும் எழுதுமாறு கேட்கிறோம். சமூக நன்மை கருதி இந்த முயற்சி தொடர ஆதரவு தருமாறும் வேண்டுகிறோம்.'

புலம்பெயர் சமூகத்திலிருந்து வெளிவந்த எண்ணற்ற சஞ்சிகைகளையும் இதழ்களையும் 1990களில் அதிகம் படிக்கக் கிடைத்தது. அவற்றை வெளியிட்டதெல்லாம் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களே. அவற்றில் அரசியல் நேர்மையும் பரந்த பார்வையுமுடையோர், தேசிய இனப் பிரச்சினையின் விரிந்த பன்முகப் பரிமாணம் குறித்த பதிவுகளை எழுதி வந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களுள் பெரும்பாலானோர் முன்னாள் போராளிகள் என்பது இன்னொரு முக்கிய அம்சம். இப்போது புகலிடத்திலிருந்து வரும் இதழ்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விட்டது. இந்த நிலையில், சட்டென்று எதிர்பாராத விதமாக முழுக்க முழுக்க முஸ்லிம்களால் நடத்தப்படும் புலம்பெயர் சஞ்சிகையொன்றைக் காணக் கிடைத்தது மகிழ்ச்சியைத் தருகிறது.




பிறந்த நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து எங்கோ தொலைதூரத்தில், தாயகத்திலிருந்து விடுபட முடியாத கழிவிரக்கத்துடன் (Nostalgia) வாழும் இந்த நண்பர்கள், இலங்கையில் அதிதீவிர வடிவமெடுத்திருக்கும் சிங்கள பௌத்த இன-மத பாசிஸ இயக்கத்தின் ஆழ்நிலை அரசியலை நன்கு புரிந்து கொண்டதன் வெளிப்பாடே இந்த இதழின் உருவாக்கத்துக்கு உடனடித் தூண்டுதலாக அமைந்திருக்கக் கூடும்.

அச்சாக்கமும் தயாரிப்பும் நேர்த்தியாக அமைந்துள்ளது. உள்ளடக்கம் மிகக் கனதியாக உள்ளது. புகலிட வாழ்வு பற்றிய பதிவுகள் இதற்கு அணிசேர்க்கின்றன. தெரிந்த முகங்களின், தொடர் செயற்பாட்டாளர்களின் ஆக்கங்கள் பல உள்ளன. ஆனால், பக்க வடிவமைப்பில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம். காலத்திற்குப் பொருத்தமான காத்திரமான வரவு.

**சிராஜ் மஸ்ஹூர்**
ஆசிரியர் - மீள்பார்வை
இலங்கை

## அகநிலை அரசியல் கலாச்சாரம்

'இலங்கையில் உக்கிரமடைந்துள்ள முஸ்லிம் விரோத சக்திகளின் செயற்பாடுகளுக்கு எதிராக அறிக்கை விடுவதுடன் முஸ்லிம் அரசியல்வாதிகள் குறுகிப்போயுள்ளார்கள். இனி அறிக்கைகளை விட்டுப் பயனில்லை மக்களிடம் அரசியல் அறிவை ஊட்ட வேண்டும்' என வலியுறுத்தி சமூக நோக்கு ஆசிரியர் எழுதியிருந்தார். அவரது கருத்துக்கள் என்னை வெகுவாக பாதித்திருந்தது. குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸின் வருகைக்குப்பின்னர் மக்கள் அரசியல் மயப்பட்டனர். உண்மையில் ஆரோக்கியமான ஒரு சமூகத்தில், அரசியல் மக்கள் அரசியல் மயப்படுத்தப்படல் வேண்டும். இந்த முயற்சியை மு.கா. தொடர்ந்து எடுக்கவில்லை. இதற்கான பல விமர்சனங்களை அடுக்கிக்கொண்டு செல்ல முடியும். இந்த இடத்தில் இது பொருத்தமற்றது. (அவரது கருத்தினை படித்த பின்னர் தேடிப் பெற்ற சில விடயங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.)

அரசியல் கலாசாரம் எனும் பகுதி மிகப்பரந்ததும் பல கற்கைகளை உள்ளடக்கியதுமான துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. சுருங்கச் சொல்வதானால் அரசியல் கலாசாரமானது அறிகைச் சார்ந்து (அரசியல் முறைமை, உள்ளீடு, வெளியீடு), மனவெளிச்சி சார்ந்து (உணர்வுகள், அனுபவம், வகிபங்கு, கட்சி ஆதரவு, எதிர்), மதிப்பீட்டு சார்ந்து (தற்போதைய அரசியல் பற்றிய மதிப்பீடு, அரசியல் முறைக்குள் மக்களின் வகிபாகம்) மூன்று வேறுபட்ட திசைமுகங்களை கொண்டுள்ளது.

அரசியல் கலாசாரத்தினை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர். (Almond, Verba)

அ.குறுகிய அரசியல் கலாசாரம் - அரசியல் முறைமை மற்றும் அதன் செயற்பாடுகள் குறித்து மிகச் சிறிய அளவிலான விளக்கத்தைக் கொண்டிருப்பர். அரசியல் செயல்முறையில் ஆழமான ஈடுபாடு காட்டுவதுமில்லை. அரசியல் தமது வாழ்க்கையைப் பாதிக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருப்பதுமில்லை.

ஆ. அகநிலை அரசியல் கலாசாரம் -மக்களுக்கு விளக்கம் இருந்த போதும் அவர்கள் அரசியலில் ஆர்வமே ஈடுபாடோ காட்டுவதில்லை. ஆட்சியாளர்களின் சகல விதிமுறைகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் தாம் கட்டுப்பட வேண்டியது தமது கடமை என மக்கள் கருதுவர்.

இ. பங்குபற்றும் அரசியல் கலாசாரம் - மக்கள் அரசியல் முறைமை, அதன் செயற்பாடு குறித்த ஆழ்ந்த விழிப்புணர்வுவைக் கொண்டுள்ளனர். அத்துடன் அரசியல் செயல்முறையில் மக்கள் மிக ஆர்வத்துடன் பங்குபற்றுவர்.

மேற்குறிப்பிட்ட அ, ஆ பகுதிகளின் இயல்பையுடையவர்களே இலங்கையில் பெரும்பான்மையாக காணப்படுகின்றனர். குறிப்பாக முஸ்லிம்கள், பகுதி அ இல் பற்றுறுதியாகவுள்ளனர். வெற்று கோசங்கள், நிலைத்திருக்காத அபிவிருத்திகள், நலன்கள் போன்றவற்றுக்குப் பின்னால் செல்கின்ற நிலையே நீள்கிறது. இதிலிருந்து விடுபடுவது மிக கஸ்டமானது. பல இழப்புகளுக்குப் பின்னர் நாம் விட்ட பிழைகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னர் விழிப்படைவதே சிறந்தது.

இவ்விழிப்புணர்வு இலங்கை முஸ்லிம்களிடம் ஏற்படாமைக்குப் பிரதான காரணி அகநிலை அரசியல் கலாசாரம் (மக்களுக்கு விளக்கம் இருந்தபோதும் அவர்கள் அரசியலில் ஆர்வமே ஈடுபாடோ காட்டுவதில்லை) ஆகும். குறிப்பாக முஸ்லிம் புலமையாளர்கள் சோர்வடைந்திருப்பதாகும். முஸ்லிம்கள் மீது இனவாதம் தலைதூக்கி இரண்டு வருடங்களாகவுள்ள இன்றைய நிலையில் இதுதொடர்பான சீரியஸான கலந்துரையாடல் புலமையாளர்களிடம் இடம்பெறவில்லை. அவ்வாறு இடம் பெற்றிருந்தாலும் அது உதிரி உதிரியாகவே இடம்பெற்றுள்ளது.

எனவே குறை அரசியல் கலாசாரத்திலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு முதலில் புலமையாளர்களிடம் புதிய வழிமுறைகள், கருவிகள் உருவாக்கப்படல் வேண்டும். எமது கவலை என்னவென்றால் பிரச்சினைகள் எழுகின்ற வேளைகளில் எல்லாம் பொறுமை காக்குமாறு அழைப்பு விடுகின்றவர்களெல்லாம் அதுதான் இலங்கை முஸ்லிம்களின் இறுதித் தீர்வு என்றும் தங்களது மனங்களில் பதிய வைத்திருப்பதாகும்.

இந்நிலை மாறவேண்டும். தேசிய சூறாவை பலப்படுத்த வேண்டும். ஆனால் இலங்கையில் உருவாகும் இயக்கங்களின் அதே சாயலில்தான் தேசிய சூறா சபையும் நகர்கின்றது என்ற விமர்சனங்களும் எழவே செய்துள்ளது. பரந்த திட்டமிடல் அவசியமானது. குறிப்பாக ஐரோப்பிய முஸ்லிம் பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை கற்றுக்கொள்ளவும் வேண்டும். அதேபோன்று முஸ்லிம்களின் நலனுக்கு முக்கியத்துவம் வழங்கும் அதேசமயம் ஏனைய இனங்களின் நலனிலும் அக்கறை கொள்ளவேண்டியதும் அவசியமாகும். ஏனெனில் இலங்கையின் அரசியல் கலாசாரம் எமக்கு காட்டும் பாடமானது அனைவருமே குறை அரசியல் கலாசாரத்தை உடையவராக இருக்கின்றார் என்பதே.

இலங்கையின் அரசியல் கலாசாரம் பற்றி உபுல் அபேரத்ன பின்வருமாறு எழுதுகிறார். "இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒன்றிணைக்கப்பட்ட அரசியல் கலாசாரம் இல்லை என்பது வெளிப்படையானது. இலங்கைச் சமூகமானது இன்று இனத்துவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பிளவுபட்டு சிதறிப்போயுள்ளது. இலங்கையில் இனத்துவப் பிளவுகளை மேலும் மேலும் தீவிரமாக்கும் இரு காரணிகள் மொழியும், சமயமுமாகும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒன்றிணைக்கப்பட்ட அரசியற் கலாசாரத்தின் மீது ஒரு சிதறிப் போன அரசியற் கலாசாரம் பரவத் தொடங்கியது என நாம் முடிவுக்கு வரலாம். இலங்கை அரசின் உருவாக்கத்துடன் இணைந்ததாக, ஒரு பரந்த இலங்கைத் தேசியம் கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டியதற்குப் பதில் குறுகிய இனத்துவ அடையாளங்கள் கட்டி எழுப்பப்பட்டன."

எனவே மேற்படி விடயங்களில் பரந்த சிந்தனையுடன் செயற்படவேண்டியது சமூகப் பொறுப்பாகும்.

**முஹம்மத் ரிழா**
சமூக ஆய்வாளர்
ஒட்டமாவடி - இலங்கை

# NOORI HALAL BUTCHERS

சுத்தமானதும், தரமானதுமான இறைச்சி, உணவு வகைகளுக்கு இன்றே நாடுங்கள் நூரி ஹலால் புச்சர்ஸ்

- சுகாதாரமான சூழல்
- துரித, நட்புடன் கூடிய சேவை
- நியாயமான விலை

FOR HYGENICAL AND QUALITY MEATS AND FOOD VARIETIES VISIT NOORI HALAL BUTCHERS

OUR SERVICES WITH......
- HYGENICAL ENVIRONMENT
- FAST AND FRIENDLY SERVICE
- REASONABLE PRICE



HMC தரச் சான்றிதழ் இறைச்சி விற்பனை

**HMC CERTIFIED MEAT & POULTRY SALE**

**Branches :**
**227 Green Lane, Ilford IG1 1XR**
**219 Ilford Lane, Ilford IG1 2RZ**

**328, HIGH STREET NORTH**
**MANOR PARK**
**LONDON, E12 6PH**
**TEL: 0208 472 1655**

# Safety Fix

## Professional Plumbing and Heating Services

OFFER!
Boiler Service & Landlord certificate
£90 only

உங்களுக்கு தேவையான காஸ் (GAS) உபகரணங்களை துரித முறையில் பொருத்துவதற்கு உத்தரவாதமுள்ள நிறுவனம் (UK)

Central heating, Boiler installation, Power flushing, Descaling, Gas safety certificate, service and maintenance all kind of plumbing.

Contact: Hameed Sahul
Tel: 07882400877 or 07506391520
Email: safetyfix@yahoo.com
Web: www.sfinstaller.co.uk
Based in London

*with compliments*

# BREEZ CONVENIENT STORE

**18 Under Cliff Road West**
**Felixtowe, IP112AW**
**Tel: 07868751204**

# Royals Removal

*Home, Office, Removals & Storage.*

*Collect Old Furniture Dumping*

**Crawley**
**07598686113**
**07519150148**




நல்ல நிலையிலுள்ள, பாவிக்கத் தகுதியான கட்டில்கள்
மற்றும் தளபாடங்களுக்கும் தொடர்புகொள்ளுங்கள்

royalsremovals@gmail.com | www.royalsremoval.co.uk

# 100% HALAL FOOD

**Sri Lankan & South Indian Cuisine**
**Restaurant & Takeaway**

*Lunch Buffet*
*6 Days a week*
*Saturday - Thursday*

# Mo's
## Original

559 Kingsbury Road,
London, NW9 9EL
Tel: 02082047667
www.mosrestaurantuk.com

*Open 7 Days a Week*
*12.00 - 12.00 Midnight*
*Friday: 2pm - 12.00 Midnight*

**Immediate Transfer | Good Exchange Rate | Reliable Distribution Worldwide | Secure Delivery | Safe Deposits | Money Exchange Service**
**Money Transfer Service**

# Mo's
## Money Transfer

Fast Secure Reliable

*We are open from 9am - 11pm*
*Seven Days a Week*
*including Bank Holidays*

Contacts: 020 8 5370 732
0781 1356 448 (Noordeen)
0785 2282 816 (Mo Zulficar)

559 Kinsbury Road
London, NW9 9EL

Email: mosmoneytransfer@hotmail.com
Web: www.mosmoneytransfer.com

We are authorized and regulated by FSA and HMRC

# GUARANTEED WAY TO GET CERTIFIED

# CCIE

## WITH
## HARITH KARIAPPER



B.Sc.Eng.,M.Eng.,CNE,MCNE,MCSE,MCDA
CCNP,CCDP,CCSP,CCVP,CCIP
Quadruple CCIE #8661 (Voice, SP, Security, R&S)

Course Duration : 12 days
Course Fee : £ 3995.00 + vat

Please visit www.winnestsystems.co.uk for pre-requisites for this course



## CCIE FOUNDATION

**CONDUCTED BY**

## RIZNI KARIAPPER

(CCIE VOICE #27911)

**WORLD'S YOUNGEST CCIE**

Course Duration : 12 days
Course Fee : £ 2745 + VAT

Please visit www.winnetsystems.co.uk for the course schedule and more information

**WinNET SYSTEMS**

*800 CCIE's and counting....*

www.linkedin.com/company/winnet

www.youtube.com/user/winnetuk